# மத்திய வணிகம்

## 1990

வர்த்தக மாணவர் மன்றம், யாழ் மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வணிகம்
# 1990

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

அ. பிறேமிலன்
பே. கிஷ்ணகுமார்
இதழாசிரியர்கள்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 2309

வர்த்தக மாணவர் மன்றம்
யாழ். மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் இருப்பிற்காய்
தம் உயிர் நீத்த
அத்தனை பேருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

Appropriate Technology Services,
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

## பிரிவு I

| | | |
|---|---|---|
| ஆசிச்செய்திகள் | O | i |
| இதயத்திலிருந்து | O | v |
| நடப்பாண்டு | O | vi |
| எமது மன்றம் | O | vii |
| முன்நோக்கில் | O | viii |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு II


இலங்கையின் தைத்தொழில் அபிவிருத்தி ○ 1

இலங்கையின் ஏற்றுமதிக் கொள்கைகளும் வருமானத் தளம்பல்களும் ○ 11

நிதிச் சந்தை ○ 16

வேலையின்மையும் இலங்கையில் அதன் போக்கும் ○ 23

அமையச் செலவு ○ 27

இலங்கையின் பங்குச்சந்தை பற்றிய ஒரு நோக்கு ○ 32

தொழில்துறைகளில் கணனி ○ 37

1977 க்கு பின் இலங்கையின் வணிக வங்கிகளின் வளர்ச்சி ○ 43

பெறுமானத்தேய்வு ○ 49

முற்றுப்பெறாத கணக்குப்பதிவுகளைக் கொண்டு முடிவுக் கணக்குகளைத் தயாரித்தல் ○ 59

நிதி அசைவுக் கூற்றும் காசு அசைவுக் கூற்றும் ○ 69

உல்லாசப் பயணத்துறை விருத்திக்கு வாய்ப்பளித்த இலங்கையின் புவியியல் அமைப்பு ○ 75

இலங்கையின் நிலக்குடியேற்ற அபிவிருத்தி ○ 78

காலவோட்டத்தில் இந்து மதம் ○ 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் உள்ளத்திலிருந்து

1920 ம் ஆண்டு முதல் முதல் வர்த்தகத் துறை ஆரம்பித்த பெருமை எமது கல்லூரியைச் சார்ந்ததாகும். அன்றிலிருந்து சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று இன்று எமது கல்லூரியில் பெரும் ஆலவிருட்சமாக வளர்ச்சியுற்று வரும் வர்த்தகத்துறையைக் கண்டு நாம் அனைவரும் பெருமிதமும் பெருமையும் கொள்வோமாக..

இவ்வாண்டு வர்த்தகமன்றத்தினர் சஞ்சிகையை வெளியிட இருப்பது வரவேற்கத் தக்கதாகும். இம் முயற்சியில் அயராது உழைத்து வரும் செயற் குழுவினருக்கும். வழிகாட்டியாய் விளங்கும் வர்த்தகமன்றப் பொறுப்பாசிரியர் திரு சு. நடராசாவுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இம் முன்மாதிரியைப் பின்பற்றி வரும் காலத்தில் ஆண்டு தோறும் இச் சஞ்சிகை வெளிவரவேண்டுமென்பது எனது பெருவிருப்பமாகும். நிறைவேற்றும் பொறுப்பு வருங்கால வர்த்தகத்துறை மாவணவர்களைச் சார்ந்ததாகும். ஆர்வமும் ஆற்றலும் துடிப்பும் உள்ள எமது இளைஞர்கள் எதையும் சாதனையாக்கும் திறம்படைந்தவர்கள் என்பது வெள்ளிடைமலை.

**என். இராசரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின் செய்தி

அன்புள்ளம் கொண்டு ஆனந்தம் பொங்க
ஆர்வமுடன் வாழ்த்துகிறேன். — அருமை மாணவரின்
அசையாத நம்பிக்கையாலும் அயராத உழைப்பினாலும்
இன்னல பலவற்றை இலகுவில் கடந்து
ஏற்றமுடன் அறிவுமணம் கமழ
சிந்தனைச் சுடர்கள் துள்ள சிறப்புகள் பலபெற்று
மத்திய வணிகமுங்கள் கரங்களில் தவழ்கிறது.
அன்பான உங்கள் ஆதரவால்
மத்திய வணிகம் மென்மேலும் சிறப்புற்று
பல முகங்கொண்டு வெளிவரவேண்டுமென
ஆனைமுகன் பாதம் பணிகின்றேன்.

சு. நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தினர், மன்றத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்ற வேளையில் அதன் நினைவுச் சுவடாக 'மத்திய வணிகம்'' எனும் சிறப்பிதழை வெளியிடுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். இக்கல்லூரி கடந்த எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்தின் நாலுதிசை மாணவர்களுக்கும் கல்விப் பணிப்பாற்றி வரும் மாட்சிமை பெற்ற ஒரு கல்வி நிலையமாகும். வர்த்தகத்துறை மாணவர்களின் சுபீட்சத்தை அறிந்து வடமாநிலத்தில் முன்முறையாக 1920 ஆம் ஆண்டில் யாழ் மத்திய கல்லூரியே வர்த்தகத்துறைக் கல்விநெறியை அறிமுகம் செய்தது. 1970 ஆம் ஆண்டில் இக்கல்லூரி அதன் பொன்விழா எடுக்கும் வேளையில் வர்த்தகத்துறைக் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் ''வர்த்தக மன்றம்'' எனும் கழகமொன்றை ஆரம்பித்தது. அன்று தொட்டு இம்மன்றம் அரிய சேவையாற்றி வருவதுடன் வர்த்தகத்துறை மாணவர்களுக்கு கல்வி ஆர்வத்தைத் தூண்டவல்ல பல கருத்தரங்குகளையும். செயலமர்வுகளையும், ஆய்வுகளையும் ஒழுங்கு செய்து வருகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு வர்த்தகத்துறை எவ்வளவு பங்களிப்பைச் செய்கின்றதென்றும், உலகில் வர்த்தகத்துறை எவ்வளவு தூரம் பரவிப் பல்கியிருக்கின்றதென்றும் மாணவரிடையே ஓர் உள்ளுணர்வை ஏற்படுத்துவதற்கு மத்திய வணிகம்'' போன்ற சஞ்சிகைகள் எம்மிடையே தோன்ற வேண்டுமென வாழ்த்தி ''மத்திய வணிகம்'' இதழ்கள் என்றும் வாடா மலர்களாக தொடர்ந்து மலர்ந்து மணம் பரப்பவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

**இ. சுந்தரலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகக் கல்வி அதிகாரியின் ஆசிச்செய்தி

இருபதாம் நூற்ருண்டில் இறுதியின், இருபதாம் ஆண்டின் பாகத்தை பதிய வைக்கிகிறது. யாழ் மத்திய கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றம்: இம் மன்றத்தின் அங்கத்தவர்கள் தமது ஆற்றலையும் திறமையையும் பெரிய அளவில் பிரகடனம் செய்கிருர்கள் வர்த்தகக் கல்வியின் விருட்சமாக விளங்கும் இம் மன்றத்திலிருந்து மலரும் மத்திய வணிகம் என்னும் இம்மலர் கல்வி மான்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்கள் மூலம் நல்லறிவுச் சுடராக விளங்குகிறது.

இம் மலர் மாணவர்களுக்கு வரப்பிரசாமாகும் நெருக்கடிகள் நிறைந்த நிலைகளிலும் வர்த்தகக் கல்விக்காக இம்மன்றம் ஆற்றிய செயற்பாடு அளப்பரிய தொன்ருகும் இம் மன்றத்தின் அங்கத்தவர்களுக்கும் ஆசிரியாகளுக்கும் அதிபர்களுக்கும் என் உளப்பூர்வமான வாழ்த்துக்கள்.

மத்திய வணிகம் மேலும் மேலும் சிறப்புற வளர்ந்துவர எனது நல்லாசிகள்

**சி. சிவராசா** யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து...

விஞ்ஞான வளர்ச்சி விண் உலகத்தில் சாதனை புரியும் காலத்தில் கண்மூடித்தனமாய். கலைகளையும். துறைகளையும் வளர்க்காது கைகட்டி நிற்கும் எம்மை எண்ணி நகையாதார் யாருளர்!

''திரைகடல் ஒடியும் திரவியம் தேடு'' என்ற வாக்குக்கேற்ப வாணிபத்தில் வளர்ந்து ஓங்கிய தமிழர் பெருமை வணிகத்துறை கல்வி வளர்ச்சியில் மழுங்கிக் கிடப்பதா! என்னமடமை!! என்னமடமை!!! ஆண்டுகள் பலவாக தவம் கிடந்து பெற்ற தாய்மொழிக் கல்வி தரம் இழந்த நிலையில் தாழ்வுற்று போவதா! சிந்தை துடிக்கிறது. சிந்தனை வெடிக்கிறது. சூழலையும் சுற்றத்தையும் குறை கூறிப் பயன் என்ன? இளம் சமுதாயம அல்லல் உற்ற வேளையிலும் கல்வியில் கொடி கட்டிப் பறந்தனர் தமிழீழ இளைஞர்கள்.

வணிகத்துறை வளர்ச்சி பல்வேறு முகங்களாய் பல்லாயிரம் பிரிவுகளாய் பரந்து வளர்கிறது. இத்துறை வளர்ச்சியைக் கண்டு மிரண்டுபோகாமல் நாமும், நம் இளைஞர் சமூகமும் கற்றல் கடலில் தத்தளிக்காமல் நல் முத்து எடுத்து உயர்நிலை அடைய உயர்வான நூல்கள் பல உதித்திட வேண்டும் எம்மண்ணில்; என்னும் பேரவாவின் ஒரு சிறு மின் மினி வெளிப்பாடே எம் மன்றத்தின் மத்திய வணிகம்.

ஈழத்தமிழகத்தின் மத்தியில்; கல்விப் பெரும் கூடமாம் மத்திய கல்லூரியின் கல்வி வளர்ச்சியின் ஒரு சிறு அரும்பே மத்தியம் பூத்த '' மத்திய வணிகம் '' இம் மலரை மத்தியாக வைத்து பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்கி வர்த்தகக் கல்வி மலர்ச்சோலையில் அறிவு மணம் கமழவேண்டும் என அன்பாக வேண்டுகிறோம்.

இம்மலரை ஒருங்கிணைக்க விரிவுரையாளர்கள் ஈர்ந்த இதழ்களும், மாணவர்கள் அளித்த இதழ்களும் இணைந்துள்ளன. ஒவ்வொரு இதழும் வர்த்தகத்துறையின் ஒவ்வொரு பகுதியை நுணுக்கமாகவும், சிறப்பாகவும், அழகாகவும் பிரதிபலிக்கின்றன. இம்மலர் என்னும் வாடா மலராக விளங்குவதுடன் பல்வேறு கொத்துக்களாக பூத்து குலுங்கி சோலையாக வேண்டும். இம் மலர்ச் சோலையில் எல்லோரும் நுழைந்து இன்பம் சுவைத்து, சிந்தனைச் சுடர் விளங்க. இளந் தலைமுறையினர் தலைநிமிர்ந்து வாழ வழி காட்டவேண்டும். இதற்கு வளமுள்ளவர்கள் யாபேரும் வழிகாட்டுவீர்கள்! வழிகாட்டுவீர்கள்!

**இதழாசிரியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நடப்பாண்டு செயற்குழு

## 1989 / 90

| | |
|---|---|
| காப்பாளர். | திரு. நா. இராசரத்தினம். |
| துணைக்காப்பாளர்கள்:- | திரு.சு. நடராஜா.<br>திரு க. கந்தசாமி.<br>செல்வி செல்லையா. |
| பொறுப்பாசிரியர் ;- | திரு.சு. நடராஜா. |
| தலைவர் :- | செல்வன்.பே. கிஷ்ணகுமார். |
| உபதலைவர் :- | செல்வன்.கு. செந்தில்குமார். |
| செயலாளர் :- | செல்வன்.சி. கல்யாணசுந்தர். |
| உபசெயலாளர் :- | செல்வன்.அ. பிறேமிலன். |
| பொருளாளர் :- | செல்வன்.ந. சுதாகர். |
| செயற்குழுஉறுப்பினர்கள் ;- | செல்வன். ச. ரதீஸ்.<br>செல்வன். சு. நிமல்ராஜ்.<br>செல்வன். ரீ. சிறிதரன்,<br>செல்வன். கு. சேகர்.<br>செல்வன். உ. சதீஸ்குமார்.<br>செல்வன். எஸ். சிறிதரன்.<br>செல்வன். எஸ். ராஜ்குமார்.<br>செல்வன். யோ. ஜிஜேந்திரன். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[இடது — வலது] இருப்பவர்கள்

செல்வி P. செல்லையா, திரு. S. நடராஜா, திரு. N. இராசரட்ணம், (அதிபர்) செல்வன் P. கிருஷ்ணகுமார், திரு. K. கந்தசாமி (உப அதிபர்), செல்வன் S. கல்யாணசுந்தர்

[இடது — வலது] நிற்பவர்கள்

செல்வன் A. பிறேமிளன், செல்வன் T. சிறிதரன், செல்வன் S. ராஜ்குமார், செல்வன் T. K. சேகர் செல்வன் N. சுதாகர், செல்வன் S. ரதீஸ், செல்வன் K. செந்தில்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மன்றம்

○○

சு. கல்யாணசுந்தர்
*செயலர்.*

○○

எமது வர்த்தக மாணவர் மன்றம் 1970ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எமது செயற் குழு 24.05.1989 அன்று மன்றத்தைபொறுப் பேற்றது அன்று தவழமுடியாது இருந்த மன்றக் குழந்தையைப் பேணி பாதுத்து சிறப் படையச் செய்யும் பணியை பெரும் பொறுப் பாக ஏற்றோம்.

செயற்குழுவின் ஒத்துழைப்பும் கூட்டுப் பொறுப்பும் சபையின் ஆதரவும், பொறுப் பாசிரியரின் அரவணைப்பும், அதிபரின் அன்பு வழிகாட்டலும் மன்றத்தை துள்ளி நடை போடச்செய்தது.

இவ்வாண்டில் பத்து செயற்குழு கூட் டங்கள் நடைபெற்றன. ஆக்க பூர்வமான பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. மாணவ மணிகள் ஒளிவீசக் கூடிய வகையில் கருத்தரங்கு. களாகவும், விவாத மேடைகளா கவும் பலவற்றை நடத்தியது. எழுத்தாற் றல், சிந்தனையோட்டம், பேச்சு துடிப்பு என் பவற்றை வெளிக்கொணருவதற்காக கட்டு ரை, கவிதை புனைதல் என்பவற்றுக்கு ஊக்கம் கொடுத்ததன் வெளிப்பாடே...... இம் மலர் ஆகும்.

எமது மன்றம் வர்த்தக கல்வி வளமாக வளர்ச்சியுற வர்த்தக நூல்நிலையத்தை ஆரம் பித்தது. இதற்கு கல்வி மான்களும், கல்வி விற்பனர்களும் தங்கள் அன்பான ஆதரவாக பல நூல்களைத் தந்துதவினர்கள் மேன்மே லும் உதவுவார்கள். எமது மன்ற வளர்ச் சிக்கு மனமுவந்து ஆதரவளிக்கும் அதிபர், பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள், கல்விமான் கள், மாணவர்கள் மேன்மேலும் வழங்கும் ஆதரவு வெள்ளத்தில் மற்றும் செழிப்புறும் என எதிர்பாக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன் நோக்கில்...

ஊஸ். சேகர்

1920ம் ஆண்டு அதிபராயிருந்த அருட் சகோதரர் புள்ளோவினல் யாழ் மத்தியகல் லூரியில் வர்த்தகப்பகுதி ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தக பாடங்களுக்கு பொறுப்பாக திரு கே. நவரத்தினம் அவர்கள் கடமையாற்றி னர். ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் வர்த்தக பாடங்கள் போதிக்கப்பட்டன மாணவர்கள் " இலண்டன் சேம்பர் ஒவ் கொமஸ் " (London Champer of Commerce பரீட் சைக்கு தோற்றினர்கள். இலங்கையில் இப் பரீட்சை நிறுத்தப்பட்டதும் மாணவர்கள் சிலோன் சீனியர் ஸ்கூல் சேட்டிவிக்கற் (Ceylon Senior School Cirtificates) பரீட் சைக்கு தேற்றினர்கள்.

இலங்கையில் கல்விப் பொதுசாதாரண பரீட்சை நடைமுறைக்கு வந்ததும் அப் பரீட் சைக்கும் மாண்வர்கள் தோற்றினர்கள். மத் திய கல்லூரியின் பழைய மாணவர் திரு.K. கந்தசாமி 1956ம் ஆண்டு வர்த்தக பகுதி உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 58ம் ஆண்டு திரு. K. நவரட்ணம் அவர்கள் இளைப்பாறியதும் திரு. K. கந்தசாமியும் திரு. S.D ஜெயசிங்கமும் வர்த்தக பகுதி ஆசிரியராக கடமை ஆற்றினர். 1960ம் ஆண்டு திரு.S D ஜெயசிங்கம் தொழில்நுட்ப கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார் பின்னர் திரு.K. கந்தசாமி வர்த்தக வகுப்புக்களுக்கு பொறுப்பாசிரிய ராகவும் அவருக்கு உதவியாக திரு. E.T· இராசரத்தினம், திரு N.S இரத்தினசிங்கம். திரு S.F அல்போன்ஸ் ஆகியோரும் சேர்ந்து வர்த்தக பாடங்களை கற்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964ம் ஆண்டு ஆசிரியர் திரு K. கந்தசாமி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விசேட வர்த்தக பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டார், 66ம் ஆண்டு பயிற்சியை முடித்து கொண்டுவந்த திரு கந்தசாமி மத்திய கல்லூரியின் வர்த்தக பகுதி ஆசிரியராக கடமை யேற்றார். இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் திரு N. பாலசிங்கம் வர்த்தக ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 68ம் ஆண்டு திரு C.O.V.K முதலியார் வர்த்தக ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 69ம் ஆண்டு திரு முதலியார் மாற்றல் ஆகி சென்றதும் திரு. R. லங்காதுரை (B.Com cey) அவ்விடத்துக்கு நியமிக்கப்பட்டார். 69ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நடைபெற்ற ஜி சி. A/L பரீட்சைக்கு யாழ் மத்திய கல்லூரியில் இருந்து முதன் முதலாக வர்த்கக பாடத்துக்கு மாணவர் தோற்றினார்கள். இவர்களில் இருவர் யூனியர் யூனிவ சிட்டிக்கு (Junior Univer City) தெரிவு செய்யப்பட்டார்கள் பின்பு இல ங்கை கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றார்கள்.

திரு K கந்தசாமியின் முயற்சியால் 69ம் ஆண்டு வர்த்தக மாணவர் மன்றம் அங்குராப்பணம் செய்யப்பட்டது. அதிபர் திரு. சபாலிங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார் திரு. கந்தசாமி உப போஸகராக நியமிக்கப்பட்டார், இவரது விடாமுயற்சி யாலும் ஊககத்தாலும் மன்றம சிறப்புற நடைபெற்றது. இதற்கு எடுத்துக்காட்டாக 70ம் ஆண்டு ஐப்பசி மாதம வர்த்தக கல்லூரியின் 50ம் ஆண்டு நிறைவு விழாவை பொன் விழாவாக கொண்டாடினார்கள். இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக கலா நிதி. S.L.ப சிவபாவும சிறப்பு விருந்தினராக C.A.M கொக்குபல, திரு. V. சங்கர லிங்கம. K.ட தங்கராஜா அவர்களும் கலந்து கொண்டனர். இவ் விழாவில் வர்த்தக துறை ஆரம்ப கர்த்தாவும ஆசிரியரும ஆன கலைப்புலவர் திரு. K. நவரட்ணம அவர் களின் திரு உருவ படம் திரை நீக்கம் செய்யப்பட்டது. இவ் விழாவை ஒட்டி பல போட்டிகள் நடததப்பட்டு பல பரிசில்கள் வழங்கப்பட்டன பொன விழா மலரும் வெளி யீடு செய்யப்பட்டது. 1971ம் ஆண்டு செல்வி P. செல்லையா உயர் வணிக தராதர பயிற்சி வர்த்தக பகுதி ஆசிரியராக நியமிக்கப் பட்டார்.

72ம் ஆண்டில் திரு. கிருபானந்தன் (B. Com) திரு. திலகரட்ணம் (B. Com cey) திரு. நாகராசா(B. Com cey) ஆகியோர் வர்த்தக பகுதி ஆசிரியராக நியமிக்கப்பட்ட னர். 1975ம் ஆண்டு பாடசாலை வங்கி வர்த்தக பகுதியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பொறுப்பாளராக திரு. V.K பாலசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டார். அவர் இளைப்பா றியதும் செல்வி. P. செல்லையா பொறுப்பாளராக இருந்து வருகின்றார். 1980ம் ஆண்டு திரு. N. சாமபசிவம் (B. Com) வர்த்தக பகுதி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 84ம் ஆண்டு திரு. கந்தசாமி உப அதிபர்களில் ஒருவராக நியடுக்கப்பட்டார்.

1988ம் ஆண்டு திரு. S. நடராஜா (B.A, B. Com. Hons (Cey) வர்த்தக பகுதி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இக்கால பகுதியில் இவர் வர்த்தக மாணவ மன்ற பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். இதன் பின் வர்த்தக மாணவ மன்றம் தனக் கென தனியான யாப்பினையும், ஒழுங்கமைப்புக்களையும் ஏற்படுத்தி கொண்டது. இதனை தொடர்ந்து மன்றம் தனியான நூல் நிலையத்தை ஏற்படுத்தியது. அதற்கு வேண்டிய புத்தகங்களை கல்விமான்களிடம் இருந்து பெற்றுகொண்டது.

மாணவர்களின் அயராத உழைப்பாலும், செயல்பாட்டாலும் மன்றம் பல்வேறு முகங்க ளாக வளர்ச்சி அடைந்தது. இவ் வளர்ச்சியின் வெளிப்பாடே இவ் மன்றத்தால் வெளி யிடப்படும் முதலாவது சஞ்சிகை ஆகும்.

வாழ்க! ஓங்கி, வளர்க!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையின் புதுப்பரிமாணத்திற்கு அடித்தளமான கட்டுரைகளை வழங்கியோருக்கும், ஆசிச்செய்திகளை வழங்கியோருக்கும்

ஊக்கமும் ஆக்கமும் வழங்கிய எங்கள் அதிபருக்கும், பொறுப்பாசிரியருக்கும்

பல்வேறு வழிகளிலும் எம்முடன் ஒத்துழைத்த என். கே. ரகுநாதன் அவர்கட்கும் மயிலங்கூடலூர் பி நடராசன் அவர்கட்கும் திரு. ப. ரகுநாதன் அவர்கட்கும்

சஞ்சிகை உருவாக்கிய புதிய சித்திரா பதிப்பகத்தினர்க்கும்.
சஞ்சிகையை வெளியிடப் பக்கபலமாக நிதியினைப் பங்களிப்புச் செய்த விளம்பரதாரர்க்கும்

மற்றும் எம்முடன் ஒத்துழைத்த ஒவ்வொருவர்க்கும்.

## எமது நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின்
# கைத்தொழில் அபிவிருத்தி

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

**ஏ**றக்குறைய கடந்த 3 தசாப்தங்களாகத் திட்டமிட்ட வகையில் இலங்கையில் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு பலதரப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கைத்தொழிற் கொள்கை, கைத்தொழில் திட்டமிடுதல் என்பவற்றின் மூலம் ஏற்பட்டுள்ள நடைமுறை ரீதியானபயன்கள் மிகவும் வருந்தத்தக்கவையென்றே கூற வேண்டும். இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியின்மைக்குப் பேரினப் பொருளியற் கட்டுப்பாடுகள் என்ற வகையில் பொருளாதாரத்தின் இரட்டை அமைப்பு, முதல் விளைவுப் பொருட்களின் விலைகளிலான தொடர்ச்சியான வீழ்ச்சி, ஏற்றுமதிகளில் தங்கியிருக்கும் பலவீன நிலை, கூரிய சென்மதி நிலுவை நெருக்கடி, வேலையில்லாப் பிரச்சினை எனப் பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்ட போதும் இலங்கையின் பொருளாதார அமைப்பு உருவாக்கப்பட்ட செய்முறையே அதற்குப் பெருமளவு பொறுப்பாக இருந்தது எனக் கூறவேண்டும்.

1931ற்கு முன்பு இலங்கையின் குடியேற்ற நாட்டரசாங்கம் அபிவிருத்தியைப் பொறுத்துக் கையாண்ட கொள்கை நகரப் பொருளாதாரத்திற்குப் பயன்படக் கூடிய வகையில் நாட்டின் முதல் விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதை இலகுபடுத்தக் கூடியதாகப் போக்குவரத்துப் போன்ற அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுப்பதேயாகும். இவை நாட்டின் நிர்வாகத்தைச் செவ்வனே கொண்டுநடாத்துவதற்கு உதவுமெனக் கருதப்பட்டது. இந்நேரத்தில் இலங்கையின் கைத்தொழில் நிலை எவ்வாறு இருந்திருக்குமென்பதை அறிவதற்குக் குடியேற்ற நாட்டுக் கைத்தொழில் வர்த்தகக் கொள்கையைப் பார்த்தல் போதுமானது. கனர் மிர்டால் (Gunnar Myrdal)என்ற ஆசிரியர் இதனைத் தமது நூலொன்

பேராசிரியர் **வி. நித்தியானந்தன்**
**தலைவர்,** பொருளியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றில் தெளிவுபடுத்துகிருர். தலைமை நாடொன்று (தன்மீது) தங்கியிருக்கும் நாட்டைத் தனது கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையாகப் பயன்படுத்துவதில் அக்கறை கொண்டிருந்தது. ஒரு நாடு தன் அரசியல் வளர்ச்சி இன்னெரு நாட்டின் சுதேசிய கைத்தொழில்கள் வளர்வதைத் தடை செய்ய முற்பட்டிருந்தால் இதுவே அதன்வர்த்தகக் கொள்கையாக இருந்தது. இவ்வாறு சுதேசிய கைத்தொழில்களின் வளர்ச்சியைப் பல தடவை அது நடைமுறையில் தடுக்கவும் முற்பட்டது. எவ்வாருயினும் இத்தகைய நடவடிக்கைகள் அவசியமில்லையென்றே கூறலாம். ஏனெனில் இறக்குமதிக்கு எதிரான பாதுகாப்புத் தீர்வைகளைக் குடியேற்ற நாடு விதிப்பதற்கு அனுமதி அளிக்கப்படாத காரணத்திஞல் இவை இல்லாத நிலையில் உள்நாட்டுக் கைத்தொழிற் பொருட்கள் தாய்நாட்டின் பொருட்களுடன் எந்த வகையிலும் போட்டியிட முடியவில்லை.

எனவே இதிலிருந்து இலங்கையிலும் பிரித்தானிய அரசாங்கம் நேரடியாகக் கைத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்க மாட்டாது என்பது தெளிவு. இலங்கையைத் தனது ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்குமுரிய ஒருசந்தையாக வைத்திருப்பதிலேயே அது கூடிய அளவுக்கு அக்கறை கொண்டிருந்தது.

931இல் டொனமூர் திட்டத்தின் கீழ் இலங்கை ஓரளவான அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டதும் நாடு தனது பொருளாதார அலுவல்களில் முன்னையதை விடச் சிறிது கூடிய அக்கறை எடுக்கக் கூடியதாக இருந்த போதும், இக்காலப் பகுதியில் ஏற்பட்ட பெரு மந்தம் அத்தகைய முயற்சிகளினுல் எதுவித பயனும் கிடைக்காமற் செய்துவிட்டது. எனினும் இது ஒரு விடயத்தை வலியுறுத்த உதவியது. அதாவது இலங்கை தனியே பெருந்தோட்ட ஏற்றுமதிகளில் மாத்திரம் தங்கியிருத்தல் அதன் பொருளாதார அமைப்பைப் பெரிதும் பலவீனப்படுத்தியது என்பதேயாகும். 1934 இல் இலங்கை வங்கிக் குழு என அழைக்கப்பட்ட பொக்கலுவெல ஆணைக்குழு அரசாங்கம் கைத்தொழில் அபிவிருத்தியுடனும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டது. இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் சாதாரண இறக்குமதிகள் தடைப்பட்ட போது அரசாங்கம் இலங்கையில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படக் கூடிய சில அத்தியாவசிய கைத்தொழில் முன்னேடித்திட்டங்களைச் செயற்படுத்த முற்பட்டது. ஒட்டுப் பலகைத் தொழிற்சாலை, தோல் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை என்பன இவற்றுட் சிலவாகும். இவற்றுக்குக் கட்டுப்படுத்தப்பட்டதோர் உள்நாட்டுச் சந்தை காணபபட்ட போதும் தகுந்த இயந்திர சாதனங்களை இவை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமையால் இவை யாவும் திருப்தியற்ற முயற்சிகளாகவே காணப்பட்டன.

இதற்கிடையில் 1940-41 வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது தொழில் கைத்தொழில், வணிக அமைச்சர் கைத்தொழிற் கொள்கை பற்றிய முதலாவது பகிரங்க அறிக்கை என்று குறிப்பிடக் கூடிய வகையில் கைத்தொழில் முயற்சி பொது மக்கள் மத்தியில் குறைவாக இருக்கின்ற காரணத்திஞலும் அவர்களிடம்போதிய மூலதனம் இல்லாது இருப்பதஞலும் அரசாங்கம் முன்வந்து பொருத்தமான சில கைத்தொழில்களை ஆரம்பிக்கும் எனக் குறிப்பிட்டார். தனியார் ஈடுபடாத கைத்தொழில் முயற்சிகளில் அரசாங்கம் முன்வந்து ஈடுபடுதல் என்பதே இங்கு அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. எவ்வாருயினும் யுத்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள் இறக்குமதி தடைப்பட்டிருந்த நிலையில் இலாபத்தை உழைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்த போதும் இறக்குமதிகள் சாதாரண நிலைக்குத் திரும்பியதும் இவை எதுவுமே இலாபம் தரும் முயற்சிகளாக இருக்க முடியவில்லை. அமைச்சர் இது பற்றி 1945இல் குறிப்பிடும் போது இவை கைத்தொழில் மயமாக்கத்திட்டத்தின் சில அம்சங்களே என்றும் இவற்றின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் கைத்தொழில் உணர்வையும் கைத் தொழில் துறையில் தனியார் ஆர்வம் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலையை உரு வாக்குவதே நோக்கம் எனவும் குறிப்பிட்டார். இதே ஆண்டு தொழில், கைத்தொழில், வணிக அமைச்சின் நிர்வாகக்குழு ஒன்று சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் எதிர்காலக் கைத்தொழில் ஒழுங்கு முறை பற்றி எடுத்துக் கூறி யுத்தத்திற்குப் பிந்திய நிலையினை எதிர் கொள்ளக் கூடிய கைத்தொழிற் கொள்கை பற்றிய திட்டத்தையும் வெளியிட்டது. இதன் படி கைத்தொழில்கள் அடிப்படையானவை, அவ்வாறு அல்லாதவை எனப் பிரிக்கபட்டு அடிப்படைக் கைத்தொழில்கள் அரசாங்க உடைமையாக இருக்க ஏனையவை தனியார் முயற்சிகளாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென எடுத்துக் கூறியது. எனினும் தனியாருக்கு வேண்டிய பாதுகாப்பு, தகவல்கள், மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை என்பவற்றை அரசாங்கம் வழங்கும்.

ஆகவே, மேற்கூறியவற்றிலிருந்து 1948 இல் இலங்கை அரசியல் ரீதியில் சுதந்திரம் அடைந்த போது கைத்தொழில் அபிவிருத்தி என்று குறிப்பிட்டுக் கூறும்படி யாகவோ அல்லது அரசாங்கத்தின் கைத் தொழிற் கொள்கை என்று சிறப்பாக அடையாளம் காணும்படியாகவோ எதுவித வளர்ச்சிகளும் ஏற்பட்டிருக்கவில்லை என்பது வலியுறுத்தப்பட வேண்டிய தொன்றாகும். அவ்வாறு ஏதாவது முயற்சிகள் ஏற் பட்டிருந்தன என்றாலும் அவை யுத்த கால நிர்ப்பந்தத்தின் வழி உருவான அவசரகால உடன்படிக்கைகளாக் காணப்பட்டனவே தவிரத் திட்டமிட்ட கைத்தொழிற் கொள்கை ஒன்றின் வழி உருவான தெளிவான முயற்சி களாகத் தென்படவில்லை. இதனால் இலங்கை சுதந்திரத்தின் போது பெருமளவு பரவற் படுத்தப்படாத ஒரு விவசாய ஏற்றுமதிப் பொருளாதாரத்தினையே கொண்டிருந்தது. 1950 இல் நடைமுறைக் காரணிச் செலவின் படி மொத்த உள்நாட்டு உற்பத்தியிற் கைத்தொழில் உற்பத்தித் துறையின் பங்கு நான்கு (04%) சதவீதமாக மட்டுமே காணப் பட்டது. துறை ரீதியான தொழில் அமைப்பில் மதிப்பிடப்பட்ட மொத்தத் தொழிலில் 50% விவசாயத் தொழிலாக காணப்பட்டது. 10% மாத்திரமே கைத் தொழிலாகக்காணப்பட்டது.

இலங்கை அரசியல் ரீதியில் சுதந்திரம் அடைந்தமை அதன் எதிர்காலப் பொருளா தார அபிவிருத்தியைப் பொறுத்துப் பல பிரச்சினைகளை முன்னணிக்குக் கொண்டு வந்த போதும் இந்த விடயத்தில் அப்போது பதவியேற்ற அரசாங்கம் காட்டிய அக்கறை மிகவும் வருந்தத்தக்க தொன்றாகவே இருந்தது. பொதுவான பொருளாதார அலுவல்களைப் பொறுத்து இது உண்மை உடையதாயின் - கைத்தொழில் அபிவிருத்தி- யைப் பொறுத்து இது இன்னும் கூடியளவு உண்மை உடையதாக இருந்தது அரசாங் கத்தின் இந்தப் பாராமுகக் கொள்கைக்கு இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தை நோக்கியபோது குறிப்பிட்ட இரு காரணங்களைப் பொறுப்பாகக்கூற முடியும்.

1) கொரிய யுத்தத்தின் காரணமாக இலங்கையின் முதல் விளைவுத்துறை அனு பவித்த தொழிற் செழிப்பு நிலை, இதனால் ஒரு சில முதல் விளைவுப் பொருட்களில் நாட்டின் பொருளாதாரம் தங்கியிருப்பதன் மூலமான அபாயத்தை அரசாங்கம் உணர்ந் திருந்தபோதும் அதனை வலியுறுத்திப் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தும் ஒரு கொள்கையைக் கைக்கொள்ள முடியாமலி ருந்தது. ஏனெனில், நடைமுறை விளைவுகள் இதற்குச் சார்பாக இருக்கவில்லை. கைத் தொழில் உற்பத்தியைப் பொறுத்து யுத்த நிலை தீர்ந்துபோய் நிலைமைகள் சாதாரண மாகியிருந்ததால் தரமான பொருட்களை இலகு வாக இறக்குமதி செய்ய முடிந்ததுடன், அவ்வாறு இறக்குமதி செய்வதற்கேற்ப ஏராளமான அந்நியச் செலாவணியும் இலங்கையிடம் இருந்தது. ஆகவே இந் நிலையில் எத்தகையதொரு தீவிரமான கைத் தொழில் உற்பத்திக் கொள்கைக்கும் அவ சியமிருக்கவில்லை,

(11) அரசாங்கம் பிரித்தானியாவுக்குச் சார்பாகக் கையாண்ட பொருளாதாரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை இந்தியாவைப் போலன்றி இலங்கையின் சுதந்திரம் படிப்படியாக அரசியல் திட்ட முறைகளுக்கமையவே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததால் உடனடியாக அது பிரித்தானியாவின் பொருளாதார அபிலாசைகளுக்கு முரண்பட்ட ஒரு கொள்கையைக் கையாளுவதற்குப் பெருமளவு தயக்கம் காட்டியது. சுதந்திரம் பெற்ற ஆரம்ப காலத்தில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ரேர் தெளிவான முறையிற் பிரித்தானியாவுக்குச் சார்பான ஒரு கொள்கையைப் பின்பற்ற முற்பட்டனர். இதனுல் ஏறக்குறைய இலங்கையின் 90 % கைத்தொழில் தேவைகளைப் பிரித்தானியா வழங்கிக் கொண்டிருந்த நிலையில் உள்நாட்டுக் கைத்தொழில் துறையொன்றை அபிவிருத்தி செய்ய முற்படுதல் எல்லா வகையிலும் பிரித்தானியாவுக்கு வாய்ப்பான ஒரு கொள்கையாக இருந்திருக்க முடியாது. அதுமட்டுமன்றிப் பிரித்தானிய மரபில் தலையிடாக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி தகுந்த பாதுகாப்புக் கொள்கையொன்றின் கீழ்க் கைத்தொழில் அபிவிருத்திக்கான ஆரம்ப முயற்சியில் ஈடுபடும் எனவும் எதிர்பார்க்க முடியாமலிருந்தது, அதுபோக இத்தகைய சில தீவிரமான முயற்சிகளைக் கையாண்டு தம்மை அதிகம் அலட்டிக் கொள்ளக் கூடிய ஒரு கூட்டத்தினராகவும் அப்போது பதவியேற்ற நில முதலாளி வர்க்கத்தினர் காணப்படவில்லை. முதலாவது காரணத்தில் நாம் நோக்கியபடி அதற்குரிய தேவைகூட எவருக்கும் ஏற்படவில்லை. ஆகவே, சுருக்கமாக, கூறின் கைத்தொழில் அபிவிருத்தீ ஒன்றை ஆரம்பிக்கக் கூடிய வாய்ப்பிருந்தும் அதற்கான ஆர்வமோ, தூண்டுதலோ இல்லாமையே இக்காலக் கைத்தொழிற் கொள்கையின் முக்கிய பண்பு எனலாம்.

எனவே உத்தியோக ரீதியாக நோக்குமிடத்து இலங்கை சுதந்திரமடைந்த ஆரம்ப வருடங்களில் கையாளப்பட்ட கைத்தொழில் கொள்கை அரசாங்க சபை பிரகடணப் படுத்திய கொள்கையாகவே இருந்தது. அடிப்படைக் கைத்தொழில்களை அரசாங்கமும் அவ்வாறல்லாதவற்றைதனியாரும் நிறுவுவதேயாகும். எனினும் இது விடயத்தில உண்மையாக ஒதுக்கீடு செய்யப்பட் தொகை மிகவும் குறைவாகவே இருந்தது. வரவு செலவுத் திட்டத்திலிருந்து மூலதனச் செலவு ஒதுக்கீட்டிற்கான பரந்த திட்டமாக இருந்து அரசாங்கத்தின் சுதந்திரத்திறகு பிந்திய அபிவிருத்தித் திட்டம் யுத்தகாலத் தொழிற்சாலைகளைத் திருத்தி அமைப்பதுடன் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்குரிய திட்டங்களையும் கொண்டிருந்தது. இவை சிமேந்து உருக்கு, கடதாசி, சீனி, மரக்கறி எண்ணெய் போன்வற்றின் உற்பத்தியாக இருக்க வேண்டுமெனக் கருதப்பட்டது. எனினும் 1952 வரை இந்த விடயத்திற் குறிப்பிடத்தக்க மாாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. பல தொழிற்சாலைகள் தொடர்ந்தும் நட்டத்திலேயே இயங்கியதுடன் புதிய தொழிற்சாலைகளின் நிர்மாணமும் குறிப்பிட்ட திட்ட நிலைக்கு மேலாக முன்னேறியிருக்கவில்லை.

ஆனுல் 1952 இல் கைத்தொழில் அபிவிருத்தியினைப் பொறுத்து உத்தியோக ரீதியான கொள்கையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருந்ததெனலாம். இந்த மாற்றத்திற்கு இரு காரணங்களைக் குறிப்பிட முடியும்

(I) உலக வங்கிக் குளுவினர் இலங்கை விஜயமும் அதன் சிபாரிசுகளும்,

(II) அரசாங்கத்தின் கைத்தொழில் முயற்சிகளை ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட குளு ஒன்று அரசாங்கம் ஈடுபட்டிருந்த கைத்தொழில் முயற்சிகளைக் கண்டித்தமை.

இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் நிறுவப் பட்ட கைத்தொழில்கள் பலவும் சிக்கனமற்றவையாக மாறியதுடன் கணிசமானவை நட்டத்தில் இயங்கியமையாலும் இவ்வரசாங்க முயற்சிகளை ஆராய்வதற்கென 1951 இல் ஒரு குளு ஏற்படுத்தப்பட்டது. இக்குளு இந்த முயற்சிகளை ஆரம்ப நிலையில் தொடங்கப் பட்ட போதே பல குறைபாடுகளுக்கு உட்பட்டிருந்ததாகவும் தகுந்த திட்டங்களோ முன்னேடி ஆய்வுகளோ இன்றி இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கப் பெற்றதாகவும் சுட்டிக்காட்டியது. அத்துடன் இம்முயற்சிகளை அரசாங்கத் திணைக்களங்களைப் போன்று முகாமை செய்வது திறமைக் குறைவுக்கு இடமளிப்பதாக எடுத்துக்காட்டியது. இது கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையிற் சில யுத்தகால கைத்தொழில் முயற்சிகள் மூடப்பட்டன. இன்னும் சிலவற்றை அரைகுறைச் சுதந்திரம் உடைய கூட்டுத்தாபனங்கள் வசம் அல்லது கூட்டுறவுகள் வசம் ஒப்படைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது, தனியார் முயற்சி கூடிய அளவு இடம் பெறவேண்டும்; அரசாங்க - தனியார் மூலதனங்கள் ஒன்றிணைந்த வகையிற் கைத்தொழில் முயற்சிகளிற் பங்குபற்ற வேண்டும் என்பதாக எடுத்துக்கூறிய சிபார்சுகளைத் தொடர்ந்து 1955 இல் அரசாங்க ஆதரவிலான கூட்டுத்தாபனங்கள் சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் அரசாங்க முயற்சிகள் தனியாருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி ஆரம்பத்தில் வேறுபட்ட தாரதர அளவுகளில் தனியாரும் அரசாங்கமும் சேர்ந்து பங்குபற்றுவதற்கும் ஈற்றில் இவற்றை முற்றாகத் தனியார் வசம் ஒப்படைப்பதற்கும் திட்டமிடப்பட்டது. எனினும் 1956 இல் பதவியிலிருந்த அரசாங்கம் மாறியதனால் இதன் இரண்டாவது பகுதி கைகூடவில்லை.

மறுபுறம் இலங்கையின் அபிவிருத்திக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த உலக வங்கிக் குழுவின் பரிந்துரை பேரளவிலான அரசாங்கக் கைத்தொழில் முயற்சிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. முந்திய குழு போன்றே இதுவும் அரசாங்கத் தொழிற்சாலைகள் இலாபமற்றிருப்பதுடன் தவறாக முகாமை செய்யப்படுவதாகவும் சுட்டிக் காட்டியது. அப்போதைய நிலையில் சிறு அல்லது நடுத்தர அளவில் அமைந்த பல கைத்தொழில்களே இலங்கைக்கு உகந்தது என உலகவங்கி சுட்டிக் காட்டியது.

உள்நாட்டுச் சந்தையின் சிறியளவு மூலதன தொழில்நுட்பப் பற்றாக்குறை என்பவற்றின் மத்தியில், பேரளவ ன முயற்சிகள் சாத்தியம் இல்லையென அது கருதியது. அதற்குப் பதிலாக மேற்கூறிய நடுத்தர முயற்சிகளுடன் உள்நாட்டு விவசாயத்தைச் சீர்திருத்தலிலும், அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டுமெனக் கூறப்பட்டது. இதனையடுத்து, அரசாங்கம் வைப்பிலிட்ட ஆறுவருட முதலீட்டுத் திட்டம் உலக வங்கியின் சிபாரிசுகளை ஏற்றுக் கொள்வதொன்றாக இருப்பதைக் காணலாம். அடுத்த ஆறு வருடத்திற்கான அரசாங்கத்தின் மூலதனச் செலவை எடுத்துக் காட்ட இத்திட்டம் கைத்தொழிலுக்கு மிகக் குறைந்த முக்கியத்துவத்தினையே வழங்கியிருந்தது. மொத்தச் செலவில் 4% மட்டுமே கைத்தொழிலுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. அதே நேரத்தில் 36% விவசாயத் துறைக்கும் 33% பொதுசன சேவைகளுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது. கைத்தொழில் அரசாங்கத்தின் பங்கு குறைவாயிருத்தல், தனியார் அதிற் கூடிய அளவில் ஈடுபட வேண்டும் என்பதையும் புலப்படுத்துவதாயிருந்தது.

எவ்வாறாயினும் இந்த நிலைமை வெகு காலத்திற்கு நீடிக்கவில்லை. 1957 அளவில் கைத்தொழிலில் அபிவிருத்திக் கொள்கையில் மீண்டும் ஒரு முக்கிய திருப்பம் ஏற்படுகிறது இத்திருப்பத்திற்குரிய அடிப்படைக் காரணம் இது வரை ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டுப் புதிய அரசாங்கம் ஒன்று பதவிக்கு வந்ததேயாயினும், இதைவிட மேலும் சிலகாரணங்கள் பொறுப்பாயிருந்ததையும் கவனிக்க வேண்டும். இதில் ஒன்று, யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் ஏற்பட்ட மிக்க கூடிய சனத்தொகை அதிகரிப்பின் பயனாக வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிற் பரவக் கூடிய சாத்தியமாகும். ஆகவே வேலைவாய்ப்புக்களைப் போதியளவு பெருக்குவதற்கு நாட்டின் கைத்தொழில் துறையை விஸ்தரிப்பது அவசியமென உணரப்பட்டது. மற்றொன்று, இதுவரை ஏற்றுமதித் துறையினூடாக அனுபவிக்கப்பட்டுக்கொண்டு வந்த செழிப்பு நிலை முடிவடைந்து கொண்டிருந்தது. இதனால் நாட்டின் முழுப்பொருளாதாரத்தையும் முதல் விளைவு ஏற்றுமதித்துறை மாத்திரம் தாங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளமுடியாதென்பது கூடியளவுக்கு தெளிவாகிக் கொண்டிருந்தது. இதனால் உள்நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தி வேண்டப்படுவதொன்ருக இருந்தது.

இந்தக்கொள்கை மாற்றத்தின் தெளிவான வெளிப்பாடாக 1958 இல் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பத்தாண்டுத் திட்டம் அமைந்திருந்தது. இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை உற்பத்தித்திறன், பொருளாதார அமைப்பினைப்பலவிதப் படுத்தல், தொழில் வாய்ப்பு என்ற அம்சங்களைக் கருத்திற் கொண்டிருந்தது. இது கைத்தொழில் மயவாக்கத்திற்கான தேவையை இறக்குமதிப் பதிலீட்டின் அடிப்படையில் உள்நாட்டுச் சந்தைக்கு என்றும் அதே நேரத்தில் ஏற்றுமதிச் சந்தைக் கென்றும் நோக்கியிருந்தது. இத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த முதலீடாகிய பொதுத்துறை, தனியார்துறை என்ற இரண்டிற்குமான ரூபா 13,600 மில்லியனில் கைத்தொழில் 20% தைப் பெற்றுக் கொண்டது. விவசாயம் 23% யும் போக்குவரத்தும், பொதுத் தொடர்புகளும் 14% யும் சமூக முதலீடுகள் 26 % யும் பெற்றுக்கொண்டன. கைத்தொழில் மயவாக்கத்திற்கு அரசாங்கம் வழங்க முற்பட்டிருந்த முக்கியத்துவத்தையும் அரசாங்கத்துறை அதிற் கூடியளவு பங்குபற்றுவதையும் பத்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்ட காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்கு இலங்கை வந்திருந்த வெளிநாட்டுப் பொருளியல் அறிஞரும் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

இந்த நேரத்தின் அரசாங்கம் கைத்தொழில் கொள்கை மூலமாக கைத்தொழில்களை உள்ளடக்கியிருந்தது. இவை பொதுத்துறைக்கென்றே பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது வகையில் துணி', ஏயரும் ரியூப்பும், அசிற்றிக் அமிலம், மட்பாண்டம், கண்ணுடி என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. இவற்றில் தனியார், அரசாங்கம் என்ற இரு சாராரும் இணைந்து ஈடுபட முடியுமென எதிர்ப்பார்க்கப்பட்டது. மூன்ருவது வகை, பெருந்தொகையான இலேசான நுகர்வுப் பொருட்களை உள்ளடக்கியிருந்தது. இது முற்ருகத் தனியார் முயற்சிக்கென்றே விடப்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் இந்தக் கைத்தொழிற் கொள்கையோ அல்லது முதல் குறிப்பிட்ட பத்தாண்டு திட்டமோ எந்த வகையிலும் உணர்வுடன் பின்பற்றப்பட்டவை எனக் கூற முடியாது. எனினும் இதிலுள்ள மெய்ம்மை முரண்பாடு யாதெனில் இலங்கையில்1957ற்கு பின்பு அதுவும் குறிப்பாக 1960 ற்கு பிந்திய நிலையில் ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சி இவற்றில் எடுத்துக் கூறப்பட்டுள்ள ஒரு போக்கிலேயே அமைந்திருக்க முற்பட்டதெனலாம். இதற்கான உண்மையான தூண்டுதல் இலங்கை எதிர்நோக்கிய சென்மதி நிலுவை நெருக்கடியின் வழி ஏற்பட்டிருந்தது.

1950 காலப்பகுதியில் தனியாரைக் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்குக் கையாளப்பட்ட கொள்கை சிறந்த விளைவுகள் எவற்றையும்கொண்டுவரவில்லை. அவர்கள் தொடர்ந்தும் பதப்படுத்தற் கைத்தொழில்களிலும், வணிக நடவடிக்கைகளிலும் அசைவற்ற சொத்துப் பரிமாற்றங்களிலுமே கூடியளவுக்குஈடுபட்டிருந்தனர். வரித் தூண்டுதல்களின் மத்தியிலும் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படாமை இதற்குரிய ஒரு காரணம் எனலாம் எனினும் 1960 காலப் பகுதியிலிருந்து உயர்ந்த இறக்குமதித் தீர்வைகளும், இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட ஆரம்பித்தன. ஏனெனில் ஏற்றுமதித் துறை உழைத்துக் கொடுத்துக் கொண்டிருந்த நிலையில் அந்நியச் செலாவணியிற் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. எனவே பொதுவான இறக்குமதிகளிலும் குறிப்பாக ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதிகளிலும் அந்நியச் செலாவணி விரயமாவதைத் தடுக்க வேண்டியது அவசியமாக இருந்தது. ஆகவே இவ்வாறு தொடக்க நிலையிற் கைத்தொழில் நுகர் பொருட்களில் ஆரம்பித்துப் பின்பு நடுத்தரப் பொருட்களுக்கும் விஸ்தரிக்கப்பட்ட இறக்குமதிகளின் மீதான தொகை ரீதியான கட்டுப்பாடுகளே இலங்கையின் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயவாக்கத்திற்கான அடிப்படையாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பலதரப்பட்ட கைத்தொழிற் பொருட்கள் மீது மேற்கொள்ளப்பட்டதுடன், சில பொருட்களின் இறக்குமதிகள் முற்றாகவே தடை செய்யப்பட்டும் இருந்தன. இத்தகைய பொருட்களைப் பொறுத்தவரை வெளிநாட்டுப் போட்டி முற்றாகவே அகற்றப்பட்டு நன்கு பாதுகாக்கப்பட்ட இலாபம் உழைக்கக் கூடிய சந்தை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. இது தவிர வரிச்சலுகைகள் பல வழங்கப்பட்டதுடன் மலிவான கடன் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. 1950 - 1963 க்குமிடைப்பட்ட காலப்பகுதியே இறக்குமதிப் பதிலீட்டின் " சுலபமான கட்டம் " அல்லது. "தொடக்கக் கட்டம்" என அழைக்கமுடியும். இக்கட்டத்திற் பெருந்தொகையான நுகர்வுப் பொருட் கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தன. இவை இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளைக் கொண்டிருந்ததுடன் உள்நாட்டுக் கேள்வியைப் பூர்த்தி செய்வதாகவே காணப்பட்டன. ஆரம்ப காலத்திற் பொருட்களின் தரம் மிக மட்டமாக இருந்தது மாத்திரமன்றிப் பல கைத்தொழில்களைப் பொறுத்தவரை இறக்குமதியாக்கப்பட்ட உள்ளீடுகளை ஒரு சிறிது மாற்றிக்கொள்வதே அவற்றின் உற்பத்திச் செய்முறையாகவும் இருந்தது.

இத்தகைய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான அனுமதி கட்டற்ற முறையில் வழங்கப்பட்டது மாத்திரமின்றி ஓரளவுக்குத் தாராளமான முறையிலும் வழங்கப்பட்டன எனலாம். அந்நிய செலாவணியை மீதப்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழில்களில் உள்ளீடுகளை இறக்குமதி செய்வதில் ஏற்படக்கூடிய செலவுகள் பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை. எந்தப் பொருட்கள், அநாவசியமானவை, ஆடம்பரப் பொருட்கள் என்ற காரணத்தினுல் தடைசெய்யப்பட்டனவோ அப்பொருட்களின் உற்பத்தியிலேயே கூடியளவான உள்நாட்டு முயற்சி ஈடுபடுத்தப்பட்டது. ஏனெனில் அவை முற்றாக பாதுகாக்கப்பட்ட சந்தையைக்கொண்டிந்தன. பல கைத்தொழில்களுக்கு முதல் 5 வருட காலத்தில் வரி விடுமுறை வழங்கப்பட்டதால் எங்கு மிகக் குறுகிய காலத்தில் கூடிய இலாபத்தை உழைத்துக்கொள்ள முடியுமோ அத்தகைய கைத் தொழில்களிலேயே தனியார் கூடியளவு ஈடுபட முற்பட்டனர். ஆகவே இக்காலத்தில் ஏற்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி இறக்குமதிப் பதிலீட்டின் அடிப்படையில் அமைந்திருந்தாலும் தகுந்த திட்டங்கள், முன்னுரிமைகள் எதுவுமின்றி அது இடம் பெற்றதால் நீண்ட காலக் கைத்தொழில் அபிவிருத்தியைப் பொறுத்து எந்தவிதமான சிறந்த பலனையும் ஏற்படுத்த முடியாமற் போய்விட்டது எனலாம். எனினும் அந்நியச் செலாவணி நெருக்கடி நிலை மோசமடைந்து கொண்டு சென்றவிடத்தும் கைத்தொழில்களுக்கு அங்கீகாரம் வழங்குவதன் மூலம் பொருள் இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி ஒதுக்கீடு என்பவற்றிற் கூடியளவு எச்சரிக்கை கடைபிடிக்கப்பட்டபோதும் இறக்குமதிப் பதிலீட்டுக்கொள்கை கைத்தொழில் அபிவிருத்தியை ஒரு வகையில் தொடக்கி வைத்தாலும் அதனை நிலைபெறச் செய்ய முடியவில்லை.

இதே நேரத்தில் 1957 இன் அரசகைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம் 1956 இன் சட்டத்தைப் பதிலீடு செய்து நிலவியிருந்த அரச முயற்சிகளைப் புனர்நிர்மாணம் செய்வதுடன் பொதுத்துறையிற் பாரிய அடிப்படைக் கைத்தொழில்களை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் கூட்டுத்தாபனங்களை நிர்மாணிப்பதற்கும் இடமளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச்செல்லலாயிற்று. 1963 இல் 14 ஆக இருந்த கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் 1967 இன் முடிவில் 21 ஆகவும் 1974 இல் 25 ஆகவும் உயர்வடைந்தன. ஆனுல் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றமைக்கும் கைத்தொழில் அபிவிருத்தியில் அவற்றின் பங்கும் அதிகரித்துச் சென்றிருப்பதுதான் காரணமெனக் கூறமுடியாது. ஆரம்பத்திலிருந்து அவை பல குறைபாடுகளுக்குட்பட்டிருந்தன. முகாமைத் திறமையின்மை, அவற்றைத்திட்டமிட்டதிலான தொழில்நுட்பக் குறைபாடுகள், மிகையாக ஊழியர்கள் இடம்பெற்றமை, தவருன விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயக் கொள்கை போன்றவை இக்குறைபாடுகளுக்கு முக்கிய காரணமாக இருந்தன. இது தவிர அரசியல் தலையீடுகள் இவற்றின் திறமையைப் பெருமளவிற்குக் குறைக்கக்கூடியனவாக இருந்தன. 1966 ல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை, கூட்டுத்தாபனங்களின் பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்தது. எனினும் இவை தமது பங்கைத் திறமையாகச் செலுத்தமுடியாதிருந்தமைக்குரிய முக்கிய காரணம், கைத்தொழில் அபிவிருத்தியில் கூட்டுத்தாபனங்களின் பங்கு என்ன? என்பது பற்றிய ஓர் உறுதியான கொள்கை இல்லாதிருந்தமையே எனலாம்.

வளர்ச்சி, நலன்புரி அம்சங்கள் என்ற இரண்டும் இரண்டறக் கலந்திருந்ததால் ஈற்றில் இரண்டையுமே அவை சரியானபடி நிறைவேற்ற முடியாத ஒரு நிலை ஏற்பட்டது எனலாம். சில சமயங்களில் அவை மூலதன ஆக்கம், நீண்டகால அபிவிருத்தி என்பவை பொறுத்து ஒரு முதன்மைத் துறையாக இருக்க வேண்டுமெனக் கருதப்பட்டன. ஆனால் வேறுசில சமயங்களில் அவை பொதுவான சேவையின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு அவை மக்களுக்குரிய பொருட்களை மலிவாக வழங்க வேண்டுமெனவும் மக்களுக்குத்தொழில் வழங்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்பட்டன. இத்தகைய இரட்டைத் தேவைகளின் மத்தியில் அது விடயத்தில் உறுதியான ஒரு கொள்கை கடைப்பிடிக்க முடியாத நிலையில் அவை கைத்தொழில் அபிவிருத்திக்குச் சரியான ஒரு பங்கினை வழங்க முடியவில்லை.

1965 ல் புதிய அரசாங்கம் ஒன்று பதவியேற்றபோது நாட்டின் அந்நியச் செலாவணி நிலைமை மிக மோசமான ஒரு கட்டத்தை அடைந்திருந்தது. அத்தியாவசிய உணவுப்பொருட்கள் தவிர்ந்த வேறு எல்லா வகையான இறக்குமதிகளும் கடுமையான கட்டுப்பாட்டிற்குட்பட்டன. அந்நியச் செலாவணி வரவு செலவுத்திட்டம் என்பதனூடாக இறக்குமதியில் அனுமதிக்கப்பங்கு, அனுமதிப் பத்திரம் என்பன கையாளப்பட்டன. இதனால் கைத்தொழிற்றுறை பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டது. ஏனெனில் கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்களையும் இயந்திர சாதனங்களையும் அவற்றின் உதிரிப்பாகங்களையும் இறக்குமதி செய்துகொள்ள முடியவில்லை. இதனால் இயலுமையின் குறைவுப் பயன்பாடு முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாக உருவாகலாயிற்று. இதனால் புதிய அரசாங்கம் கைத்தொழில் அபிவிருத்தியைப்பொறுத்து தனது முதலாவது நடவடிக்கையாக நிலவும் இயலுமையைப் பூரணமாகப் பயன்படுத்தும் வகையில் மூலப்பொருட்களையும், ஏனைய மூலதனப் பொருட்களையும் இறக்குமதி செய்து வழங்குவதனைக் கொண்டது. மேலதிக வெளிநாட்டு வழங்கலினூடாகவும் அரை குறை இறக்குமதித் தாராண்மை வாதத்தினாலும் நாணயமாற்று விகிதம் பற்றி மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களினூடாகவும் இக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது.

1967 ல் இலங்கை ரூபாவின் பெறுமதி இறக்கத்தைத்தொடர்ந்து அந்நியச் செலாவணிச் சான்றிதழ் (பீக்ஸ் திட்டம்) அமுல் நடாத்தப்பட்டமை கைத்தொழில் அபிவிருத்திக்குச் சாதகமாக அமைந்தது. இப்புதிய ஒழுங்கின்படி இறக்குமதிகளில் ஒரு கணிசமான பகுதி குறிப்பாக முதலீட்டுப் பொருட்களும், நடுத்தரப் பொருட்களும் திறந்த அனுமதிப்பத்திர முறையின்கீழ் அந்நியச்செலாவணிச் சான்றிதழ்களுடன் அனுமதிக்கப்பட்டன. இவற்றின் பெரும்பகுதி மூலப்பொருட்களாகவும் இயந்திர சாதனங்களாகவும் உதிரிப்பாகங்களாகவுமே காணப்பட்டன. திறந்த அனுமதிப்பத்திர முறையின்கீழ் இவ்வாறு இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டமை சில தவறானபயன்பாடுகளுக்கும் ஊழல்களுக்கும் இடம் அளித்தபோதும் உள்நாட்டுக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய உதவியது என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக 1968 — 1969 காலப்பகுதில் கைத்தொழில் துறை இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்த வளர்ச்சி வீதங்களைக் காட்டிற்று. 1968 — 69 ல் மெய் வடிவில் கைத்தொழில் வெளியீடு வருடாந்தம் சராசரி 9.5% அதிகரிப்பைக் காட்டிற்று. 1990 இல் புதிய அரசாங்கம் பதவியேற்றும் திறந்த அநுமதிப் பத்திர முறை ஏற்றுக் செய்யப்பட்ட போதும் கைத்தொழில் நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கைகளின் முன்னேற்றம் ஒரு சில ஆண்டுகளுக்கு நீடித்திருக்கவே செய்தது.

1950 இன் பிந்திய காலகட்டத்தின் நுகர்வுப் பொருட்களுடன் ஆரம்பித்த இறக்குமதி பதிலீட்டும் கைத்தொழில்மயவாக்கும் பின்பு நடுத்தரப் பொருட்களுக்கும், முதலீட்டுப் பொருட்களுக்கும் பரவி 1970 அளவில் அதன் மிக நெருக்கடியான கட்டத்தை அடைந்தது எனலாம். இக்காலப் பகுதியில் அபிவிருத்தி வேகம் பெரிதும் குறைவடைய முற்பட்டிருந்தது. 1966 இல் வெளியிடப்பட்ட உத்தியோக ரீதியான கொள்கைப் பிரகடனத்தில் விவசாய அபிவிருத்தியை தூண்டக் கூடிய கைத்தொழில்கள், உள்நாட்டு மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், ஏற்றுமதி வாய்ப்புடைய கைத்தொழில்கள் என்பவை ஊக்குவிக்கப்படுமெனக் கூறப்பட்டது 1970 இல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கையும். இதனுடைய தொடர்ச்சியாகவே காணப்பட்டது. விவசாய அடிப்படைக் கைத்தொழில்கள் ஏற்றுமதிக் கைத்தொழில்கள் என்பனவே அரசாங்கத்தின் கைத்தொழிற் கொள்கையாக வெளியிடப்பட்டன. இது தவிர அடிப்படைக் கனரகக் கைத்தொழில்களை நிலைப்படுத்துதல், உள்நாட்டு வளங்களை முடிந்தவரை பயன்படுத்துதல், உள்நாட்டுக் காரணிகளின் கொள்கைக்கு ஏற்ற வகையிலான நுட்ப முறைகளில் பயன்படுத்தல் என்பனவும் கொள்கைகளாக முன்வைக்கப்பட்டன. இக்கொள்கை நோக்கங்கள் 1972—76 ற்கு இடைப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தில் தெளிவாக வலியுறுத்தப்பட்டன.

ஆனால் ஐந்து ஆண்டுத் திட்டத்தின் பின் இலங்கையின் அடிப்படைய பொருளாதார நிலைமைகள் ஒரு சடுதியான மாற்றத்தை எதிர்நோக்கின. இவற்றிற் பல நாட்டின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட சக்திகளினாலேயே உருவாகக்கப்பட்டிருந்தன. உலக ரீதியில் ஏற்பட்ட பணவீக்க நிலையும் எண்ணெய் விலை உயர்வும் இதற்குரிய முக்கிய காரணங்களாக இருந்தன. உதாரணமாக, எல்லா இறக்குமதிகளுக்கான மத்திய வங்கியின் விலைச்சுட்டெண் 1970 இல் 140 லிருந்து 1974 இல் 370 ஆகக் கூடியது. இதற்கிடையே நாட்டின் ஏற்றுமதி வருமானங்களும் பாதிக்கப்பட்டிருந்தன. இத்தகைய நெருகடிகளினால் நாட்டின் கைத்தொழில் நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. தனியார் கைத்தொழில் ஓரளவுக்கு முற்றாகவே இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. நிலையான விலைகளின் அடிப்படையில் நோக்குமிடத்து 1971 — 1973 க்குமிடைப்பட்ட காலத்திலேயே கைத்தொழில் துறையின் மிகக் குறைவான வளர்ச்சி வீதம் ஏற்பட்டிருந்தது. இக்காலப் பகுதியில் சராசரி வளர்ச்சி வீதம் வருடத்திற்கு 2% ஆக மட்டுமே இருந்தது. 1974 இல் கைத்தொழில் அபிவிருத்தி எதிர்கனிய வளர்ச்சியையே காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியிற் கைத்தொழில் துறையின் பங்கு 1972 இல் 14% லிருந்து 1973 இல் 13. 6% ஆகவும், 1974 இல் 12. 6% ஆகவும் வீழ்ச்சியடைந்தது. வேறுபற்றி 1977 இல் மீண்டும் ஒரு முறை அரசாங்கம் பதவி மாறியதும் அரசாங்கக் கைத்தொழில் கொள்கையிலும் அதன் மூலம் கைத்தொழில் துறையின் ஏற்படக்கூடிய வளர்ச்சியிலும் மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றங்களின் அடிப்படையாக விளங்குவது இது வரை பின்பற்றப்பட்ட கைத்தொழிற் கொள்கை எதுவித குறிப்பிடத்தக்க கைத்தொழில் அபிவிருத்தியையும் நாட்டில் ஏற்படுத்தாது தோல்வி கண்டமையே ஆகும். இறக்குமதி முதலீடு என்ற வகையிலின்றி ஓர் ஏற்றுமதி சார் கைத்தொழில்கள் என்ற வகையிலான கைத்தொழில் அபிவிருத்தியையே அரசாங்கம் கருத்திற் கொண்டிருந்தது. இதற்குரிய முக்கிய காரணமாகவே சுதந்திர வர்த்தக வலயம் முன்வைக்கப்பட்டது. இதன் அமைப்பு நிர்வாகம் போன்ற அம்சங்கள் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. சுதந்திர வர்த்தக வலயத்தின் மூலம் கைத்தொழில் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பின்வரும் பிரச்சினைகள் தீர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) மூலதனப்பற்றுக்குறை வெளிநாட்டு முதலீடுகளினுல் தீர்க்கப்படலாம்.

(2) உள்நாட்டு ஊதியம் பயன்படுத்தப் படுவதால் வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்படலாம்.

(3) தொழில்நுட்ப ரீதியான முன்னேற் றம்.

(4) வெளிநாட்டு முதலீட்டில் அந்நிய செலாவணி நாட்டுக்கு கிடைப்பதன் மூலம் அந்நியச் செலாவணி பிரச் சினை தீர்க்கப்படலாம்.

(5) கைத்தொழிற் பொருட்களுக்கு இலகு வான சந்தை வசதிகள்.

எனினும் இதுவரை ஏற்பட்ட வளர்ச்சி யினை எடுத்து நோக்குமிடத்து இவை எந்த ளவுக்கு நாட்டின் கைத்தொழில்களை மேம் படுத்த முடியும் என்பது தெளிவில்லாத ஒன் ருகவே காணப்படுகிறது. இதுவரை ஏற் பட்ட வளர்ச்சிகள் உடுதுணி உற்பத்தியில் மாத்திரமே குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற் படுத்தி உள்ளன. ஏனைய பாரிய வகைக் கைத்தொழில்களிலான அபிவிருத்தி மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. வேலை யில்லாப் பிரச்சினையும் இதனூடகப் பெரும ளவு தீர்க்கப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது.

❖❖

கல்வி பெறுவது ஒரு நாட்டின் மக்கள் எல்லோருடைய அடிப் படை உரிமைகளுள் ஒன்ருகும். தனிப்பட்ட மக்களுக்கு நன்மை பயப் பதுடன் சமூக முன்னேற்றத்திற்கும் கல்வி இன்றியமையாதது. கல்வி (education) என்னும் சொல்லுடன் கற்றல் (learning) என்ற கருத்து இணைந்து காணப்படுகிறது.

பிறப்புத்தொட்டே ஒருவனிடம் இயற்கையாக அமைந்து காணப் படாத பண்புகள், பிறந்தபின் ஒருவனுக்கு ஏற்படும் அனுபவங்கள், இவற்றின் விளைவுகள் ஆகியன கற்றல் என்னும் கருத்துக்குள் அடங் குவனவாம்.

எனவே கற்றலும் கல்வியும் பள்ளி வாழ்க்கையுடன் முடிந்துவிடு வனவல்ல. பிறப்பு முதல் இறப்புவரை தொடர்ந்து நிகழும் செயல் முறைகளாகும்.

க. சந்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஏற்றுமதிக் கொள்கைகளும் வருமானத் தளம்பல்களும்

கா. ஜயந்தகுமாரன்
*விரிவுரையாளர்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

*சுதந்திரத்தின் முன்*

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு மிக நீண்ட காலத்துக்கு முன்னரேயே கிறீக், ரோம், அரேபியா, இந்தியா போன்ற நாடுகளுடன் இலங்கை வாணிகத் தொடர்பைக் கொண்டிருந்தது என்பதற்குப் போதியளவு வரலாற்றுரீதியிலான சான்றுகள் உண்டு. வாணிபப் பொருட்களாகக் கறுவா, பாக்கு, மிளகு, இரத்தினக்கல், யானை, முத்துக்கள், மரம், சாராயம், புகையிலை, மீன், ஏலக்காய் என்பன இருந்தன. ஆனால், தற்போது நாம் காணும் ஏற்றுமதிப் பொருளாதாரம் 1833 ல் பிரித்தானியா இலங்கையில் கோப்பிப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்ததுடன் ஆரம்பமாகியது. இவ் ஊக்குவிப்புகள் உற்பத்தியைப் பெருமளவு அதிகரித்தது. 1846 ல் உலகளாவிய பொருளாதார மந்தத்தினால் இலங்கையும் பாதிப்புக்குட்பட்டது எனினும், கோப்பியின் உலகச் சந்தை விலைகள் 1850 களில் மேல் நோக்கிய போக்கில் காணப்பட்டு, 1860 களில் சாதகமான தளம்பலற்ற விலைப் போக்கு இடம் பெற்றது. 1870 களில் இப் பயிர் வீழ்ச்சியைக் காட்டியது. இதற்குப் பதிலீடாக, சிங்கோனா பயிர் அறிமுகப்படுத்தப்பட்டது. இலண்டன் சந்தையில் காணப்பட்ட சாதகமற்ற தன்மைகளின் காரணமாக, இந்தப் பயிர் குறுகிய காலத்திலேயே வீழ்ச்சியடைந்தது. கொக்கோ, இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கோப்பிப் பயிர் தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே கொக்கோப்பயிர் பெருந்தோட்டப் பயிராக மாற்றம் பெற்றது. கோப்பிப் பயிர் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, பெருந்தோட்ட உரிமையாளர்களால் தேயிலைப் பயிர் பரீட்சிக்கப்பட்டது. இலங்கையில் தேயிலை அறிமுகப்படுத்தப் படுவதற்கு முன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனுவே தேயிலே ஏற்றுமதி செய்யும் நாடாகக் காணப்பட்டது. 1880 களில் பிரித்தானியக் குடியேற்ற வாதிகளினுல் இப் பயிர் பாரியளவில் இலங்கையிலும், அசாமிலும் பயிரிடப்பட்டது. ஐக்கிய இராச்சிய சந்தையே தேயிலேயின் உலக நிரம்பலில் அரைவாசியை நுகர்ந்து வந்தது. படிப்படியாக இச் சந்தையை இலங்கையும், இந்தியாவும் கைப்பற்றிக் கொண்டன. 1896 ல் ஐக்கிய இராச்சியத்தால் நுகரப்பட்ட தேயிலேயின் 36 சதவீதமான தேயிலே இலங்கைத் தேயிலேயாகவே காணப்பட்டது. 1896 ல் இறப்பர் மரங்கள் இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்ட போதிலும், ஒழுங்கு முறையிலான பயிர்ச்செய்கையாக இது மாற நீண்ட காலம் எடுத்தது. பெருந்தோட்ட உரிமையாளர் தேயிலேயின் விலேயினுல் கவரப்பட்டு இருந்தமையினுல் இறப்பர் மரத்தை விருத்தி செய்வதில் அக்கறை காட்டவில்லே. ஆனுல், 1900 ன் ஆண்டுகளில் தேயிலேயின் விலே வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பரா (Para) இறப்பர் நல்ல விளேவைத் தந்தது. இந்த நூற்றுண்டின் ஆரம்ப காலப்பகுதியில் பயிரிடப்பட்ட அடுத்த முக்கிய பயிர், தென்னே ஆகும். இக் காலப் பகுதியிலிருந்து இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான பங்கை ஈட்டித்தரும் பயிர்களாகத் தேயிலே, இறப்பர், தெங்குப் பொருட்கள் விளங்கின. இதுவரை நிலவி வந்த உள்நாட்டுச் சுய தேவைப் பொருளாதாரம் பெருந்தோட்டப் பொருளாதாரமாக மாறி ஏற்றுமதி வருமானத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலே ஏற்பட்டது. ஏற்கனவே காணப்பட்டு வந்த பொருளாதார முறை, புதிதாக உருவாகிய ஏற்றுமதி நோக்கிய உற்பத்தி முறைக்குப் படிப்படியாக மாறக் தொடங்கியது.

பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் முக்கிய குறைபாடுகளில் ஒன்று, குறுங்கால ஏற்றுமதி வருமானத் தளம்பல்களாகும். ஏற்றுமதி வருமானத்தில் நிச்சயத் தன்மை காணப்படுதல், பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும்.

*தேயிலேயினது ஏற்றுமதித் தளம்பல்கள் :*

1 வது உலக யுத்தக் காலப்பகுதியில், உலகச் சந்தையில் சாதகமான விலே தேயிலேக்குக் காணப்பட்டது. சாதகமான விலே, பெருமளவு உற்பத்தி சாதனங்களேத் தேயிலே உற்பத்தியை நோக்கித் திசை திருப்ப, ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பின் காரணமாகத் தேயிலேயினது விலே தொடர்ச்சியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. 1920 ம் ஆண்டின் பின் உற்பத்தியாளரின் ஒத்துழைப்புடன் உற்பத்தி அளவு கட்டுப்படுத்தப்பட்டது. உற்பத்திக் கட்டுப்பாடும், அதிகரித்த கேள்வி நிலேமையும் மீண்டும் கவர்ச்சிகரமான விலேக்கு வழிவகுத்தது. 1920 களின் நடுப்பகுதியில் மீண்டும் விலே வீழ்ச்சியடைந்தது. 1930 களில் ஏற்பட்ட உலகளாகிய பொருளாதார மந்தத்தின் போது, மீண்டும் தேயிலே விலேகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. 1930 களின் பிற்பகுதியில் சர்வதேசத் தேயிலே உடன்படிக்கையின் கீழ் உற்பத்தி அளவுக் கட்டுப்பாடும், உலகத் தொழில் நிலேமைகளின் முன்னேற்றமும் மீண்டும் உயர் விலேகளேப் பெற்றுக் கொடுத்தன. 2ம் உலக யுத்தக் காலப்பகுதியில் மீண்டும் பாதகமான நிலேமை தேயிலேச் சந்தையில் நிலவியது. யுத்தத்தின் பின் ஏற்பட்ட சாதகமான தேயிலேச் சந்தை ஏறக்குறைய 1955 ம் ஆண்டு வரை நீடித்தது.

*இறப்பரின் ஏற்றுமதித் தளம்பல்கள்:*

உலகச் சந்தையில் சாதகமான கேள்வி நிலேமையும், உற்பத்தியாளர்களது செயற்கையான கட்டுப்பாடும் இணேந்து, 1909—1911 காலப்பகுதிகட்கிடையில் இறப்பருக்குச் சாதகமான விலேப் போக்கினேக் கொண்டு வந்தது. இச் செழிப்பு நிலேமையைத் தொடர்ந்து ஏற்பட்ட மந்த நிலேயைச் சமாளிக்க ஸ்ரீவின்சன் கட்டுப்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது இத் திட்டம் தளம்பலற்ற சந்தை நிலேவரம் காரணமாக, 1928 ல் நீக்கப்பட்டது. 1930 ம் ஆண்டின் பின் மீண்டும் விலேகள் வீழ்ச்சியடைகையில், 1934 ல் சர்வதேச இறப்பர் ஒழுங்குபடுத்தல் உடன்படிக்கை கொண்டுவரப்பட்டுச் சந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகள் சீர் செய்யப்பட முனையப்பட்டது. 2ம் உலக யுத்தத்தின் போது இறப்பருக்கான உலகச் சந்தைக் கேள்வி அதிகரித்தமையை இலங்கை பயன்படுத்திக் கொண்டது. யுத்தத்தின் முடிவில் மலாயா சிங்கப்பூர் என்பன மீண்டும் இறப்பர் உற்பத்தியில் ஈடுபட்டதும், செயற்கை இறப்பருற்பத்தி நடைமுறைக்கு வந்ததும் மீண்டும் பாதகமான சந்தை நிலைமைக்கு வழி வகுத்தது. 1950 — 1951 காலப்பகுதியில் கொரியன் விலைச் செழிப்பு ஏற்பட்டது. யுத்த நிலைமைகளின் போது ஏற்பட்ட இறப்பர்த் தட்டுப்பாட்டின் காரணமாகவும் இந்நிலை தொடர்ந்தும ஏற்படலாம் என்ற அச்சமும் கைத்தொழில் நாடுகளைச் செயற்கை இறப்பருற்பத்தியை அதிகரிக்கத் தூண்டின.

1830 ம் ஆண்டிலிருந்து 1955 வரையிலான கடந்த 125 ஆண்டுகளில் இலங்கை ஏறக்குறைய 12 பெரிய வருமானத் தளம்பல்களையும், 42 சிறிய தளம்பல்களையும் கொண்டுள்ளது என எலெயின் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். எனினும், 1930 க்கு முற்பட்ட சுற்றோட்டங்கள், அதற்குப் பிற்பட்ட சுற்றோட்டங்களிலிருந்து வேறுபட்டன. 1930 க்கு முற்பட்ட தளம்பல்கள் மேற்நோக்கிய போக்கில் காணப்பட்ட தளம்பல்களாகக் காணப்பட்டன, இத்தத் தளம்பல்கள் மக்களினது வருமானத்தைப் பாதித்தது; பொருட்களினது விலைகள், உரிமையாளர்களது இலாபம் என்பவற்றைப் பாதித்தன. ஆனல், இவை யாவும் இடம் பெற்று வந்த பொருளாதார விரிவாக்கம், முதலீட்டு அபிவிருத்தி என்பனவற்றைத் தற்காலிகமாகத் தடை செய்வதாகவே இருந்தது. 1930 க்குப் பிற்பட்ட தளம்பல்கள் கீழ் நோக்கிய போக்கில் ஏற்பட்டு வந்த தளம்பல்களாகக் காணப்பட்டன. இது மேலும் முதலீட்டைக் குறைப்பதாகவும், நுகர்வைக் குறைப்பதாகவும் காணப்பட்டது.

பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் காணப்படும் முக்கிய குறைபாடுகளில் ஒன்ருன குறுங்கால ஏற்றுமதித் தளம்பல்கள், இலகுவாகத் நட்டிக் கழிக்கக் கூடியவையல்ல ஏனைய துறைகளையும் இது பாதிப்பதன் மூலம் பொருளாதார, அபிவிருத்தியைப் பாதிக்கக் கூடியது. ஏற்றுமதி வருமானத்தில் பெருமளவு தளம்பல்கள் காணப்பட்டால். அது ஏற்றுமதி வரி, தீர்வைகள் என்பவற்றின் மூலம் ஏற்படும் அரச வருமானத்தைக் குறைத்து அரச செலவீட்டையும் குறைக்கும். இந்தத் தளம்பல்களினுல். உற்பத்தியாளர்களது வருமானம், நம்பகமற்ற தன்மையுடையதாகக் காணப்படுவதனுல், அவர்களது முதலீட்டையும், அதன் மூலம் அவர்களது நுகர்வு முறைகளையும் அது பாதிக்கும். மேற் கூறிய காரணிகள் மறுபுறம் உள்நாட்டுத் தளம்பல்களை உருவாக்கி, அபிவிருத்தித் திட்டமிடல் வேலைகளை நெருக்கடிக்குள்ளாக்கி, பயன்படுத்தப்படும் முதலீட்டுச் சாதனங்களினது செயல் திறனைக் குறைக்கும்.

*சுதந்திரத்தின் பின் :*

பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் குறைபாடுகள் உணரப்பட்ட போதிலும், சுதந்திரத்தின் பின்னும் இந் நிலையில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை. அரசியல் சுதந்திரம், காலனித்துவப் பொருளாதாரக் கட்டமைப்பில் உடனடியாக எதுவித மாற்றத்தையும் கொண்டுவர முனையவில்லை. பொருளாதாரத்தை மீளக் கட்டமைப்பதற்கான கொள்கைகள் பல்வேறு அரசாங்கங்களினுலும் முன் வைக்கப்பட்ட போதிலும், மிகத் தீவிரமான கொள்கை மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. இம் மாற்றங்கள் ஒத்திவைக்கப்பட்டமைக்கு இரு காரணங்கள் கூறலாம். ஒன்று, கொரியன் செழிப்பு (1950 — 1952) தேயிலைச் செழிப்பு (1954—1955) என்பனவற்றின் பலாபலன்களைத் தொடர்ந்தும் அனுபவிக்கலாம் என்ற கொள்கை வகுப்பாளர்களின் எதிர்பார்ப்பு. இரண்டு, தமது அக்கறைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அரசியல் தலைவர்கள் புதிய முறையைப் பின்பற்றத் தயங்கியமை. 1958 ல் இருந்து இப் பயிர்களினது உலகச் சந்தை விலை வீழ்ச்சியும் பாரிய அளவு இறக்குமதிச் செலவு அதிகரிப்பும் இலங்கையின் சென்மதி நிலுவையில் பெருமளவு பற்ருக்குறையை ஏற்படுத்தின. செழிப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் சேகரிக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் துரிதமாகக் குறையத் தொடங்கின. 1960 ன் பின் வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைவடைந்து சென்றதாலும், ஏற்றுமதிப் பொருட்களினது விலை அதிகரிப்புக்கான வாய்ப்புகள் குறைந்து சென்றதாலும் அரசாங்கம் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த வேண்டி நேரிட்டது. இக் கட்டத்தில், கோட்டா முறையும், தனிப்பட்டவர்கட்கு இறக்குமதி அனுமதியும் வழங்கப்படுவதன் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாடு நடைமுறைக்கு வந்தது. இறக்குமதிப் பதிலீடு ஊக்குவிக்கப்பட்டது இறக்குமதிப் பதிலீடு, பெருந்தோட்டப் பொருட்களினது உற்பத்தியிலும், தொழில் வாய்ப்பிலும் சார்பு ரீதியிலான பங்களிப்பினைக் குறைத்ததன் மூலம், முன் நிலவிய பொருளாதார முறைமையில் சில மாற்றங்களைக் கொண்டுவர முனைந்தது. 1966 க்கும் 1970 ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்கு மிடையில் அறிமுகப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணிச் சான்றிதழ் திட்டமும் ( FEECS ), பாரம்பரியமற்ற பொருட்களினது உற்பத்தியையும், ஏற்றுமதியையும் ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டது. இத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதிப் பொருட்கள் யாவும் பாரம்பரிய - பாரம்பரியமற்ற பொருட்கள் என வகுக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஊக்குவிப்புகளைப் பெற்றுக்கொள்ளும் சிறு விவசாய ஏற்றுமதிப் பயிர்களும், கைத்தொழில் பொருட்களும் பாரம்பரியமற்ற பொருட்களாகக் காணப்பட்டன. இது ஏற்றுமதிப் பன்முகப் படுத்தலை நோக்காகக் கொண்டது

1970 இல் வந்த புதிய அரசாங்கம் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலைப் பொறுத்த வரை, இதே கொள்கையையே பின்பற்றி வந்தது. 1972/76 காலப்பகுதியிலான ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தொழிற் பொருட்களின் அடிப்படையில், ''பாரம்பரியமற்ற ஏற்றுமதித் துறை'' அபிவிருத்தி செய்யப்படல் உள்ளடக்கப்பட்டு இருந்தது. இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கத்தை விட, ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல் கைத்தொழில்களுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வர்த்தகப் பொருட்களினது ஏற்றுமதியில் பாரம்பரிய பொருட்களின் ஏற்றுமதியினது பங்களிப்பை, 65 வீதத்திலிருந்து 35 வீதமாகக் குறைக்க வேண்டும் என இத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டது. இதைவிட அந்நிய செலாவணிச் சான்றிதழ்த் திட்டம், மாற்றத்தகு ரூபாய்க் கணக்குத் திட்டம் என்பன பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதி ஊக்குவிப்புக்குக் கையாளப்பட்ட தந்திரோபாயங்களாகும். இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்கட்கான தீர்வையில் கழிவு, வரிச் சலுகைகள் போன்றன. ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில்களை ஊக்குவிக்கக் கையாளப்பட்டன 1977 ல் அந்நியச்செலாவணிச் சான்றிதழ்த் திட்டம், மாற்றத்தகு ரூபாய்க் கணக்குத் திட்டம் என்பன கைவிடப்பட்டன. ஆனால், இதே வருடத்தில் '' ஏற்றுமதியாளர்கள் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் '' கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதி ஒப்பந்தங்கட்கு வணிக வங்கிகள் ஏற்றுமதிப் பொருட்களைக் கொள்வனவு செய்ய, உற்பத்தி செய்ய, அல்லது பொதி செய்ய முற்பணங்களை வழங்கியது, அந்நியச் செலாவணிச் சான்றிதழ்த் திட்டத்துக்கு தகுதி பெறும் பண்டங்களின் ஏற்றுமதிக்காக வழங்கப்படும் முற்பணங்கட்கு ஏற்புடையதாக இத் திட்டம் காணப்பட்டது. இதே வருடத்தில் பொருளாதாரத் தாராண்மைக் கொள்கை அறிமுகப்படுத்தப் பட்டது. இத் தந்திரோபாயத்தின் கீழ் ஏற்றுமதியாளருக்கு — குறிப்பாகப் பாரம்பரியமற்ற ஏற்றுமதியாளருக்கு — ஏற்றுமதி செய்வதற்கான பல ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன. உதாரணமாக, 1979 ல் பாரம்பரிய, பாரம்பரியமற்ற பொருட்களினது ஏற்றுமதியைத் துரிதமாக அபிவிருத்தி செய்ய நிறுவனரீதியான ஆதரவு வழங்க இரு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அவையாவன: ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும், இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனமுமாகும். அரச - தனியார் பிரதிநிதிகளைக் கொண்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேசிய ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கைகள் திட்டங்கள் என்பவற்றினை உருவாக்குதல், கணித்தல், செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துதல், என்பனவற்றுக்குப் பொறுப்பாகும். இச்சபை பாரம்பரியமற்ற பொருட்கள் ஏற்றுமதிக்குப் பல ஊக்குவிப்புக்களைக் காலாகாலம் உருவாக்கி வருகிறது. உதாரணமாக 1981 ம் ஆண்டில் ஏற்றுமதியில் சிறப்பாக ஈடுபடும் நிறுவனங்கட்குச் ஜனாதிபதி ஏற்றுமதி வெகுமதிகளும், திறமைச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. இதே ஆண்டில், ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, இவற்றில் திறமையானவையும் பரிசுத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதித் திட்டம் ஏற்றுமதியாளருக்குக் கப்பலேற்றுவதற்கு முன்னும் பின்னும் தேவைப்படும நிதியினைப் பெறுவதற்கும், ஏற்றுமதிக் கட்டளைகளை நடைமுறைப் படுத்தக் கடன்களை உறுதிப்படுத்தவும் உதவும். இவற்றுடன், தனிப்பட்டவர்களின் வெளிநாட்டு முதலீட்டை ஏற்றுமதித் துறையில் அதிகரிக்கக் கொழும்பு பெரும் பொருளாதார ஆணைக்குழு தோற்றுவிக்கப்பட்டது.

பொதுவாக 1980 களில், பாரம்பரிய, பாரம்பரியமற்ற பொருட்கள் ஏற்றுமதிகட்கு ஊக்குவிப்புகள் வழங்கப்பட்ட போதிலும், ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலில் கூடிய நாட்டம் காட்டப்பட்டுள்ளமையைக் கீழ்வரும் அட்டவணை 1 விளக்குகின்றது. 1977ம் ஆண்டில் இலங்கையில் ஏற்றுமதி வருமானம் ஏறக்குறைய 71 வீதத்தைத் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களே ஈட்டித் தந்தன. 1985 ல் இதனது பங்கு 46 வீதமாகக் குறைவடைந்தது. மாறாக, பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் 1977 ல் 28 வீதமாகக் காணப்பட்டன. 1985 ல் 53 வீதமாக அவை அதிகரித்தன. பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளில் தைத்த ஆடைகளின் ஏற்றுமதியில் தங்கியிருத்தல், அடிப்படையில் பல குறைபாடுகளையுடையது. தைத்த ஆடைகளின் உற்பத்திக்கான உள்ளீட்டுக்கு இலங்கை பெருமளவில் வெளிநாட்டிலேயே தங்கியுள்ளது. அத்துடன், தைத்த ஆடைகள் ஏற்றுமதிக் கோட்டா முறைக்குட்பட்டது. பல வெளிநாட்டுக் கம்பனிகள் ஊழியச் செலவு குறைவு என்ற ஒரேயொரு காரணத்தினாலேயே இவ் உற்பத்தியை இலங்கையில் மேற்கொள்கின்றன. ஊழியச் செலவுக்குப் பதிலாக வேறு மாற்றுவழி கண்டுபிடிக்கப்பட்டால். இக் கைத்தொழில் இலங்கையில் நிலைத்து நிற்காது. எனவே, ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல் ஊக்குவிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்ற போதிலும், பன்முகப்படுத்தப்பட்ட முறையில் பல குறைபாடுகளுண்டு.

இலங்கையின் பொருளாதாரம் பெருந்தோட்ட உற்பத்திகளிலும், அவற்றின் ஏற்றுமதியிலும் தங்கியிருப்பதால் ஏற்பட்டுள்ள முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று, குறுங்கால ஏற்றுமதி வருமானத் தளம்பலாகும். இது வளர்முக நாடான இலங்கையால் புறக்கணிக்கக் கூடியதொன்றல்ல. இது நீண்ட காலப் பொருளாதாரத் திட்டமிடலுக்கும், அதனை நிறைவேற்றலுக்கும் தடையாக உள்ளது. பாரம்பரியமற்ற பொருட்களினது ஏற்றுமதியை ஊக்குவித்தல், இதற்கு ஒரு வழியாகும். 1970 களிலும் 1980 களிலும் இதற்கான பல ஏற்றுமதிக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு வரப்பட்டுள்ளன. எனினும், பாரம்பரியமற்ற பொருட்கள் ஏற்றுமதியில் கூடிய பங்கு தைத்த ஆடைகள் ஏற்றுமதியாகக் காணப்படல் இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வாகக் கருதப்பட முடியுமா? என்பது சந்தேகத்துக்கிடமான விடயமாகும்.

*உசாத்துணைப் பட்டியல்:*


1. Gamini Corea - "The Instability of an Export Economy". Marga Institute, 1975.
2. Gunawardana Ellaine: - "External Trade and The Economic Structure of Ceylon, 1900 - 1955" Apothecaries Company (Ltd.), Colombo.
3. Ponnambalam, Satchi - "Dependent Capitalism in Crisis". LED Press, (London) 1981.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிச்சந்தை

நுகர்வுப் பொருட்கள் சேவைகளுக்கு இருப்பது போலவே நிதிக்கும் சந்தைகள் காணப்படுகின்றன. இச் சந்தைகளின் வளர்ச்சி செயற்றிறன் என்பவற்றினைப் பொறுத்தே பொருளாதாரத்தில் நிதி அமைப்பும் தொழிற்படுகின்றது. இச் சந்தையிலே நிதிச் சொத்துக்களாகக் கருதப்படும் நோட்டுக்கள், வைப்புக்கள், காசோலைகள் உண்டியல்கள், பங்குகள் தொகுதிக் கடன்கள், பிணைகள் என பலதரப்பட்ட நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி குறுங்கால நீண்டகால கடன் மூலதனத்தைத் திரட்டக் கூடியதாக இருப்பதனுல், நிதிச்சந்தையை இறுக்கமற்ற கடன் சந்தை. நிறுவனங்களின் ஒரு கூட்டு என்றும் குறிப்பிடுவர். இச் சந்தையிலே பலதரப்பட்ட கடன்கள் பல்வேறுபட்ட வட்டி வீதங்களில் வேறுபட்ட நிறுவன அமைப்புகளுக்கூடாக கிடைக்கப்பெறுகின்றன. நன்கு வளர்ச்சி பெற்ற நிதிச்சந்தை காணப்படும் நாடுகளில் நிதிச் சந்தையிலே காணப்படும் ஒரு சந்தையில் பயன்படுத்தப்படும் வேறுபட்ட நிதிக் கருவிகளுக்கிடையே போட்டியும், ஒரு சந்தைக்கும் பிறிதொரு சந்தைக்குமிடையில் போட்டியும் நிலவுவது இயல்பாகும். ஆகவே ஒரு பொருளாதாரத்தின் நிதிச் சந்தையை விளங்கிக் கொள்வதற்கு அங்கு காணப்படும் பலதரப்பட்ட நிதிக் கருவிகளினதும் சந்தைத் தொழிற்பாட்டினைத் தனித்தனியாக விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

இக் கட்டுரையில் ஒரு நிதிச்சந்தையின் பொதுவான அமைப்பினையும் இலங்கையின் நிதிச் சந்தையில் விரைவாகவும் துரிதமாகவும் அபிவிருத்தி அடைந்து வரும் அமைப்புப் பணச் சந்தை, திறைச்சேரி உண்டியல் சந்தை, பங்குச் சந்தை என்பவற்றின் தொழிற்பாட்டினைத் தனித்தனியாகவும் பார்ப்பது எனது நோக்கமாகும்.


**இ. நந்தகுமாரன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*பொருளியற்றுறை,*
*யாழ். பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்.*

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No ___



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிச் சந்தையொன்றில் காணப்படும் பலதரப்பட்ட சந்தைகளினைக் காட்டும் விளக்கப்படம்



### நிதிச் சந்தையின் அமைப்பு.

ஒரு நிதிச் சந்தையின் அமைப்பினை அதனுடைய தொழிற்பாடு, நிறுவன அமைப்பு, அல்லது சார்ந்திருக்கும் துறையின் அடிப்படையில் பாகுபடுத்தலாம். தொழிற்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற கடன் நீண்டகாலமா, குறுங்காலமா என்பதைக் கொண்டு முறையே மூலதனச் சந்தை, பணச்சந்தை என்று பிரிக்கலாம். நிறுவன அமைப்பினைக் கொண்டு நோக்கும்போது ஒழுங்கு படுத்தப்பட்ட - ஒழுங்கு படுத்தப்படாத சந்தைகள் என்றும் குறித்த ஒரு துறையுடன் (விவசாயம், கைத்தொழில், வர்த்தகம்) மட்டும் தொடர்புகளைக் கொண்டிருப்பின் துறை சார்ந்தும் பாகுபடுத்தலாம். இவ்வாறு வெவ்வேறு அடிப்படையில் பாகுபடுத்தினாலும் இவற்றிற்கிடையே தெளிவான எல்லையை வகுப்பது மிகவும் கடினம். இலங்கையில் துறை சார்ந்த நிதிச்சந்தையோ நிதி நிறுவனங்களோ (விவசாய வங்கி, கைத்தொழில் அபிவிருத்தி வங்கி) தனித்துவமாக வளர்ச்சியடையவில்லை. மேலே உள்ள வரி விளக்கப்படமானது தொழிற்பாட்டு ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் பாகுபடுத்தப்பட்ட நிதிச்சந்தையை விளக்குகின்றது

தொழிற்பாட்டு ரீதியான பாகுபாட்டின் கீழ் பணச் சந்தையானது குறுங்கால நிதிவளங்களையும் மூலதனச் சந்தையானது நீண்டகால நிதிவளங்களையும் கையாள்கின்றன. பணச்சந்தையில் ஒழுங்குபடுத்தப்பட்ட குறுங்கால கடன் சந்தையில் அழைப்புக் கடன், திறைச்சேரி உண்டியல் இவற்றிற்கான சந்தை, இலங்கையில் அண்மைக் காலமாக குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டிருக்கிறது. இதேபோன்று மூலதனச் சந்தையில் பங்குச் சந்தையும் முதலீட்டாளர்கள் நிறுவனங்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளது. பணச்சந்தை கருவிகளாக வைப்புச் சான்றிதழ்கள், திறைச்சேரி உண்டியல்கள், மத்திய வங்கிப் பிணைகள் பயன்படுத்தப்படுகின்றது. அடுத்து வரும் பகுதியில் அழைப்புக்கடன், திறைச்சேரி உண்டியல், பங்குச் சந்தை என்பவற்றைத் தனித்தனியாக நோக்குவோம்.

### அழைப்புப் பணச் சந்தை (*Call Money Market*)

இந்தச் சந்தையில் பங்குபற்றுபவர்கள் பெரும்பாலும் வங்கிகளாக இருப்பதனால் இதனை வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை என்றும் அழைப்பர். இச் சந்தையில் வணிக வங்கிகளே முதன்மை வகிக்கின்றன. தேசிய சேமிப்பு வங்கியானது நிதி நிரம்பல் செய்யும் வங்கி என்ற ரீதியில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றது. இந்தச் சந்தையிலே பணம் பெறுபவர்கள் தற்காலிகமாக பணக்குறையைக் கொண்டிருக்கும் வங்கிகளாகவும், பணம் கொடுப்பவர்கள் தற்காலிக மிகையைக் கொண்டிருப்பவர்களாகவும் இருப்பர். மத்திய வங்கியானது வணிக வங்கிகளுக்கு இறுதிக் கடன் ஈவோனாக தொழிற்படுவது போல அழைப்புப் பணச் சந்தையானது ஒரு இடைநிலை அமைப்பாக மிகவும் குறுகிய காலத்திற்கு வங்கிகளின் தற்காலிக பணத் தேவையை ஈடுசெய்யும் ஒரு மூலாதாரமாக விளங்குகின்றது. பொதுவாக எவ்வித பொறுப்புக்களுமின்றியே வங்கிகளுக்கிடையிலான இக் கொள்ளல் கொடுத்தல்கள் இடம் பெறுகின்றன. ஆனால் பண மிகையை கொண்டிருக்கும் வங்கிக்கும் பணக்குறையை அனுபவிக்கும் வங்கிக்குமிடையிலான இணைப்பை ஏற்படுத்துவதில் பணத் தரகர் நிறுவனங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இலங்கையில் 1985 ஆம் ஆண்டு முதல் ஏழு நிறுவனங்கள் பணத்தரகர் நிறுவனங்களாக தொழில்படுகின்றன. கடன் கொடுக்கும் வங்கி திருப்பிக் கேட்ட மாத்திரத்திலேயே கடனைக் கொடுக்கக் கூடிய தகுதியுடைய வங்கிகளுக்கே அழைப்புப்பணச் சந்தையில் கடன் பெற வாய்ப்பும் வசதியும் அதிகம். எனவே சிறிய அளவில் வங்கித் தொழிலில் ஈடுபட்டுள்ள வங்கிகள் அதிகளவு நலன்களைப் பெற முடிவதில்லை. வங்கித் தொழிலில் ஒரு குறிப்பிட்ட வங்கியின் கையிருப்பில் உள்ள பணத்தினளவானது நேரத்திற்கு நேரம் மாறுபடும். இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமிகையை அனுபவிக்கும் வங்கி நாளை பணக்குறையில் காணப்படலாம். காலையில் வங்கி ஆரம்பிக்கும் போது இருந்த காசு மீதி அன்றைய தீர்வைகள் (Clearing) முடிவுற்றதும் பெரிதும் வேறுபடலாம். இத்தகைய துரிதமாக காசு மீதி மாற்றமடையும் வங்கித் தொழிலின் அமைதியான தொழிற்பாட்டிற்கு அழைப்புக் கடன் சந்தை பெரிதும் உறுதுணையாக இருக்கின்றது.

இச் சந்தை அதிகளவு போட்டியைக் கொண்டிருப்பதுடன் துரிதமாக மாற்றமடையவும் கூடியது. பணத்திற்கு ஏற்படும் கேள்வி நிரம்பலை உடனுக்குடன் பிரதிபலிக்கக் கூடிய சக்தி வாய்ந்தது இதனால் அழைப்புப் பணச் சந்தை ஒழுங்கு படுத்தப்பட்ட பணச் சந்தையின் திரவத்தன்மை எடுத்துக் காட்டக் கூடிய சிறந்த குறிகாட்டியாகும். அண்மைக் காலமாக இச் சந்தையின் வட்டிவீதமானது மிகப் பாரிய வீச்சினுள் மாற்றமடைந்துள்ளது. 1987ம் ஆண்டு மிகக் குறைந்த வட்டிவீதமானது 5 சதமாகவும் மிகக்கூடிய வட்டி வீதமானது 25 சத வீதமாகவும் காணப்பட்டது. ஆனால் 1988 இல் குறைந்த வட்டிவீதம் 5 சத வீதமாகவே இருக்க, மிகக்கூடிய வட்டி வீதமானது 36 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இச் சந்தையில் இக் காலப்பகுதிக்கு கைமாறிய கடனின் மொத்தப் பெறுமதி ரூபா 165, 589 மில்லியன் ஆகும் வட்டி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு சந்தையின் ஒரு பகுதியில் திரவத் தன்மைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியே காரணமாகும். அதாவது குறுங்கால பணத்திற்கான கேள்வி நிரம்பலில் ஏற்படும் தளம்பலே வட்டி வீதம் கூடிக்குறையக் காரணமாகும்.

## திறைச்சேரி உண்டியல் சந்தை

திறைச்சேரி உண்டியல்கள் அரசாங்கத்தின் குறுங்கால நீண்டகாலப் பொறுப்புக்களாகும் ஆரம்பத்தில் மூன்றுமாத முதிர்வு கால உண்டியல்கள் வழங்கப்பட்டன. தற்போது மூன்று, ஆறு மாத உண்டியல்களுடன் ஒரு வருட முதிர்வு காலத்தைக் கொண்ட உண்டியல்களும் வாரந்தோறும் அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றது. இதனை பொதுமக்கள், வங்கிகள் நிதி நிறுவனங்கள், தொழில் தாபனங்கள் யாருமே வாராந்த ஏல விற்பனையிலோ (முதற்தரச் சந்தை) அல்லது அதன் பின்னர் வேண்டிய போது இரண்டாம் தரச் சந்தையிலோ பெற்றுக் கொள்ளலாம். ரூபா ஆயிரத்தின் மடங்காகவே உண்டியல்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏலவிற்பனையில் நேரடியாகப் பங்குபற்றுவதானால் விண்ணப்பங்களை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிட்ட கழிவு வீதம் உயர்வாகக் காணப்படும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஏல விற்பனையில் விற்றவை போக மிகுதியை மத்தியவங்கி கொள்வனவு செய்யும்.

கோட்பாட்டு ரீதியில் அரசாங்கம் தனது வருமானத்திற்கும், செலவினத்திற்குமிடையேயுள்ள காலதாமதத்தின் பொருட்டு ஏற்படும் தற்காலிக பணத்தேவையை ஈடு செய்வதற்கு நிதி திரட்டவே இக்கருவியைப் பயன்படுத்துகிறது. ஆனால் நடைமுறையில் வருடா வருடம் வெளியே நிற்கும் திறைச்சேரி உண்டியல்களின் அதிகரித்து வரும் பெறுமதியைக் கொண்டு நோக்கும்போது இக்கருவி அரசாங்கத்திற்கு ஒரு நிரந்தர நிதி மூலாதாரமாக மாறிவருகிறது என்றால் மிகையாகாது. அதாவது ஒவ்வொரு வருடமும் முதிர்வு பெற்று கொள்வனவு செய்யப்படும் உண்டியல்களைவிட அதிகமான பெறுமதிக்கு புதிய உண்டியல்கள் சந்தையில் வழங்கப்படுகின்றன. 1986 ஆம் ஆண்டின் முடிவில் ரூபா 26170 மில்லியனாக இருந்த வெளிநின்ற திறைச்சேரி உண்டியல்களின் பெறுமதி 1988 ஆம் ஆண்டு முடிவில் ரூபா 43700 மில்லியனாக உயர்ந்திருக்கிறது.

திறைச்சேரி உண்டியல்களின் கொள்வனவு விற்பனைகள் கழிவு அடிப்படையில் நடைபெறுகின்றது முதிர்வு கால முடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No...

கொடுக்கப்பட வேண்டிய வட்டி அதனுடைய முகப்பெறுமதி விலையில் கழிவு செய்யப்பட்டு வழங்கப்படும் அதாவது ரூபா 100 முகப்பெறுமதியுடைய திறைச்சேரி உண்டியல் ஒவ்வொரு ஏல விற்பனையிலும் தேறப்படும் அளவைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும். கழிவு வீதத்திற்கேற்ப கழிவு செய்யப்பட்டு வழங்கப்படும். உதாரணமாக வருடத்திற்கான கழிவு வீதம் 18 சதவீதமானால் ஒரு வருட முதிர்வுடைய ரூபா 100 பெறுமதியான உண்டியலுக்கு வழங்கவேண்டிய தொகை ரூபா 82 மட்டுமே. வருட முடிவில் ரூபா 100 இனை மீண்டும் பெறலாம். நன்கு வளர்ச்சியடைந்த நிதிச் சந்தையில் திறைச்சேரி உண்டியல்கள் மிகவும் முக்கியமான ஒரு பணச் சந்தைக் கருவியாகும். இக் கருவி முதலீட்டாளர்கள், அரசாங்கம் மத்திய வங்கி எல்லோராலும் விரும்பப்படுவதொன்றாகும் கூடிய திரவத்தன்மை, குறைந்த ஆபத்து குறிப்பிடத்தக்க உயர் வட்டி இவற்றினால் முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சியாக உள்ளது. அரசாங்கம் தேவைக்கேற்ப உடனுக்குடன் நிதிதிரட்டப் பயன்படுத்துகின்றது. மத்திய வங்கியைப் பொறுத்து நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்த அதாவது தொகைக் கடன் கட்டுப்பாடான திறந்த சந்தை தொழிற்பாட்டினைச் செயற்படுத்தும் சக்திவாய்ந்த கருவியாக விளங்குகின்றது.

திறைச்சேரி உண்டியற் சந்தையில் முன்னர் குறிப்பிட்டது போன்று முதற்தர சந்தை இரண்டாம் நிலைச் சந்தை என்று இரண்டு சந்தைகள் காணப்படுகின்றன. மத்திய வங்கியிடமிருந்து நேரடியாக ஏலத்தின் மூலம் வங்கிகள், வங்கியல்லாத நிறுவனங்கள் கொள்வனவு செய்கின்ற சந்தை முதற்தரச் சந்தையாகும். மத்திய வங்கியானது தற்போது தனுடைய அனுராதபுரம் மாத்தறை, மாத்தளை பிராந்திய காரியாலயங்கள் மூலம் கொழும்பிற்கு வெளியேயும் திறைச்சேரி உண்டியல்களை விற்பனை செய்கின்றன. மத்திய வங்கி எல்லா மாவட்டங்களிலும் கிளைகளைக் கொண்டிராத காரணத்தால் முதற்தர சந்தையின் தொழிற்பாடு வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1988 ஆம் ஆண்டின் முடிவில் வெளிநிற்கின்ற திறைச்சேரி உண்டியல்களில் 74 சதவீதம் மத்தியவங்கியிடமே இருக்கிறது. முதற்தரச் சந்தையில் ஆண்டொன்றிற்கு 7 2 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையிலான கழிவில் மத்திய வங்கியல்லாத கொள்வனவுகாரருக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் மத்தியவங்கியானது ஒவ்வொரு வழங்கலின் போதும் வெவ்வேறு முதிர்வுகாலத்திற்குக் கொடுக்கப்பட்ட கழிவுவீதத்தினைக் கொண்டு கணிப்பிடப்பட்ட நிறையூட்டப்பட்ட கழிவு வீதத்திலேயே பெற்றுக் கொள்கின்றது.

இரண்டாம் தரச் சந்தையென்பது ஏலத்தின்மூலம் முதற்தடவையாக கொள்வனவு செய்த திறைச்சேரி உண்டியல்களை விற்பனை செய்தல் கொள்வனவு செய்தலையே குறிக்கும். இச்சந்தை தனிப்பட்ட சிறிய முதலீட்டாளருக்கும் உண்டியல்களை மீள்கழிவு செய்யவும் பெரிதும் பயனுடையதாகும். இதனுடைய அபிவிருத்தி சிறியளவிலான சேமிப்புக்களையும் ஒன்று திரட்ட பெரிதும் உறுதுணையாக இருக்கும். இரண்டாம் தரச் சந்தையில் பின்பற்றப்பட்டு வரும் துரிதமாக மாற்றமடையும் கழிவு வீதக் கொள்கையும், வணிக வங்கிகளின் மேலதிக திரவத் தன்மையும் அண்மைக் காலமாக இச் சந்தை உத்வேகமாக தொழிற்பட ஏதுவாக இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

### பங்குச் சந்தை

நிதிச் சந்தைகள் வளர்ச்சியடைந்த சகல நாடுகளிலும் நீண்ட கால முதலீட்டுக்களைத் திரட்டுவதில் பங்குச் சந்தை வகிக்கும் இடம் மிகவும் முக்கியமானது தொழிலில் உள்ள ஒரு தாபனம் தொழிற்பாட்டினை விரிவாக்கவோ அல்லது புதிய தொழில்களை ஆரம்பிக்கவோ தேவைப்படும் நிதியை பொதுமக்களிடமிருந்து பங்குகளை வழங்குவதன் மூலம் ஒரு முறையிலேயோ அல்லது கட்டம் கட்டமாகவோ நிதியைத் திரட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டினையே பங்குச் சந்தை செய்கின்றது. இவ்வாறு முதலிடப்பட்ட பணத்திற்கு வாடிக்கையாளருக்கு பங்கு இலாபம் கிடைக்கும். தாபனத்தினுடைய விருத்தியையும் வளர்ச்சியையும் பொறுத்து பங்குகளில் சந்தைப் பெறுமதியும் உயர்வடையும். இதன் மூலமாக முதலீட்டு பெறுமதி கூடிய வருவாயும் கிடைக்கும் இங்கும் திறைச்சேரி உண்டியல்களில் உள்ளது போல முதற்தரச் சந்தை, இரண்டாம் நிலைச்சந்தை என்பன உண்டு.

முதற்தர சந்தையானது முதன் முறையாக வெளியிடும் புதிய பங்குகள் தொடர்பான நடவடிக்கைகள், அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள் என்பவற்றைக் குறித்து நிற்கும். மறுபுறத்தில் இரண்டாம் தரச் சந்தையினை எடுத்துக் கொண்டால் முன்னர் வழங்கப்பட்ட பங்குகளை அதாவது நிதிச் சொத்துக்களுக்கு முதல் நட்டமின்றி உடனடி திரவத்தன்மையை வழங்க ஏற்பாடு செய்தலாகும். ஒரு சந்தர்ப்பத்தில் மிகையாக காணப்படும் பணத்தினை நீண்ட கால முதலீடுகளில் முதலிட்டால் வேண்டிய போது பணமாக மாற்றக்கூடிய, அதுவும் அதிகளவு முதல் நஷ்டமின்றி பணமாக மாற்றக் கூடிய வழிவகைகள் காணப்படாவிட்டால் நீண்ட கால முதலீட்டைத் திரட்டுவது மிகவும் கஷ்டமாக இருக்கும். எனவே இரண்டாம் தரச் சந்தையின் ஒழுங்கமைப்பும் சிறந்த தொழிற்பாடும் மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்கு அவசியமாகும். அத்துடன் இரண்டாம் தரச் சந்தை ஒரு நாட்டினது முதலீட்டுச் சூழ்நிலையை எடுத்துக் காட்டும் சிறந்தவொரு குறிகாட்டியுமாகும். இரண்டாம் தரச் சந்தையில் கைமாறும் பங்குகளின் அளவு அவற்றின் விலைகளில் ஏற்படும் மாற்றம், சந்தையின் போக்கினைக் காட்டவல்ல குறிகாட்டிகளின் மாற்றங்கள் இவற்றினைக் கொண்டு குறித்த கம்பனியினதும் நாட்டினதும் முதலீட்டுச் சூழ்நிலைகள், நிதிநிலைகள் என்பவற்றை எடுத்துக் கூறலாம். ஆதலால் இரண்டாம் நிலைச் சந்தையின் அபிவிருத்தியும் செயற்பாடும் முதற்தரச் சந்தையின் விருத்திக்கு வந்திருகின்றது என்றால் மிகையாகாது.

கொழும்பு பங்குச் சந்தை (Colombo Securities Exchange-C S E) ஆரம்பகட்டத்தில் இருக்கின்றது. பல்வேறு சட்டங்கள் ஒழுங்குகளை அறிமுகப்படுத்தி சந்தையின் தொழிற்பாட்டினை ஒழுங்கு செய்துள்ளது சந்தை மேற்கொண்டு துரிதமாக வளர்ச்சி பெறுவதற்கு வேண்டிய, சிறுவன ஒழுங்குகள் கொள்கைத் திட்டங்கள் யாவும் முற்றுப் பெற்றுவிட்டன எனலாம். கொழும்பு பங்குச் சந்தையின் செயற்பாட்டினைப் பிரதிபலிக்கக்கூடிய இரண்டு குறிகாட்டிகள் வெளியிடப்படுகின்றது. பொது விலைமட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினைக் காட்டிடும் எல்லாப் பங்குகளினதும் விலைக் குறிகாட்டி (All Share Price Index A S P I) ஒன்று. மற்றது, உணர்வுபூர்வ பங்கு விலைக்குறிகாட்டி. (Sensitive Share Price Index-S S P I). இது சந்தையின் உள் உணர்வினைக் காட்ட வல்லது எனலாம். இக்குறிகாட்டி தெரிவு செய்யப்பட்ட முதற்தர ஆபத்துக் குறைந்த 25 கம்பனிகளின் பங்குகளின் (Blue Chip Shares) விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுவதாகும். பங்குச் சந்தையின் விலை உயர்ந்து செல்லும் போக்கினை எருதுச்சந்தை (Bullish Market) எனவும் விலை வீழ்ச்சி அடைந்து போகும் நிலையினை கரடிச் சந்தை (Bear Market) எனவும் அழைக்கும் வழக்கமுண்டு.

பங்குச் சந்தையின் சிறந்த செயற்பாட்டிற்கும் முதலீட்டாளர்களது நம்பிக்கையை பாதுகாக்கவும் கம்பனிகளின் ஒழுங்கு நடவடிக்கைகள், தகவல்களை வெளிப்படுத்துவதில் நேர்மை, விண்ணப்பதாரிகளுக்கு உடனுக்குடன் விளக்கமளித்தல், முதலீட்டாளர்களுக்கு உரிய நேரத்தில் பங்கு இலாபம் வழங்கல் இன்னோரன்ன விடயங்களில் கவனம் செலுத்தல் அவசியமாகும். கொழும்பு பங்குச் சந்தையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் 1987 இல் ஆவணங்களுக்கான கவுன்சில் (Securities Council) தாபிக்கப்பட்டது. இக்கவுன்சில் உடனடி நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கையாக பங்கு கைமாறல்களின் போது ஏற்படும் காலதாமதம், வீண் செலவுகள் என்பவற்றைப் போக்க நடவடிக்கை எடுத்துள்ளது. 1988 ஆம் 1989 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட உறுதியற்ற அரசியல் நிலை, ஆரம்ப நிலையிலிருந்த பங்குச் சந்தையை வெகுவாகப் பாதித்தது. பொதுவாக வங்கி, நிதிக்கம்பனிகள், காப்புறுதித் தாபனங்களின் பங்குகள் கூடியளவில் கைமாறத்திற்குள்ளானது. உல்லாசப் பயணிகள் தொழிலோடு சம்பந்தப்பட்ட கம்பனிகளின் பங்குகளின் விலை பெரிதும் வீழ்ச்சியடைந்தன. 1988 ஆம் ஆண்டு புதிய பங்கு வழங்கல் மூலம் ஏறத்தாழ ரூபா 200 மில்லியன் மூலதனம் திரட்டப்பட்டுள்ளது. இதே போன்று ஏறத்தாழ ரூபா 380 மில்லியன் பெறுமதியான பங்குகள் இரண்டாம் தரச் சந்தையில் கைமாறியுள்ளன.

மேற்குறிப்பிட்ட மூன்று சந்தைகளை விட வர்த்தக உண்டியல்கள் பிணைப்பத்திரங்கள், ஆவணங்கள் என்பவற்றிற்கான சந்தைகளும் இலங்கையிலும் பிறநாடுகளிலும் காணப்படுகின்றன. இவற்றில் வர்த்தக உண்டியல்கள் அதிகளவு வெளிநாட்டு வர்த்தகத்துடன் பயன்படுத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம். இவ்வாறே அந்நியச் செலாவணிக்கான ஒரு சந்தையும் இயங்கி வருகின்றது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இச் சந்தை செயற்படுகின்றது. இந்தக் கட்டுரையில் இடம் கருதியும் தற்போதைய சூழ்நிலையில் இவற்றினது குறைந்த முக்கியத்துவம் கருதியும் இங்கு விரிவாக ஆராய முன்வரவில்லை. நிதிச் சந்தைகள் நன்கு அபிவிருத்தியடைந்த இலண்டன், நியூயோர்க், யப்பான் போன்ற நாடுகளில் பொருளாதாரத்தின் செயற்பாடும் நிதிச் சந்தையின் தொழிற்பாடும் ஒன்றில் ஒன்று பெரிதும் தங்கியிருப்பதைக் காணலாம். குறைவிருத்தி நாடுகள் உள்நாட்டுச் சேமிப்பினை ஒன்று திரட்டி மூலதனவாக்கத்தினை மேம்படுத்த நிதிச் சந்தையினதும் நிதிக் கருவிகளினதும் அபிவிருத்தியும் வளர்ச்சியும் இன்றியமையாததாகும்.

**

உலகம் என்னை எவ்வாறு காண்கிறது என நானறியேன். ஆனால், நானோ கடற்கரையில் கிடக்கும் விசித்திரமான கூழாங்கற்களிலும் விநோதமான கிளிஞ்சற் சிப்பிகளிலும் என் கவனத்தைச் சிதறவிட்டு விளையாடுகின்ற ஒரு சிறுவனாகவே என்னைக் காண்கின்றேன். எனினும் என்னைச் சுற்றிலும் உண்மை என்னும் பெருங்கடல் இன்னும் வெளிக்கொணரப்படாத இரகசியங்களைத் தன்னகத்தே கொண்டு பரந்து கிடக்கிறது.

— ஐசக் நியூட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை இன்மையும்
# இலங்கையில் அதன் போக்கும்

தொழில் செய்யும் ஆற்றலையும் தொழில் செய்யும் விருப்பினையும் உடைய ஊழியம், எந்தவித தொழிலும் இன்றி இருக்கும் நிலையே வேலையின்மை எனப் படும். அதாவது வேலைப்படையில் எந்த வித வேலையும் இல்லாதவர்களையும் வேலை தேடிக் கொண்டிருப்பவர்களையும் அதனால் வருமானம் பெறுதவர்களையும் குறிக்கிறது. இலங்கையில் 1978 ம் ஆண்டிலேயே முதன் முதலாக வேலையின்மையின் அளவு குறை வடையத் தொடங்கியது எனலாம். அண் மைக்காலத் தரவுகளினடிப்படையில் இலங் கையில் 2 இலட்சம் பேர் வேலையின்றி உள் ளார்கள் எனவும் இந்த வேலையற்றவர்களில் 35% வீதமானோர் க. பொ. த. [ G. C. E.] தகைமை உடையவர்கள் எனவும் அறிய முடிகிறது.

### வேலை இன்மை வீதம்

ஒரு நாட்டில் வேலை செய்வதற்கு ஆற் றலும் ஆர்வமும் இருந்தும் எதுவித வேலை யும் இல்லாது இருப்பவர்களின் எண்ணிக் கையினை [வேலை இன்மையின் அளவினை] தொழிற் சேனையின் நூற்றுவீதமாகக் கூறு தல் தொழில் இன்மைவீதம் எனப்படும்.

வேலை இன்மைவீதம் = வேலை இன்மையின் அளவு $\times$ 100 தொழிற் சேனை [தொழிற் படை]

இலங்கையின் மொத்தசனத் தொகையில் வேலைப்படையின் வேலையின்மை வீதம் 1988 ம் ஆண்டில் 18.2% ஆக இருந்து 1989 ம் ஆண்டில் 19.9% ஆக அதிகரித் துள்ளது. 1990ம் ஆண்டில் வேலையின்மை வீதமானது 21.4% ஆக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

க. சுரேஷ்குமார்
ஆண்டு 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை இன்மை என்பதனை பொதுவாக பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**1) வெளிப்படையான வேலையின்மை.**

வேலை செய்வதற்கு தகுதியும், விருப்பமும் உள்ள வேலைப்படையினர் எதுவித வேலையும் இல்லாது இருப்பதே வெளிப்படையான வேலை இன்மை ஆகும். எனவே ஒரு நாட்டின் வேலை இன்மை என்பது இந்த வெளிப்படையான வேலை இன்மையைக் குறிக்கும் எனக் கூறலாம்.

**2) மறைமுக வேலை இன்மையும் கீழ் உழைப்பும்**

குறிப்பிட்ட ஒரு தொழிலில் உள்ள ஊழியர்களில் ஒரு பகுதியினரை அத்தொழிலில் இருந்து நீக்கிய போதிலும் மொத்த உற்பத்தியானது மாற்றமடையாது இருக்குமாயின் வெளியேற்றப்பட்ட தொழிலாளர்கள் மறைமுக வேலை இன்மையில் இருந்துள்ளார்கள் எனக் கூறலாம். மறைமுக வேலையின்மையினுலேயே கீழ் உழைப்பு ஏற்படுகின்றது. அதாவது ஒரு குறிப்பிட்ட வேலையினைச் செய்வதற்கு தேவையான அளவு தொழிலாளரை விட மிகுதியான அளவு தொழிலாளரை ஈடுபடுத்தும் போதே கீழ் உழைப்பு ஏற்படுகின்றது எனலாம். எனவே ஒரு உற்பத்திக் காரணி ஊழியம் தனது ஆற்றலிலும் பார்க்க குறைந்த தரத்தில் வேலை செய்யும் போது தனது முழு ஆற்றலையும் உற்பத்தியில் ஈடுபடுத்த முடியாத நிலை இருக்கும். இதுவே கீழ் உழைப்பு எனப்படும்.

கீழ் உழைப்பு பின் வரும் நிலைமைகளில் ஏற்படுகின்றது.

i) ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு தேவையான அளவு தொழிலாளர்களிலும் பார்க்க மிகுதியான தொழிலாளர் காணப்படும் பொழுது கீழ் உழைப்பு காணப்படுகிறது.

ii) முழு நேர வேலை வாய்ப்பு கிடைக்காத பொழுது கீழ் உழைப்பு காணப்படும். அதாவது தொழிலாளர் வேலை நாட்கள் முழுவதும் வேலை செய்வதற்குத் தயாராக இருந்த பொழுதிலும் குறைந்து நாட்களுக்கு வேலை கிடைக்குமாஞல் அங்கு கீழ் உழைப்பு காணப்படும்.

iii) தகுதிக் கேற்ற அல்லது திறமைக் கேற்ற வேலை கிடைக்காத போது அங்கும் கீழ் உழைப்பு காணப்படும்.

[உ + ம்] பட்டதாரி ஒருவர் சாதாரண எழுதுவினைஞராக வேலை செய்யும் பொழுது அவரது முழு ஆற்றலும் உற்பத்தியில் ஈடுபடுத்த முடியாததனுல் கீழ் உழைப்பு காணப்படுகிறது.

**3) பருவகால வேலை இன்மை**

ஒரு பருவத்திற்கு வேலைகிடைத்து பின் அடுத்த பருவம் வரும்வரை வேலைகிடைக்காது இருக்கும் நிலையே பருவகால வேலை இன்மை எனப்படும். நெல், உப உணவு உற்பத்தி என்பவற்றின் விதைப்புக்காலம், அறுவடைக்காலம் போன்ற பருவத்தில் வேலைகிடைத்து ஏனைய காலப் பகுதியில் வேலை இன்மை காணப்படுகிறது. எனவே இவ்வேலையின்மை கிராமிய விவசாயத்தில் அதிகமாக உள்ளது எனக் கூறலாம்.

**4) உராய்வு வேலை இன்மை**

ஒரு வேலையில் இருந்து இன்னுமொரு வேலைக்கு வேலை தேடிச் செல்லும் போது அவ் இடைக்காலத்தில் ஏற்படும் வேலையின்மை உராய்வு வேலை இன்மை எனப்படும்.

ஒரு பொருளாதாரத்தில் வேலை இன்மை அதிகரிக்கும் போது மனிதவளம் பயன்படுத்தப்படாது வீண் விரயமாகும். இதனுல் நாட்டின் உற்பத்தி இயல் அளவு பெறப்படமாட்டாது. எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்து காணப்படும். எனவே ஒரு நாட்டில் வேலை இன்மை வீதம் அதிகரிக்கும் போது நாட்டின் அடிப்படையான மனித தேவை பூர்த்தி செய்யப்படாத நிலை காணப்படுவதோடு நாட்டில் இருக்கும் வறுமை நிலையினையும் உயர்வடையச் செய்கின்றது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை இன்மை காரணமாக இளைஞர்கள் மத்தியில் விரக்தி, வெறுப்புணர்ச்சி என்பன அதிகரித்து அமைதி இன்மை ஏற்படுகிறது இதனால் நாட்டில் அரசியல் குழப்பங்கள் கலாச்சார சீர்கேடுகள் ஏற்பட்டு பொருளதாரப் பின்னடைவு ஏற்படும்.

இலங்கையில் வேலைப்படையினரின் அதிகரிப்புக்கு ஏற்ப வேலைவாய்ப்புகள் கிடைக்காததனாலும், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளினால் ஏற்படும் வேலை வாய்ப்புக்கள் வேலைப்படையினரின் அதிகரிப்பிலும் பார்க்க குறைவாக இருந்தமையாலும் வேலை இன்மை அதிகரித்து வந்தது. பொதுவாக இலங்கையில் வேலை இன்மை அதிகரிப்பு ஏற்பட்டமைக்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கொள்ள முடிகிறது.

(1) சனத்தொகைப் பெருக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு.

(2) கல்வி அமைப்பில் காணப்பட்ட குறைபாடு.

(3) மூலதனச் செறிவான தொழில் நுட்பத்தைக் கையாண்டு வந்தமை.

(4) இளைஞர்களின் காற்சட்டை உத்தியோக எதிர்பார்ப்பு. அதாவது தாம் எதிர்பார்த்த வேலை கிடைக்காத காரணத்தினால் வேலை இன்றி இருந்தமை.

(5) அபிவிருத்தித் திட்டங்கள் தோல்வியடைந்தமை.

(6) சுய தொழில் திட்டங்கள் குறைவாகக் காணபபட்டமை.

(7) பெண்களின் நிலை மாற்றம் அதாவது உயர் கல்விபெற்றுத் தொழிலை எதிர்பார்த்தமை.

(8) தொழில் வாய்ப்பு பின்னணி வசதிகள் குறைவாகக் காணப்பட்டமை. அதாவது கடன் வசதி, தொழில் நுட்ப ஆலோசனை போன்ற வசதிகள் இன்மை.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் வேலை இன்மை அதிகரித்து வந்தது எனினும் 1977ம் ஆண்டுக்குப் பின்னர் வேலையின்மையின் அளவு, 1983ம் ஆண்டு காலப் பகுதிவரை குறைவடைந்து வந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும். இதற்குப் பின் வரும் காரணங்களைக் கூறலாம்.

(1) விரைவுபடுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற பெரியளவான அரச முதலீட்டுத்திட்டங்கள் உருவாக்கப்பட்டமையால் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்து வேலை இன்மை குறைவடைந்தது.

(2) அரச வீடமைப்புத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை.

(3) முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்.

(4) பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம்.

(5) தாராள இறக்குமதியினால் வர்த்தகத்துறை விரிவடைந்தமை.

(6) 1978 ல் போக்குவரத்துத்துறை தனியார் மயமாக்கப்பட்டமை.

(7) மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட வேலை வாய்ப்புக்கள்.

(8) பெரும்பாலான இந்தியர்கள், இந்தியவம்சாவழித் தொழிலாளர்கள் குடிபெயர்ந்து இந்தியா சென்றமை.

போன்ற காரணங்களால் 1977 க்குப் பின் வேலை இன்மையின் அளவு குறைவடைந்தது ஆயினும் 1983ம் ஆண்டிற்குப் பின்னர் வேலையின்மையின் அளவு அதிகரித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்குபின் வரும் காரணங்கள் ஏதுக்களாக அமைந்தன.

(1) விரைவுபடுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித்திட்டம் போன்ற அரச முதலீட்டுத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டமையால் வேலைவாய்ப்புக்கள் குறைவடைந்து வேலை இன்மையில் அதிகரிப்பு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை யினால் அரச வீடமைப்புத்திட்டங்கள், உல்லாசப்பிரயாணிகளுக்கான ஹோட்டல் (Hotel) கட்டும் வேலைகள்குறைவடைந்தமை.

(3) பொருளாதார செயற்பாட்டில் காணப்பட்ட மந்தமான போக்கு.

(4) இனப் பிரச்சினையும், பயங்கரவாத போக்கும், அரசியல் ஸ்திரமற்ற தன்மையும் காணப்பட்டமை.

(5) மத்திய கிழக்கு நாடுகளில் பொருளாதார வசதிகள் குறைந்தமையினால் அந்நாடுகளுக்கு வேலை தேடிச்செல்வோரின் அளவு குறைவடைந்தமையும், வேலை செய்வதற்கான ஒப்பந்த காலம் முடிவடைந்து படிப்படியாக நாடுதிரும்பியமையும்.

(6) இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் இந்தியா செல்வது குறைவடைந்தமை.

போன்ற காரணங்களால் வேலைவாய்ப்பு வளர்ச்சி வீதம் குறைவடைந்து வேலை இன்மை அளவு அதிகரித்தது.

இலங்கையின் வேலையின்மையின் அளவினை அறிவதற்கு உதவும் மூலகங்கள்.

இலங்கையின் வேலையின்மையின் அளவினை அறிந்து கொள்வதற்கு பின்வரும் மூலகங்கள் பயன்படுகின்றன.

(1) குடித்தொகை மதிப்பீடு
(2) நுகர்வோரின் நிதி அளவீடு
(3) தொழிற்படையின் அளவீடு
(4) சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் மதிப்பீடு
(5) கிராமப்புற வேலைவாய்ப்புப் பற்றிய மதிப்பீடு
(6) திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் மதிப்பீடு

இவை போன்ற மூலகங்களைப் பயன்படுத்தி 1987 ம் ஆண்டுவரை இலங்கையின் வேலையின்மை பற்றிய தகவல்களை பெறக்கூடியதாக இருந்தது. ஆயினும் 1987 ம் ஆண்டுக்குப்பின் கிடைக்கும் தரவுகள் பல்வேறு மதிப்பீடுகளின் மாதிரி அளவீடுகளாகவே அமைந்துள்ளன. இதனால் இலங்கையின் வேலையின்மையின் போக்கை அறிய உதவும் மூலகங்களைக் கொண்டு வேலையின்மையின் அளவை ஒப்பிட முடியாதுள்ளது இதற்குப் பல காரணங்களைக் கூறமுடியும் குறிப்பாக,

(1) வேலைப்படையினராகக் கருதப்படும் வயது, தகுதி வேறுபடுதல்.

அதாவது குடிசன மதிப்பீட்டின்படி 10 55 வயதுடையோர் வேலைப்படையினராகக்கருதப்படுகின்றனர். ஆனால் நுகர்வோர் நிதி சமூக பொருளாதார ஆய்வின்படி 15—60 வயதுடையோர் வேலைப்படையினராக கருதப்படுதல்.

(2) வெவ்வேறுபட்ட காலப்பகுதியில் இம் மதிப்பீடுகள் ஏற்பட்டதனால் பருவகால வேலையின்மை வேறுபடும். இதனால் வேலையின்மையின் அளவும் பாதிப்படைந்து காணப்படுகிறது.

(3) தொழில் செய்வோர் பற்றிய கருத்து வேறுபாடுகள்: அதாவது நுகர்வோர் நிதி சமூக பொருளாதார ஆய்வின்படி சம்பளத்துக்காக குடும்பநன்மைக்காக ஆய்வு நடாத்த வாரத்தில் ஒருநாளில் குறைந்தது 3 மணித்தியாலங்கள் வேலை செய்யும் அளவில் தொழில் செய்பவர்களாக கருதப்படுவர்.

ஆனால் குடிசன மதிப்பீட்டின்படி சம்பளத்துக்காகவோ குடும்ப நன்மைக்காகவோ வாரத்துக்கு குறைந்தது 15 மணி நேரம் வேலை செய்பவர் தொழில் செய்பவராக கருதப்பட்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமையச் செலவு

*(i) அமையச் செலவு எனப்படுவது*

ஒன்றினைப் பெறுவதற்காக இழக்கப்படும் மற்ற ஒன்றின் பெறுமதியே அமையச் செலவாகும்.

அதாவது ஒன்றினைப் பெறுவதற்காக விட்டுக்கொடுக்கப்படும் அதி சிறந்ததொன்றின் பெறுமதியே அமையச் செலவாகும்.

அருமைப்படும் மாற்று உபயோகமும் உடைய மூலவளங்களை ஒரு குறிப்பிட்ட தேவைக்கு பயன்படுத்தும் போது அவ் வளங்களின் ஏனைய உபயோகங்கள் அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டியுள்ளது இவ்வாறு விட்டுக் கொடுக்கப் படுவதில் மிகச் சிறந்த தொன்றின் பெறுமதியே ஒன்றைப் பெறுவதற்கான அமையச் செலவாகும்.

*(ii) பொருளாதார நடவடிக்கைகளில் அமையச்செலவு ஏற்படுவற்கான காரணங்கள்.*

1. வளங்கள் பற்றுக்குறையாக இருத்தல்
2. வளங்கள் பயன்பாடு உடையதாக அதாவது மாற்று உபயோகம் உடையதாய் இருத்தல்.

அருமையானதும் அதே நேரத்தில் மாற்று உபயோகம் உடைய வளங்களை குறிப்பிட்ட ஒரு தேவைக்கு பயன்படுத்தப்படும் போது அவ் வளங்களின் ஏனைய உபயோகங்கள் யாவும் தியாகம் செய்யப்படுகின்றன. வளங்கள் அருமையானதும் மாற்று உபயோகம் உடையதாகவும் இருக்கும் போது ஒன்றைப் பெறுவதற்கு இன்னுமொன்று இழக்கப்படுவதனுல் தான் அமையச்செலவு ஏற்படுகின்றது.

*(iii) அமையச் செலவை உதாரணத்தின் மூலம் விளக்குதல் வாடகைக்கு விடப்படும் ஒரு கட்டத்தின் அமையச்செலவு*

K. R. சதீஸ்குமார்
ஆண்டு 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் நகரில் மருந்துக்கடை வைப்பதற்கு ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுக்க உத்தேசித்துள்ளார் எனக் கொள்வோம். அக் கட்டடத்தின் அமையச்செலவு அதனை வேறு ஏதாவது உபயோகத்திற்கு வாடகைக்கு விடுவதனால் கிடைக்கக் கூடிய உயர்ந்த வாடகைப் பெறுமதியினால் தீர்மானிக்கப்படும்.

அதாவது அக்கட்டடத்திற்கு பல உபயோகங்கள் இருக்கும் போது எந்த உபயோகத்திற்கு கொடுத்தால் கூடுதலான வருமானம் பெற வாய்ப்புள்ளதோ அப்பெறுமதியினையே அக் கட்டடத்தின் அமையச் செலவாகும்.

உ-ம்: மருந்துக்கடை வாடகை — 2000/-
*மறுவாய்ப்புகள்*
நகைக்கடை வாடகை — 1500/-
பலசரக்குக்கடை வாடகை - 1100/-
புடவைக்கடை வாடகை — 1800 -

∴ மருந்துக்கடைக்கு கட்டடத்தை பெறுவதற்கான அமையச்செலவு இழக்கப்படும் புடவைக்கடையின் வாடகை ஆகும்.

*(iv) உற்பத்தி அடிப்படையில் நுகர்வுச் செலவு*

அருமையானதும் மாற்று உபயோகம் உடையதுமான சாதனங்களை குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட உதிக்கு பயன்படுத்தும்போது அந்தச் சாதனங்களை பயன்படுத்து உ/திக்கு செய்யக் கூடிய வேறு உ/திக்கு தியாகம் செய்யப்படுகின்றன. இவ்வாறு இழக்கப்படும் சிறந்ததொரு மாற்று உ/தியின் பெறுமதியே அமையச்செலவாகும்.

குறிப்பிட்ட வளங்களைப் பயன்படுத்தி இரு பொருட்களை மாத்திரம் உ/தி செய்யக் கூடிய நிலை காணப்படும் போது ஒரு பொருளின் உ/தியை அதிகரிப்பதற்காக விட்டுக் கொடுக்கப்படும் மற்றுமொரு பொருளின் உ/தி அளவே அமையச் செலவாகும்.

உ-ம்: ஒரு மேசையினை உ/தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட வளங்களை உபயோசித்து 4 கதிரைகள் உருவாக்கமுடியுமாயின் ஒரு மேசையின் உ/தி செய்வதற்கான அமையச் செலவு 4 கதிரைகள் ஆகும்.

*(v) நுகர்வு அடிப்படையில் அமையச்செலவு*

ஒரு பொருளை கொள்வனவு செய்வதற்காக விட்டுக் கொடுக்கப்பட்ட மற்ற பொருளின் பெறுமதியே நுகரப்பட்ட பொருளின் அமையச்செலவாகும்.

ஒருவர் தனது குறிப்பிட்ட வருமானத்தில் ஒரு பகுயை OR முழு வருமானத்தையும் குறிப்பிட்ட பொருளை கொள்வனவு செய்வதற்கு செலவிடும் பொழுது அச் செலவிடும் பணத்தை தக் கொண்டு வேறு பொருள் கொள்வனவு செய்வதை தியாகம் செய்ய வேண்டியுள்ளது.

உ+ம்: 5000/- வருமானம் உடைய ஒருவர் 50/- விலையுடைய X பொருளையும் 100/- விலையுடைய Y பொருளையும் வாங்கக்கூடியதாக இருக்கும்போது அவர் 100 X பொருளை கொள்வனவு செய்தல் அதற்கான அமையச் செலவு 5 OY பொருளாகும்.

*(vi) முதலீட்டு நடவடிக்கையில் காணப்படும் அமையச் செலவு சொந்த நிதியை முதலீடு செய்வதற்கான அமையச்செலவு*

ஒருவர் தனது சொந்த நிதியினை பல்வேறு வழிகளில் முதலீடு செய்யலாம்.

1. வணிக வங்கியில் நிலையிலான வைப்பிலிட்டு வட்டி மருமானத்தைப் பெறலாம்.
2. வேறு நிறுவனங்களில் பங்குகளை கொள்வனவு செய்து பங்கிலாபத்தை வருமானமாகப் பெறலாம்.
3. சுயமாகத் தொழிலை ஆரம்பித்து OR தனது தொழிலில் முதலீடு செய்து லாபத்தை வருமானமாகப் பெறலாம். இவ்வாறு ஒருவர் தனது சொந்த நிதியை முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

எனவே ஒருவர் தனது சொந்த நிதியை பயன்படுத்தி தொழில் ஒன்றை ஆரம்பிப்பராயின் அதற்கான அமையச்செலவு அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப் பணத்தை வர்த்தக வங்கியில் நிலையான வைப்பிலிட்டு பெற்றிருக்கக்கூடிய ஆகக் கூடிய வருமானத்தின் அளவாகும்.

ஒருவர் வங்கியிலுள்ள நிலையான வைப்பில் தனது பணத்தை மீளப்பெற்று ஒரு வியாபாரத்தில் முதலீடு செய்வதைப் பற்றி தீர்மானிப்பதற்கு இவ் வியாபாரத்தின் மூலம் கிடைக்கக் கூடிய வருமானத்தினை இழக்கும் வட்டிவருமானத்துடன் ஒப்பிட்டு தீர்மானத்தை மேற்கொள்ளமுடியும்.

(vii) *கல்வியில் காணப்படும் அமையச் செலவு*

ஒரு மாணவன் பெறும் கல்விக்கான அமையச்செலவு அக் கல்விக்காக செலவிடப்படும் பணத்தினல் அல்லாதது அக் கல்வி பெறும் காலத்தில் பெற்றிருக்கக்கூடிய தொழிலிருந்து கிடைக்கும் வருமான இழப்பின் அளவினல் தீர்மானிக்கப்படும்.

ஒருவர் 4 வருட பல்கலைக்கழக கல்வியை பயில்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள அதே நேரத்தில் மாதம் 2000/- வருமானம் தரக்கூடிய தொழில் வாய்ப்பு ஒன்று அவருக்கு கிடைக்கின்றது என வைத்துக்கொள்வோம். இந்நிலையில் மாணவன் பல்கலைக்கழக கல்வியைப்பெறுவதற்கான அமையச் செலவு பின்வருமாறு மதிப்பிடலாம்.

4 வருடம் மேற்படி கல்வியைப்பெறும் காலத்தில் அம் மாணவன் கல்வியைத் தொடராது தொழிலுக்குச் சென்ருல் பெற்றிருக்க கூடிய வருமானத்தின் அளவு 96000/ ஆகும். அம் மாணவன் மேற்படி கல்வியை தொடர்வதனல் தொழிலுக்குச் செல்லாது விடுவதன் மூலம் இழக்கின்ற சம்பளம் 96000 அமையச் செலவாகும்.

ஆனல் அம் மாணவன் மகாப்பொல போன்ற ஏதாவது ஒரு புலமைப்பரிசிலைப் பெற்றிருந்தால் அப் புலமைப்பரிசின் பணத் தொகையினல் இழக்கும் வருமானத்தின் ஒரு பகுதி ஈடுசெய்யப்படும். பல்கலைக்கழக கல்வி பெறும் காலத்தில் கல்விக்கு நேரடியாக அல்லாத பல செலவுகளையும் அம் மாணவன் செய்யவேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

(viii) *ஒரு தொழிலதிபரின் அமையச்செலவு*

தனது நிறுவனத்தை தானே நிர்வகிக்கின்ற ஒரு தொழிலதிபதின் அமையச் செலவானது அவர் வேருெரு தொழிலதிபரின் நிறுவனத்தின் நிர்வாக வேலைக்குச் சேர்ந்தால் பெறக்கூடிய சம்பளத்தின் அளவே அவரின் அமையச் செலவாகும்.

(ix) *தொழிலின் அமையச் செலவு*

ஒருவர் ஒரு தொழிலிருந்து மற்ருெரு தொழிலுக்கு மாறும்பொழுது புதிய தொழிலில் அவருக்குக் கிடைக்கக் கூடிய வருவாய் தான் பழைய தொழிலின் அவரின் அமையச் செலவாகும்.

(x) *அரசாங்க செலவினத்தில் காணப்படும் அமையச்செலவு*

1. அரசாங்கம் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கும் பண்டம் சேவைகளுக்கான அமையச் செலவு.
2. அரசின் நலன்புரிச்சேவைகளுக்கு ஏற்படும் அமையச் செலவு.
3. அரசின் பாதுகாப்புச் சேவைகளுக்கு ஏற்படும் அமையச்செலவு.

நாட்டின் பாதுகாப்புப்படைகளின் அமையச் செலவு பாதுகாப்புப் படைகளுக் குச் செலவிடப்படும் பணத்தைக்கொண்டு கட்டியிருக்கக்கூடிய தொழிற்சாலைகள், கால்வாய்கள், பாலங்கள் போன்றவற்றின் இழப்பினல் அளவிடப்படும்.

இலங்கை அரசாங்கம் புகையிரத பாதையினை புனரமைத்து நவீன மயப்படுத்துவதற்காக வெளிநாட்டு அரசாங்கம் ஒன்று குறிப்பிட்ட தொகையளவு அந்நியச் செலவணிப் பணத்தை நன்கொடையாக வழங்குவதற்கு தயாராகவுள்ளது, புகையிரதப் பாதையினைச் செப்பணிடுவதற்காக இலங்கை அரசாங்கம் தனது வருவாயிலிருந்து குறிப்பிட்ட அளவு பணத்தையும் செலவிடவேண்டியிருக்குமாயின் வெளிநாட்டு நன்கொடை பணத்தை பெறுவதற்கு அமையச் செலவுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் அரசாங்கம் தனது வருவாயி லிருந்து செலவிடும் பணத்தைக் கொண்டு செய்திருக்கக்கூடிய நலன்புரிச் சேவைகள் OR ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை தியாகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே தான் இங்கு வெளிநாட்டுப் பணத்தை பெறுவதற்கு அமையச் செலவு காணப்படு படுகின்றது.

*(x) அமையச் செலவு பூச்சியமாக காணப் படல்*

*1. வேலையற்றோர் செய்யும் பொதுப்பணி வேலைகளுக்கான அமையச்செலவு*

பருவகால வேலையின்மை காரணமாக OR வேறு காரணங்களினால் சிலர் வேலை எதுவுமின்றி இருக்கும்போது அவர்களது வரு மானம் பூச்சியமாக இருக்கும் எனக் கருத லாம். இந் நிலையில் அரசாங்கம் பொதுப் பணிகளைச் செய்வதற்காக அவர்களை கவலைக்கு அமர்த்தினால் அப் பொதுப்பணி களுக்கான அமையச் செலவு பூச்சியம் OR பூச்சியத்திற்கு அண்மியதாக காணப்படும்.

பொதுப் பணிகளை மேற்கொள்ளாவிட் டால் அப் பணியில் ஈடுபடும் பருவகால வேலையின்மை உடைய ஆட்கள் வேறு எந்த வேலைக்கும் பயன் படுத்தப்படாமல் வீணாக வேயிருப்பர் இந் நிலையில் இத்தகைய வேலையின்மையிலுள்ளவர்களை பொதுச் சேவையின் உ/தி பயன்படுத்தப்படும்போது அவர்கள் வேறு வேலைவாய்ப்பை எதும் தியாகம் செய்யாத காரணத்தினால் அவர் கள் செய்யும் பொதுப் பணிக்களுக்கான அமையச் செலவு பூச்சியம் ஆகும்.

*2. ஒரேயொரு உபயோகம் உடைய உழைப்பு என்ற காரணியின் அமையச் செலவு பூச்சியமாக இருக்கும்.*

ஒரேயொரு பயன்பாடுடைய உழைப்பு என்ற காரணிக்கு குறுங்காலத்தில் பிற வாய்ப்புக்கள் கிடைக்காது இருப்பதனால் அதன் அமையச் செலவு பூச்சியமாகும்.

*அரசாங்கம் (சமூகம்) கணிப்பிடும் அமையச் செலவும் தனியார் கணிப்பிடும் அமையச் செலவும்.*

தனியார் கணிப்பிடும் அமையச் செல விற்கும் ஓர் நாட்டு அரசாங்கம் கணிப்பிடும் அமையச் செலவிற்கும் இடையில் வேறு பாடு காணப்படுகின்றது.

சமூகத்தின் அமையச் செலவு மிகவும் ஆழ்ந்த கருத்தினைக் கொண்டுள்ளது. தனிப் பட்ட ஒருவன் 5000/- ரேடியோவைக் கொள்வனவு செய்யும்போது அதன் அமை யச் செலவு ரேடியோவிற்கு செலவிட்ட பணத்தைக்கொண்டு கொள்வனவு செய் திருக்கக்கூடிய வேறு பொருளின் பெறுமதி ஆகும்.

ஆனால் இந்த ரேடியோவை மிகக் கூடு தலான சத்தத்துடன் நள்ளிரவில் பாவிப் பதை தடுப்பதற்கு சட்டம், பொலிஸ் என்பன தேவைப்படுகின்றன. எனவே அர சாங்கத்திற்கு ரேடியோச் செலவுடன் இத் தகைய செலவுகளும் ஏற்படுகின்றது. எனவேதான் சமூகம் மதிப்பிடும் அமையச் செலவு ஆழ்ந்த கருத்துக்களை உடையதாக வுள்ளது.

தனிப்பட்ட நிறுவனங்கள் தமது நட வடிக்கையினால் சமூகத்திற்கு ஏற்படும் செல வீனங்களைக் கவனிப்பாது கிடையாது.

உ+ம் ஒரு தனியார் நிறுவன தொழிற் சாலையின் கழிவு நீர் போன்றவற்றினால் அயலவருக்கு ஏற்படும் வியாதிகளுக்கான மருந்துச் செலவை தனி நிறுவனம் கவனிப் பதில்லை.

*அமையச்செலவை பணரீதியில் கணிக்க முடியாமை.*

அமையச் செலவை கணிப்பதற்கு பணச் செலவை மாத்திரம் கருதினால் போதாது பிற காரணங்களுக்காக குறைந்த வருமான முடைய தொழிலை சிலர் விரும்புவது உண்டு. இந் நிலையில் அமையச் செலவை பண ரீதி யில் கணிக்க முடியாது.

ஒரு சட்டப்பட்டதாரியான வழக்கறிஞர் ஒருவர் தனிப்பட்ட வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டால் மாதம் 20 000/- உழைக்க முடியும் எனக் கருதுவோம் அவருக்கு மறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பாக சட்ட விரிவுரையாளர் தொழில் உள்ளது. அவர் சட்டக் கல்லூரி விரிவுரையாளராக தொழி புரிந்தால் மாதம் 10000/- வருமானத்தை பெறலாம் என வைத்துக் கொண்டால் வருமான வேறுபாட்டுத் தொகை 10000/- ஆகும் ஆனால் அந் நபர் விரிவுரையாளர் தொழிலில் ஈடுபடுவது அவர் பெம் ஓய்வு, மனநிறைவு கௌரவம் என்பவற்றின் பெறுமானம் ஈடுகின்றார். எனவேதான் அமையச் செலவை கணிப்பதற்கு பணரீதியில் அல்லாது பிறவிடயங்களையும். அவதானிக்க வேண்டியுள்ளது.

அமையச் செலவை கணிப்பிடுவதற்கு தடையாக பல்வேறு விடயங்கள் காணப்படுகின்றன. ஒரேயொரு உபயோகத்திற்கு மாத்திரம் பயன்படுத்தக்கூடிய காரணங்களுக்கு அமையச் செலவு ஏற்படுவது.

உ+ம சிறந்த நடிகர் ஒருவர் தனது நடிப்புத் தொழிலிலே சிறப்பு ஆற்றல் பெற்றவராவர். அவர் பெறும் வருமானத்தை அமையச் செலவினால் பாகுபடுத்த முடியாது இது செலவில்லாத செலவு எனப்படும்:

குறிப்பு:- அமையச் செலவை பின்வரும் பெயர் கொண்டும் அழைக்கப்படுகிறது. அவை யாவன அமையக்கிரயம் பிறவாய்ப்புச் செலவு, மறுவாய்ப்புச் செலவு தியாகச் செலவு, உறழ்வழிச் செலவு, சந்தர்ப்பச் செலவு வாய்ப்பு பெறுமானம்.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

**

(————————————)

## கல்வி பற்றி காந்தி

*கல்விக்கூடங்கள் நம்மை மனிதராக்குவதற்காக ஏற்பட்டவை நமது பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளுமோ நம்மை அடிமைகளாகவும் கோழைகளாகவும் அவநம்பிக்கை ஐந்துக்களாகவும் மனோதிடமற்றவர்களாகவும் ஆக்கியிருக்கின்றன.*

*துர்பாக்கிய வசமாக நாம் பெறுகிற கல்வி நமது சூழ்நிலையுடன் எவ்விதத் தொடர்பும் அற்றதாயிருக்கிறது*

(————————————)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். வை எம். சித்தீக்
B. Com (Hons)., M.B.A.
பீடாதிபதி, வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# இலங்கைப் பங்குச்சந்தை பற்றிய ஒரு நோக்கு

## சுருக்க வரலாற்றுக் குறிப்பு

பல முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் பங்குச்சந்தை வளர்ச்சி குன்றியதாகவே காணப்படுகின்றது [1] இருந்தும் பங்குச்சந்தை என்பது இலங்கைக்கு புதிய ஒன்றல்ல. இது இலங்கையில் தொண்ணூறு வருடகால பழைமையுடையது. " 1885ல் கொழும்பு பங்குத்தரகர்கள் சங்கத்தின் தோற்றத்துடன் இலங்கைப் பங்குச் சந்தையின் தோற்றத்தைக் காணலாம்."[2]

"1835 க்கும் 1895க்கும் இடைப்பட்டகாலத்தில் தேயிலைக் கைத்தொழில அபிவிருத்தி செய்யத்தேவையான மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கமாக கொழும்பிலும், லண்டனிலும் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் உருவாக்கப்பட்டன."[3] இம் மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கம், கொழும்பு பங்குச் சந்தையின் பிறப்புக்கு வழி கோலியது. இதனால் இக்காலத்தில் உருவாக்கப்பட்ட தேயிலைக்கம்பனிகள் தமக்குத்தேவையான மூலதனத்தை இச்சந்தை மூலம் திரட்டக் கூடியதாக இருந்தது.

இந்நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில், உலகச் சந்தையில் கிடைத்த உயர் விலை காரணமாக றப்பர்க் கைத்தொழில் தொடர்ச்சியான வளர்ச்சி கண்டது. இதனால் றப்பர் பயிர்ச் செய்கை நிலப்பரப்பில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டது. இதனால் மூலதனம் அவசரமாகத் தேவைப்பட்டதுடன், பல வரையறுக்கப்பட்ட ரூபாய்க்கம்பனிகளின் தோற்றத்தையும் இது அவசியமாக்கியது.

காலம் நகர்ந்த போது, பல வர்த்தக முயற்சிகள் பெருந் தோட்டத்துறைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்ததுடன், பிரித்தானிய வர்த்தக சமூகத்தினரும் அவர்களுக்குத் தேவையான வணிக முதலைத் தேடிக் கொள்வதற்கு இலங்கைப் பங்குச் சந்தையின் சேவைகளை நாடினர். இதிலிருந்து, பங்குச் சந்தையும், ஏனைய சந்தைகளைப் போல், புதிய மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதற்கானதாக மட்டுமன்றி, ஏற்கனவே வழங்கப்பட்ட பங்குகளுக்குமானதாக மாறியது.

1948 வரை, கொழும்பு பங்குச் சந்தை சுறுசுறுப்பாக இயங்கியதுடன், இலங்கைப் பங்குகளில் மட்டுமன்றி லண்டன், பம்பாய், சிங்கப்பூர் ஆகியவற்றின் பங்குகளிலும் ஈடுபாடுகளைக் கொண்டதாக விளங்கியது. ஆனால், 1948 ஜூன் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுடன் வெளிநாட்டுப் பங்குகளுக்கான சந்தை நடவடிக்கைகள் பெருமளவு கட்டுப்படுத்தப் பட்டன. பெருந்தோட்டத் துறையைத் தேசிய மயமாக்கல் போன்ற பாதகமான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை, பின்வந்த அரசாங்கங்கள் பின்பற்றியமையினால், பங்குச் சந்தையின் வீழ்ச்சி மேலும் தொடர்ந்தது. பல பெருந்தோட்டப் பங்குகள் பங்குச் சந்தையில் கீழ்நிலைக்குச் சென்றன. இதனால் பங்குச் சந்தை முதலீட்டாளர்களின் நம்பிக்கை ஆட்டங்கண்டது. பங்குச் சந்தையின் மந்தநிலை தொடர்ந்தது. தரகு நிறுவனங்களும் இதனை ஒரு இலாப நோக்குடைய தொழிலாகச் செய்யாமல், ஒரு தேசிய சேவையாக நினைத்து, தொடர்ந்து செய்தார்கள். அவர்கள் தமது தரகுநிறுவனங்களை மூடிவிட நினைக்கவில்லை.

மேலும் 1981லிருந்து, பங்குச் சந்தை சுறுசுறுப்படைந்து கொண்டு வருவதுடன், பங்குச் சந்தையில் இடம் பெற முயலும் கம்பனிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. 1981க்கும் 1985க்கும் இடைப்பட்ட நான்கு வருடகாலத்தினுள் எண்பத்தியாறு மூலவழங்கல்கள் (Original Issues) மேற்கொள்ளப்பட்டன; மேலும் நாற்பத்திரண்டு உரிமை வழங்கல்கள் (Rights Issues) மேற் கொள்ளப்பட்டன. மேற்படி நான்கு வருட காலத்தினுள் மேற்கொள்ளப் பட்ட மொத்த வழங்கல்களின் பெறுமதி சுமார் அறுநூற்றி முப்பத்தியொன்பது கோடி ரூபாக்களாகும். கடந்த இரண்டு வருட காலத்தினுள்ளும் மொத்தமாகக் கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையிலும், கைமாற்றங்களின் எண்ணிக்கையிலும், மொத்த விற்பனைப் பெறுமதியிலும் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இக்குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டசில ஊக்குவிப்புகள், கொழும்பு செகியுரிட்டீஸ் எக்சேஞ்ஜ் ( Colombo Securities Exchange ) இனால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்பன காரணமாக இருக்கலாம். வங்கி வைப்புக்களின் மீதான வட்டிக்குறைப்பு, 1985/86 ம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் நிதியமைச்சரினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான வைப்புக்களின் வட்டி மீதான மீட்பு வரி 20 வீதம் போன்றனவும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

## அண்மைக்கால வளர்ச்சியைத் தாமதப்படுத்திய சில காரணிகள்:

ஆனால் அண்மைய கடந்த காலங்களில் சில தடைகள் இல்லாதிருந்திருக்குமாயின் மேற் கூறிய வளர்ச்சி இன்னும் வேகமானதாக இருந்திருக்கும்.

மிக இலாபகரமாக இயங்கும் கம்பனிகள் பங்குச் சந்தையில் பங்கு கொள்ள விரும்புவதில்லை; ஏனெனில் நிதித்தேவைகளை நிறைவு செய்வதற்கு பல இலகுவான வழிகள் அவற்றிற்குக் காணப்படுகின்றன. உதாரணமாக இலங்கையில் சுமார் எழுபத்தைந்து வங்கி - நிதித் தொழில்களில் ஈடுபடும் பொது வரையறுக்கப்பட்ட கம்பனிகள் காணப்படுகின்றன.[6] இவை மிக இலாபகரமாக இயங்குபவை. ஆனால் பங்குச் சந்தையில் ஒன்பது வங்கி - நிதிக் கம்பனிகளே பட்டியலிடப்பட்டுள்ளன (Listed).[7] பெரும்பாலான கம்பனிகள் பங்குச் சந்தையில் பங்குகொள்ளாமைக்கு, உயர் முகாமையிலுள்ள இக் கம்பனிகளின் நிர்வாகிகள் தமது அதிகாரத்தை இழக்க விரும்பாமலிருப்பது அல்லது அதிகாரத்தை இழக்கப்பயப்படுவது காரணமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளை, புதிய-நீண்டகால -நிச்சய மற்ற திட்டங்களையுடைய கம்பனிகள் பங்குச் சந்தையில் பங்கு கொள்ள விரும்புகின்றன. ஏனெனில் அவற்றிற்கான நிதி மூலங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வகையான கம்பனிகளில் உள்ளடங்கியுள்ள அல்லது எதிர் பார்க்கப்படும் ஆபத்துக் காரணமாக பங்கு விற்பனைக்கு உத்தரவாதமளிப்போர், (Underwriters) உத்திரவாதமளிக்க விரும்பா மலிருப்பதுடன், முதலீட்டாளர்களும் இக் கம் பனிகளின் பங்குகளை வாங்குவதற்கு விரும்பு வதில்லை.

தாமதமான அல்லது மெதுவான இலங் கைப் பங்குச் சந்தை வளர்ச்சிக்கான கார ணங்களில் ஒன்றாக பங்கு வியாபாரத்தில் கடந்த காலங்களில் முதலீட்டாளர்கட்கு ஏற் பட்ட நட்டத்தைக்கூறலாம். இந்நட்டத்திற்கு பங்கு வழங்கும் கம்பனியைப் பற்றியபோதிய அறிவின்மை காரணமாக இருக்கலாம். இன்னும் சில முதலீட்டாளர்கள் தாம் எதிர் பார்த்த இலாபம் கிடைக்காதபடியினால் பங்கு வாங்கி விற்றலைக் கைவிட்டிருக்கலாம் இது உண்மையாக விருக்கலாம்; ஏனெனில் பங்குச்சந்தையில் ஈடுபட முயலும் கம்பனி களில் பெரும்பாலானவை சிறு நட்டங்களைக் கடந்த காலங்களில் ஏற்படுத்திய கம்பனிக ளாக அல்லது சிறிதளவு இலாபங்களை உழைத்துக் கொண்டிருக்கும் கம்பனிகளாக வே காணப்படுகின்றன. உதாரணமாக 1986ம் ஆண்டு காலத்தினுள் புதிய பங்குகளை வழங் கிய ஆறு கம்பனிகளில், ஒரு கம்பனி மட்டுமே கடந்த காலங்களில் குறிப்பிடக்கூடியளவு நல்ல இலாபத்தை உழைத்த கம்பனியாகும்.[8] ஒரு கம்பனி கடந்த ஆண்டுகளில் நட்ட மடைந்தது.[9] ஏனைய நான்கு கம்பனிகளும் மிகக்குறைந்தளவு இலாபத்தையே கடந்த காலங்களில் உழைத்திருந்தன.[10]

ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் இது ஒரு வித்தியாச மான அனுபவமாகும். பல தென்கிழக்காசிய நாடுகளிற்கூட, கடந்த காலங்களில் ஆகக் குறைந்தது பத்து வீத (%) பங்கு இலாபம் வழங்கிய கம்பனிகள் மட்டுமே பங்குச்சந்தை யில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுகின்றன. இந்த ஆகக்குறைந்த தேவையை மேற்கூறிய ஆறு கம்பனிகளில் ஒன்றுமட்டுமே பூர்த்தி செய்திருந்தது. மேலும் கவனிக்கப்பட வேண் டிய விடயம் என்னவெனில், வேறுபலநாடு களில் ஏற்கனவே உள்ள கம்பனிகளுக்கே பங்குச்சந்தையில் பங்குகொள்ள அனுமதி வழங்கப்படுகின்றது கம்பனிப் பங்குகளில் முதலீடுவதனால் ஏற்படக்கூடும் என எதிர் பார்க்கப்படும் ஆபத்துக்களினால், முதலீட்டா ளர்கள் தமது பணத்தை புதிய கம்பனிகளில் இட விரும்புவதில்லை.[11] மேலும், கடந்த காலங் களில் புதிய, இலாபகரமற்ற ஆபத்து நிறைந்த கம்பனிகளில் முதலீடு செய்து தமது பணத்தில் ஒரு பகுதியை இழந்த தனிநபர் கள், எதிர்காலத்தில் தொடர்ந்தும் பங்குச் சந்தையில் ஈடுபடவிரும்புவதில்லை[12]

இலங்கைப் பங்குச்சந்தையின் மெதுவான வளர்ச்சிக்கு, சில கம்பனிப் பங்குகளின் கை மாற்றலைத் தடைசெய்தமை, பங்குச்சந்தை யில் இருந்து சில கம்பனிகள் விலகிக்கொண் டமை, சிலகம்பனிகளின் பெயர்கள் பங்குச் சந்தையின் பிரதானபட்டியலில் இருந்து உப பட்டியலுக்கு மாற்றப்பட்டமை என்பனவற் றைக் காரணமாகக் கொள்ளலாம்.[13]

மேலும் இனப்பிரச்சினை இலங்கையில் உருவாகாமல் இருந்திருக்குமாயின், பங்குச் சந்தையில் புதிய கம்பனிகளின் எண்ணிக்கை கூடியிருக்கக் கூடும். இதனால் பங்குச்சந்தை மேலும் வளர்ச்சி பெற்றிருக்கக் கூடும். ''ஹோட்டல் உல்லாசப் பிரயாணத்துறை'' தான் 1983 வரை பங்குச்சந்தையில் பிர தானதுறையாக இருந்து வந்தது. இன்னும் பங்குச்சந்தையில் 67 கம்பனிகள் பங்குபற்று கின்றன.[14] ஒரு தனிப்பட்டதுறை ரீதியாகப் பார்க்கும்போது பங்குச்சந்தையில் 22% இனை இத்துறை அபகரித்துக்கொண்டுள்ளது. 1985 ம் ஆண்டைய கட்டுநாயக்கா விமான நிலையக் குண்டுவெடிப்பின் மூலம் இத்துறை மேலும் பாதிக்கப்பட்டது. ஜூலை 29 இன் இலங்கை இந்திய ஒப்பந்தம், ''ஹோட்டல் உல்லாசப் பிரயாணத்துறைக்கு'' நல்லதொரு எதிர்காலத்தைக் கொண்டு வரும் என எதிர் பார்க்கப்படுகின்றது இதனை ஜூலை 29 இன் பின்பு இத்துறைப்பங்குகட்கு ஏற்பட்ட அதிக கிராக்கியும், விலைஉயர்வும் எடுத்துக்காட்டு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்காலத்தில் பங்குச்சந்தையைப் பாதிக்கக்கூடிய சிலகாரணிகள்:

கடந்த காலங்களில் பங்குச்சந்தையில் ஏற்பட்ட அதே அபிவிருத்தி எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்படுகின்றன. 1986 / 87 ம் ஆண்டைய வரவு - செலவுத்திட்டப்பேச்சு வரை, பங்கு மாற்றுதல்களினுல் ஏற்படும் மூலதன நயங்கட்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுவந்தது. ஆனுல் இச்சலுகை 1985 / 87 வரவு செலவுத்திட்டத்தின்மூலம் நிதியமைச்சரினுல் வாபஸ் பெறப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் பங்குச்சந்தையில் பங்குபற்றும் முதலீட்டாளர்களின் எண்ணிக்கையினையும் புதிய கம்பனிகளின் எண்ணிக்கையினையும் பாதிக்கக் கூடும்.[5] கம்பனி உருவாக்கலை ஊக்குவிப்பதற்காகவும், கம்பனி உடைமையைப் பரந்துபடச் செயவதற்கும் 1979 ல் நிதியமைச்சரினுல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு ஊக்குவிப்புத்தான் இந்த மூலதன மிகை வரிவிலக்காகும். இவ்வாபஸ் பெறுதல்மூலம் முதலீட்டாளர்கள் பங்குச்சந்தை மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர். பங்கு மாற்றலால் ஏற்படும் மூலதனமிகை மீதான வரிவிலக்கு வாபஸ் பெறப்படும் என்று நிதியமைச்சர் அறிவித்த அடுத்தநாள் 13.11. 1986 அன்று பங்குச்சந்தையின் சராசரி நாளாந்த விற்பனை 6 முதல் 7 இலட்சத்திலிருந்து 70 ஆயிரமாக வீழ்ச்சியடைந்தது.[16]

மேலும் மலேசிய அரசாங்கத்தினுல் கொண்டுவரப்பட்ட ''மண்ணின் மைந்தன் கொள்கை'' யினுலும் பங்குச்சந்தையில் தற்போதுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை குறைவடையலாம். இக் கொள்கையின்படி எந்த வெளிநாட்டு முதலீட்டாளரும், மலேசிய அடிப்படையிலான கம்பனிகள்மீது கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருக்க முடியாது. இக்கொள்கை 1986 லிருந்து அமுல் நடாத்தப்பட்டுவருகின்றது. 1989 ம் ஆண்டிற்குமுன், வெளிநாட்டவர் உடைமையாகக் கொண்டுள்ள சொத்துக்கள் யாவும் மலேசியப் பிரஜைகட்கு மாற்றப்படல் அல்லது விற்கப்படல் வேண்டும்.[17] பங்குச்சந்தையில் தற்பொது ஐந்து மலேசிய அடிப்படையிலான கம்பனிகள் காணப்படுகின்றன. இக்கம்பனிகள் கிட்டிய எதிர்காலத்தில் பங்குச்சந்தையிலிருந்து விலகிக் கொள்ளும்.

## இன்றைய பங்குச்சந்தை

கொழும்பு செகியுரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ஜ் இனுல் நிர்வகிக்கப்பட்டுவரும் பங்கு வர்த்தகத்தலம் வேலைநாட்களில் காலை 10.00 மணிக்கும் மத்தியானம் 12.00 மணிக்கும் இடையில் திறக்கப்படுகின்றது. இந்த இரண்டு மணித்தியாலங்களுக்கு தமது பங்குக்கைமாற்றல்களை முடிக்கத்தக்கவாறு தரகர்கள் வற்புறுத்தப்படுகின்றுர்கள். பல முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்த இரண்டு மணித்தியாலம் மிகவும் குறுகிய ஒரு காலமாகும். உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் சந்தை ஆறு மணித்தியாலங்கள் திறந்திருக்கும்.[8] இலங்கைப் பங்குச்சந்தையில் ஒன்பது தரகுநிறுவனங்கள் மட்டுமே ஈடுபடுகின்றன. இதுகூட மிகச்சிறியதொரு எண்ணிக்கையாகும். ஐக்கிய அமெரிக்காவில் 1970ன் நடுப்பகுதியில் 4,000 நிறுவனங்கள் பங்குத்தரகு வேலையில் ஈடுபட்டிருந்தன. நியூயோர்க் பிரதேசத்தில் மட்டும் 2,000 நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தன.[19] மேற்படி ஒன்பது தரகுநிறுவனங்களிலும் கிட்டத்தட்ட ஐம்பது பேர்மட்டுமே ஈடுப்பட்டுள்ளனர்.[20] ஆனுல் ஐக்கிய அமெரிக்காவில் இத்தொகை 200,000 பேர் ஆகும்[21]

கொழும்பு பங்குச்சந்தையில் 168 கம்பனிகள் மட்டுமே பங்கு கொள்கின்றன. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள 40,000 கம்பனிகளுடன் ஒப்பிடும் போது இது கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாத ஒன்று. கட்டாயம் குறிப்பிடப்படவேண்டிய விடயம் என்னவெனில், இரண்டு கம்பனிகளின் பங்குகள் மட்டுமே ஆகக்குறைந்தது கிழமைக்கு ஒரு முறையாவது கைமாற்றப்படுகின்றன. இலங்கையில் விலைகூறப்பட்ட கம்பனிகளின் பங்குகள் திரவத்தன்மை மிகக் குறைந்தவை என்பதையே இது தெளிவாக்குகின்றது.[23]

தொண்ணூறு வயதுடைய இலங்கையின் பங்குச்சந்தையில் இருநூறு முதலீட்டாளர் மட்டுமே தீவிரமாகப்பங்கு கொள்வோராவர்.[24] மேலும் கொழும்பையும், அதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றியும் வாழ்வோரே இவர்கள் மேற்கூறிய பண்புகள். கொழும்பு பங்குச்சந்தை தொண்ணூறு வயதிலும் குழந்தைக்குரிய குணம்சங்களையே கொண்டிருக்கின்றது என்பதையே காட்டுகின்றது.

அடிக்குறிப்புகள்

1. உதாரணமாக, லண்டன் செகியூரிட்டீஸ் எக்ச்சேஞ்ஜ், நியூயோர்க் செகியூரிட்டீஸ் எக்ச்சேஞ்ஜ், ஜேர்மன் செகியூரிட்டீஸ் எக்ச்சேஞ்ஜ், ஸ்ட்டொக்ஹோம் எக்ச்சேஞ்ஜ், த ஸ்ட்டொக் எக்ச்சேன்ஜ் ஒப் கிறேட் பிரிட்டன், த ஸ்டொக் எக்ச்சேன்ஜ் ஒப் அயர்லாண்ட், யுனைட்டட் கிங்டொம் செகியூரிட்டீஸ் எக்ச்சேஞ்ஜ்.

2 ரவிந்த்ராபீரிஸ், பேட்டி முகாமையாளர், கொழும்பு செகியூரிட்டீஸ் எக்ச்சேன்ஜ், நொவம்பர் 12 1986.

3. டிசொய்ஸா, பேர்ஸி எச் எம்;"கொழும்பு பங்குச்சந்தை." த ஐலன்ட், 20 ஒக்டோபர்.

4. 1984ம் ஆண்டின் இரண்டாம் அரைவருட காலத்தினுள் 1,224 கைமாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன. இது 1985ம் ஆண்டின் இரண்டாம் அரைவருட காலத்தினுள் 2,703 ஆகவும், 1986ம் ஆண்டின் முதலாம் அரைவருடகாலத்தினுள் 3,484 ஆகவும் அதிகரித்தது. 1985ம் ஆண்டுகாலத்தினுள் 4,148 கைமாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன. 1986இன் முதல் ஒன்பது மாதகாலத்தினுள் மட்டும் இது 6,544ஆக அதிகரித்தது. 1986ம் ஆண்டு காலத்தினுள் சராசரி மாதாந்தக் கைமாற்றல்கள் 727. இது 1985ல் 346 ஆகமட்டுமே இருந்தது 1984ல் இது 201 மட்டுமே.

5. தேசிய சேமிப்பு வங்கி அதன் வட்டி விகிதத்தை 1986ல் 16 வீதத்திலிருந்து 12 வீதமாகக் குறைத்தது.

6. பீரிஸுடன் பேட்டி, Op Cet.

7. Stock Market Daily, Colombo Securities Ex.

8. Colombo Land And Development Company Ltd. கம்பனியின் முன்விவரணம்.

9. Asiri Hospitals Ltd; கம்பனியின் முன் விவரணம்

10 John Keels Holdings Ltd; Centre Securities Ltd; Colombo Fort Investments Ltd, Lanka Tiles Ltd; இக்கம்பனிகளின் முன்விவரணம்.

11. பீரிஸுடன் பேட்டி, Op. Cit.

12. உதாரணமாக பெலவத்த சீனிக்கம்பனி லிமிட்டட் 1984ல் உருவாக்கப்பட்டது. ஆனால் இதுவரை அதனால் பங்குலாபம் கொடுக்க முடியவில்லை. சொத்து (ஆதன) அபிவிருத்திக் கம்பனி லிமிட்டட் 1980ல் உருவாக்கப்பட்டது; ஆனால் அது 1986ல் தான் பங்குலாபம் வழங்க முடிந்தது.

13. 1986ஆண்டு காலத்தினுள் த பினான்ஸ் கம்பனி லிமிட்டட் பங்குச்சந்தையில் இருந்து விலகிக் கொண்டது: இது மிக இலாபகரமான கம்பனிகளில் ஒன்று. மிக இலாபகரமான கம்பனிகள் பங்குச்சந்தையில் இருந்து விலகிக் கொள்வதும், பங்குச்சந்தையில் பங்கு கொள்ளாமல் இருப்பதும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது. நான்கு கம்பனிகளின் பங்குக்கைமாற்றல்கள் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் நான்கு கம்பனிகள் பிரதான பங்குச்சந்தைப் பட்டியலில் இருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளன.

14. Stock Market Daily, Cse.

15. த சிலோன் டெய்லி நியூஸ், 13 நொவம், 1986, P.15.

16. IBID, 14 நொவ. 1986

17. ரவிந்த்ரா பீரிஸுடன் பேட்டி Op Cit.

18. Michael Keenan, 'The Securities Industry: Securities Trading and International Banking,' in Edward I Altman (ed) Financial Hand Book ( New York. John Wiley, 1981) P 5-21

19. Ibid., P.5.3

20 ரவிந்த்ரா பீரிஸுடன் பேட்டி, Op Cit

21 Michael Keenan, Op, Cit;P 5.3.

22. Carl Heyel, The Encylopedia at Management, 2nd ed. (New York; Ven Nostrand Reginold), P 245.

23. Colombo Securities Exchange, monthly Segment of The Share transactions.

24. ரவிந்த்ரா பீரிஸுடன் பேட்டி. Op. Cit



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுரேன் வீடியோ சென்ரர்

T. V டெக், கெசட்

வாடகைக்கு கொடுபடும்

இல: 147, நாவலர் வீதி

யாழ்ப்பாணம்.

## பெஷன் ஹவுஸ்

அழகுசாதன பொருட்கள் நாகரிகப் பொருட்கள் விளையாட்டு பொருட்கள் அன்பளிப்பு பொருட்கள் எவர் சில்வர் பாத்திரங்கள் இவை அனைத்தும் நிதான விலையில் கிடைக்குமிடம்.

இல: 65, கே. கே. எஸ். றோட்

யாழ்ப்பாணம்.

போன்: 23046

## ஜெகன் போட்டோ

அழகிய வெளிப்புற, உட்புற கலர் படப் பிடிப்புகளுக்கும் உங்கள் கலர் பிலிம் சுருள்களை நவீன கம்யூட்டர் மூலம் பிரதி பண்ணி கொடுக்கப்படும்.

இல 399 மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்,

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்.

## மஹாலக்ஷ்மி ஜுவல்லரி மார்ட்

இல: 213, A கஸ்தூரியார் வீதி.

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 23733


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments

from

**OSSLO**

**INSTITUTE**

Kachcheri Nallur Road,
JAFFNA.

---

**Tower Coffee**
**&**
**Cool Bar**

*For, Best ICE CREAM*
*ICE CHOC*
*MUTTON ROLLS*
*CUTLETS &*
*SWEETS*

No. 324, Clock Tower Road,
JAFFNA.

---

**RASAM**
**MOTOR STORES**

Dealers in Automotive
Spare Parts.

8/7 (128) Stanley Road,
JAFFNA.

Tel: 23888

---

**AMBIHAPATHY**
**FANCY GOODS**

*LADIES FIRST CHOICE*
*FOR*
*FASHION JEWELLERY*

*Visit*

No. 66, Grand Bazaar,
JAFFNA.

T.P. No:- 23437

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**HOME NEEDS**

DEALERS IN FURUITURE

No. 278, 280 (402) K. K. S. Road,
JAFFNA.

***Ananthan Motors***

*Importers and Dealers in Motor Spares Water - Pump Spares and Hardweres*

No. 23, Clock Tower Road,
JAFFNA

Phone:- 23859

*C. S. Kailasampillai & Sons*

*DRUGS MERCHANTS & COMMISSION AGENTS*

No. 76, Grand Bazaar,
JAFFNA.

***Singhams Pharmacy***

No. 25, Power House Road,

JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியையும் துப்பாக்கியையும்விட மனமும் அறிவும் உலகத்தை அதிகம் வசப்படுத்தியிருக்கின்றன.

- சுவாமி சிவானந்தர்


## அண்ணா கோப்பி பார்

உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் மின்சார ரோஸ்டரில் வறுத்து அரைக்கப்படும். அதுமட்டுமல்ல பால்மா வகைகள் அன்பளிப்பு சாமான்கள் யாவற்றையும் ஒரே இடத்தில் நிதான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

இல: 4, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல:- 23413

## அம்பிகாவதி பார்மஸி றேடர்ஸ்

சகல வித அழகுசாதன பொருட்கள்
விளையாட்டுபொருட்கள்
அன்பளிப்பு பொருட்கள்
கோல் கவரிங்
நகைகள்
நூல் வகைகள்
அனைத்தையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இல:- 9A, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல:- 24822

## E. செல்வா

ஆண்டு 9, 10, 11, (O/L) ற்கு கணித வகுப்பு நடைபெறும்.

## அபுசாலி அன் சன்ஸ்

தரமான தங்க நகைகளை செய்து கொடுப்போரும் பழைய நகைகளை கூடிய விலையில் வாங்குவோரும்.

ஹாஜிவி. எம். எம்.
அபுசாலி அன் சன்ஸ்

இல 57, (New No 76)

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KEEN CENTRE**

*THIRUNELVELY,*
*JAFFNA.*

**New Baalakrishnas**

HONDA, YAMAHA, SUZUKI

*Dealers in: MOTOR CYCLE*
*SPARE PARTS.*

374/A, CLOCK TOWER ROAD,
JAFFNA.

**RADIOS PATHY**

58, KASTHURIYAR ROAD,
JAFFNA.

**ENEMES**

Whole Sale an Retail Merchants

Dealers in: Fancy Goods,
Presentation Articles, Sundries,
Glasses Stationary, Groceries
Oilmans, Etc. Etc.

*No. 2, New Market,*
*Hospital Road, Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமை உனது பார்வையை மறைத்து கீழே தள்ளுகிறது; அதை ஒழி!

## கல்யாணி
## கிறீம் ஹவுஸ்

சிறந்த முறையில் குளிர்பானங்களை
அருந்துவதற்கும் சிற்றுண்டி வகைகளை
உண்பதற்கும் ஏற்ற இடம் இதுவே

73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஞானம் புக் சென்ரர்

பாடசாலை உபகரணங்கள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த இடம்:

635, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்

## சிவகுமார் ஸ்ரோர்ஸ்

வீட்டுத் தேவைக்கான அனைத்து சமையல்
பொருட்களையும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

282, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## இராசா
## டீசல் எஞ்சினியர்ஸ்

எல்லாவகை டீசல் பம்புகளும்
இன்ஜெக்ரர்களும் திருத்துவதும், சேவிஸ்
செய்வதும், உதிரிப்பாகங்களை
விநியோகம் செய்பவர்களும்.

180, பருத்தித்துறை வீதி,
குருநாதர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22779

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பான் ஜுவல்லர்ஸ்

குறித்த காலத்தில் ஓடர் நகைகள் செய்து கொடுக்கப்படும்.

64, கன்னாதிட்டி றோட்,

யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம்

புத்தகசாலை

சகலவிதமான பாடசாலை உபகரணங்கட்கும் நாடவேண்டிய இடம் இதுவே.

யாழ்ப்பாணம்.

கௌரி றேட் சென்ரர்

பாதணிகள் அழகுசாதனப் பொருட்கள் நியாயவிலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த இடம்:

5, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

ஸ்ரீ தாமோதர விலாஸ்

காலை, மதியம், இரவு

மூன்று வேளை சைவ உணவுக்கும் மற்றும் சிற்றுண்டி வகைகட்கும் நாடவேண்டிய இடம்:

39, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடம் அளவற்ற நம்பிக்கை வளர்த்துக்கொள்.
பிறகு அந்நம்பிக்கையை நாட்டிற்கே வழங்கு. - சுவாமி விவேகானந்தர்


நியூ சியாமளா

ஜுவல்லறி மாட்

புதுப்புது டிசைன்களில் தங்க நகைகள்
ஓடருக்கு குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.

173 I, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

குணம்

வீடியோ சென்ரர்

தரமான படக்கொப்பிகளை

வழங்கும் நிறுவனம்

48, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665

சீமாட்டி

யாழ்ப்பாணம்

மில்க்வைற்

யாழ்நகரில் உற்பத்தியாக்கப்படும்
சலவை சோப்
உடன் பாவித்துப் பாருங்கள்!

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

அ. பிறேமிலன்
ஆண்டு 13

# தொழில் துறைகளில் கணனி

இன்றைய விஞ்ஞான உலகில் கணனிகளின் பங்களிப்பு அளவிடற்கரியது. கணனிகளின் செயலாற்றுமுறை மிகவும் முக்கியமானதாகும். விஞ்ஞானம் நாளுக்குநாள் வளர்ச்சிபெற மனிதனது ஆளுமை குறைந்து போகிறதா? என்ற சிந்தனை எல்லோர் மனதிலும் தோன்றிக் கொண்டே போகின்றது. மனிதனால் உருவாக்கப்பட்ட கணனி இன்று மனிதனுக்கே சவாலாக உருவாகியிருப்பதாக பலராலும் பேசப்படுகிறது. மனிதன் தன்னைவிடப் பலமடங்கு வேகத்தில் குறிப்பிட்ட பணியை நிறைவுசெய்ய கணனியையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. அந்தப்பணிகளை இன்று செய்வது திறமை வாய்ந்த கணனிதான்.

கணனிகள் நாம் கொடுக்கும் தகவல்கள் தரவுகள் என்பவற்றைச் சேகரித்து இணைத்து அர்த்தமுள்ள செய்தியாக்கும் பணிகளை தீவிரமாக செயல்படுத்துகின்றன. இந்த நடைமுறைகள் கணனிகளில் மின்னும்முறையில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. மேலும் கணனிகள் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளும் பணிகளை ஆராய்வோம்.

## ❋ விவசாயத்துறை வளர்ச்சிக்கு கணனிகள்

அமெரிக்காவிலுள்ள கணனிகள் ஸ்தாபனம் உலகின் பலபாகங்களிலும் விவசாயத் துறைபற்றி பல லட்சக்கணக்கான தகவல்களை ஒன்றுதிரட்டி (Compact Disk) தட்டுக்களை உருவாக்கி விற்பனைக்குவிட்டுள்ளன. இது விவசாய வளர்ச்சிக்கு கலைக்களஞ்சிய (மன விவசாய நிபுணர்கள் பாராட்டுத் தெரி

த்துள்ளனர். இந்தத் தட்டிலுள்ள தகவல்களை அழிக்கவோ, புதிதாக சேர்க்கவோ முடியாதபடி உருவாக்கியுள்ளனர். இத்தட்டுக்களில் இருபத்திமூன்று நாடுகளின் மண்வளம், நீர்வளம், சுவாத்தியநிலை, பயிர் விளைச்சல், உரப்பாவனை, கிருமிநாசினிகளின் பாவனை, மாற்றுப்பயிர்த்திட்டம் போன்ற பல ஆயிரக்கணக்கான தகவல்களை கொண்டுள்ளன. இது எடை குறைவாக இருப்பதனால் அஞ்சல் வழி மூலம் தகவல்களைப் பரிமாற விஞ்ஞானம் வழிவகுத்துள்ளது.

## வர்த்தகத் துறையில் கணனிகளின் பங்களிப்பு

உலகநாடுகளில் வர்த்தகத்துறையில் முழுமையாக கணனிகளைப் பயன்படுத்தும் நாடு சிங்கப்பூர் ஆகும். இங்கு வர்த்தகத் துறைக்கு கணனிகளைப் பயன்படுத்தியுள்ளமையால் வருடாந்தம் நூறுகோடி ரூபாய் பெறுமதியான அலுவலக காகிதாதிகளை சேமிக்க முடிந்ததாக அங்கு நடாத்தப்பட்ட ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இது குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட நிறுவனம், பல தகவல்களை வெளியிட்டுள்ளது. கணனியின் பணி தொடர்ச்சியான ஒரு கட்டமைப்புக்களில் நடைபெறுவதால் இப்பணத்தை சேமிக்க முடிந்ததாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. கணனிகளின் செயற்பாடு கட்டமைப்பு முறையில் (Net Work) தொடர்ச்சியாக நடைபெறும் நாடுகளில் சிங்கப்பூர் முதலாவது நாடாகும். இங்குதான்முதன்முதலில் வர்த்தகத்துறைக்கு கணனிகள் பயன்படுத்தப்பட்டதாகும்.

இங்கு கப்பல் முகவர் நிறுவனங்கள், விமான முகவர்நிலையங்கள், இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகம் செய்வோர். கொள்கலப்பாவனையாளர்கள், வர்த்தக மாற்றீடு செய்வோர் ஒருங்கிணைந்து கணனிகள் மூலம் வர்த்தகத் தகவல்களை உடனுக்குடன் பெறுகின்றார்கள். இத்திட்டம் சிங்கப்பூரில் வர்த்தகத்துறையில் மிகவும் வெற்றிகரமாக செயற்பட்டுவருகின்றது. இறக்குமதி, ஏற்றுமதிப் பணிகள் துரிதமடைந்துள்ளன. இத்திட்டத்தின் அடிப்படைநோக்கம், கடல் மூலமாகவும், ஆகாயவிமான மூலமாகவும் இறக்குமதி ஏற்றுமதிப்பணிகளை துரிதப்படுத்துவதேயாகும். இக் கணனிகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டினால் வர்த்தக தகவல்களை. வர்த்தகத் துறையினர் காலதாமதமின்றிப் பெறவசதி அதிகரித்துள்ளது, இத்திட்டம் சிங்கப்பூர் வர்த்தகச் சந்தையில் அபரிதமான சாதனைகளைக் கொடுக்குமென அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வர்த்தகத்துறையின் அடுத்த நடவடிக்கையாக வங்கிகளின் மூலம் தகவல் பரிமாற்றங்களையும், நிதி வசதிகளையும் இலகுவாக்குவதாகும். இலங்கையில் கணனியின் செயற்பாடு வங்கிகளிலும், நிதி நிறுவனங்களிலும் கூடுதலாகக் காணப்படுகிறது வங்கிகள் இன்று கணனிகள் இல்லாது இயங்க முடியாது என்ற நிலையில் காணப்படுகின்றன கணனியில் தொழில்நுட்ப மூலம் வைப்புக்களை ஏற்றல், பணத்தைப் பிழையின்றி மாற்றிக்கொடுத்தல், வாடிக்கையாளரின் கணக்குப் புத்தகங்களை புதிப்பித்தல்போன்ற பல்வேறு கருமங்கள் ஆற்றப்படுகின்றன. மத்திய வங்கி தனது "தீர்க்கும் வீடு" செயற்பாட்டை கணனிமயப்படுத்தியுள்ளது. அத்துடன் ஏனைய செயற்பாடுகளை கணனி மூலமே நிறைவேற்றுகின்றது. இலங்கை வங்கியின் தலைமைக்காரியாலயமும் அதன் 290 கிளைகளும் இன்று கணனிமயப்படுத்தப்பட்டுவருகின்றன. மக்கள் வங்கியும் அதன் கிளைகளும் கணனிகள்மூலம் நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றன.

வங்கிகளின் கணனி மயமாக்கம் காரணமாக அண்மையில் மத்தியவங்கி கணனி காசோலைகள் [ Computer Cheque ] அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை M. I. C. R காசோலைகள் ( Magnetic ink Correcter Recognation ) என அழைக்கப்படுகின்றன. காந்தத்தன்மை கொண்டமையால் எழுதப்பட்ட இக்காசோலைகள் கணயினின் இயந்திரத்தினால் வாசிக்கப்பட்டு உடனுக்குடன் பதிவுகளை மேற்கொள்ளுகின்றன. இக் காசோலைகள் கிழிக்கப்பட்டாலோ அல்லது எழுத்துக்கள் மாற்றப்பட்டாலோ கணனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இவற்றை நிராகரித்துவிடும். விரைவான காசோலைப் பரிமாற்றல் நடவடிக்கைக்கு இந்த M. I. C. R காசோலைகள் உதவுகின்றன. 25 M. I. C. R காசோலை கொண்ட ஒரு புத்தகம் இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ரூபா 12. 50 இற்கு விற்பனை செய்யப்படுகின்றன. தன்னியக்கக் காசோலை மாற்று முறையானது M. I. C. R காசோலை அமைப்பின் ஊடாகவே அறிமுகப்படுத்தப்பட்டது.

அரச தனியார் உற்பத்தி நிறுவனங்களில் கணனிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன கணக்குப் பதிவுகள் தொடர்பான நடவடிக்கைகளையே இந் நிறுவனங்கள் கணனிமூலம் மேற்கொள்கின்றன. காந்தமூலம் (Magnetic) பூசப்பட்ட காந்தநாடா (Magnetic Tape) காந்த தட்டு (Magnetic Disck) என்பவற்றில் வாடிக்கையாளர்கள் தொடர்பானதும் ஏனைய கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளும் பதிவு செய்யப்பட்டு சேமித்து வைக்கப்படுகின்றன. தேவை ஏற்படின் மீண்டும் நாடாக்களை அல்லது தட்டுக்களை கணனியில் செலுத்தித் தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

உற்பத்தி நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் அளவுக்கட்டுப்பாட்டினையும் (Quantity Control) தரக்கப்பாட்டினை (Quality Control) திட்டமிட்ட முறையில் நிறைவேற்றுவதற்கு கணனிகள் பங்களிப்புச் செய்கின்றன. முன்கூட்டியே அளவுகள், தரவுகள் தொடர்பான அறிவுறுத்தல்களின்படி கணனிகள் இயங்குவதனால் உற்பத்தி செய்முறையானது ஓர் ஒழுங்கான முறையில் நடைபெறக்கூடியதாக காணப்படுகின்றது. மோசடிகள், தேவையற்ற மூலப்பொருள் கலப்புக்கள் என்பவற்றையும் கணனிகள் வெளிக்காட்டி விடுகின்றன. எனவே நல்ல தரமுடைய பொருட்களின் உற்பத்திக்கு கணனிகளின் பங்களிப்பு தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது எனக்கூறலாம்.

### ✲ தொல்பொருள் ஆராய்ச்சிக்கு கணனிகள்

ஜேர்மன் நாட்டில் தொல் பொருள் ஆராய்ச்சித்துறைக்கு பெருமளவில் கணனிகளை பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். அகழ்வு வேலைகள் நடைபெறும் இடங்களுக்கு கணனிகளை எடுத்துச்சென்று, அகழ்வுகள் கிடைக்குமா; எவ்வளவு ஆழத்தில் இருக்கும் என்பதை கணனிகள் படங்கள்மூலம் தெளிவுபடுத்துகின்றன. சில செயற்பாடுகளை கொடுத்ததும் விடைகிடைக்கின்றது.

### ✲ மருத்துவத்துறையில் கணனிகள்

இரத்த அழுத்தத்தினைக் கண்டுபிடிக்கப் புதிய கணனிச்சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரத்த அழுத்தத்தினை மிகத்துல்லியமாகவும், உடனடியாகவும் கண்டுபிடிக்கவென "ஓட்டோமற்றிக் பிளட் பிரஷர் மொனிற்ரர்" (Automatic Blood Pressure Monitor) என்ற கணனிச்சாதனம் ஒன்றை "ஷாப்" நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. இதனை நோயாளி எப்போது வேண்டுமானாலும் மாட்டிக்கொண்டு பார்க்கலாம். பார்த்த திகதி, நேரம் மற்றும் அளவீடுகள் என்பவற்றையும் பதிவுசெய்து காகிதத்தில் அச்சடித்துக் கொடுத்துவிடுகிறது.

நாடித்துடிப்பின் அளவை மிகத்துல்லியமாக எடுத்துக்காட்ட "பல்ஸ் ரைமர்" என்ற கையடக்கமான சாதனத்தை ஜேர்மன் "ஷஸ்டியா பார்மா" நிறுவனம்தயாரித்துள்ளது சிறிய ட்ரான்சிஸ்டர் றேடியோவைப் போல கையடக்கமாக இருக்கும் இதை Stop Watch ஆகவும் பயன்படுத்தலாம். இதன் விலை 178 ஜேர்மன் மார்க்குகள் ஆகும்.

### ✲ வலது குறைந்தோருக்கான கணனிகள்.........

உலக மக்களிடையே சிலர் இயற்கையாகவே வலது குறைந்தவர்களாக வாழ்வதை நாம் காண்கிறோம் அவர்களுக்கு பார்வை இல்லையென்ற குறையைத்தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுகுறைகள் இருப்பதில்லை. இவர்களும் சமூகத்தில் மற்றவர்களைப்போலவே கல்வி வசதி பெறவேண்டுமென சர்வதேச தொண்டர் நிறுவனங்களும், அரசாங்கங்களும் பல்வேறு முயற்சிகள் எடுத்துவருகின்றன. அவர்களுக்கு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த "றெபெட்றென்" என்பவர் விசேட செயற்பாடுகளைக்கொண்ட பேசும் கணனியை உருவாக்கி வெற்றிகரமாகச் சந்தைப்படுத்தியுள்ளார். இக்கணனிகள் பார்வை இழந்தவர்களின் "எலெக்ரேனிக் செயலாளன்" என அழைக்கப்படுகிறது.

இது Eureka 4 என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. கணனிகள் பிறெய்லி எழுத்து அமைப்பைக்கொண்டன. செயல் முறையும் (Keyboard), ஸப்தஒலிகளை உள்வாங்கும் தன்மையும், வசனங்களை உருவாக்கக்கூடிய அமைப்பும் சிறப்பம்சமாகவுள்ளன.

இந்த இயந்திரம் மணிக்கூடு, கல்குலேட்டர், டயறி, கலண்டர், தேர்மாமீட்டர் தொலைபேசி, அகராதி உட்பட பல்வேறு அம்சங்கள் ஊடாக இயங்குவது பெருமையளிப்பதாகவுள்ளது. இதனுடைய மற்றுமொரு சிறப்பம்சம் கைக்கடக்கமாக இருப்பதுதான் என உற்பத்தியாளர்கள் கூறுகிறார்கள். இச்சாதனத்தை உலர்கலங்களினால் கூட இயக்கமுடியும். இவற்றை எங்கு சென்றாலும் எடுத்துச் செல்லக்கூடியதாக உள்ளது.

இதே மாதிரியான வடிவமைப்பில் ஹொங் ஹொங் நாட்டிலும் கணனிகள் உருவாகியுள்ளன. கணனிகள் அதிவேக செயற்பாடு கொண்டு பிறெய்லி அமைப்பு எழுத்துக்களை மொழிமாற்றம் செய்து ஸப்த ஒலிகளாக மாற்றிக்கொடுக்கின்றன. இச்செயற்பாடு முப்பது வினாடிகளில் நடைபெறுகின்றன. உலகில் பதினாலாயிரம் பார்வைகுறைந்தவர்கள் கணனிகளைப் பயன்படுத்துவதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

✲ *ரோபோ; மனித கணனி இயந்திரம்*

மனிதன், எல்லா இயந்திரங்களையும் விடச் சிறந்த சூட்சுமமான இயந்திர மனிதனை [ரோபோ] உருவாக்கத் தலைப்பட்டான். வெற்றியும் கண்டான். அவனது பணி ஓயவில்லை. மனிதனைப்போல சிந்திக்கவைக்கும் சாதனம் படைப்பதில் தொடர்ச்சியான ஆராய்ச்சிகள்நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மனிதமூளை எப்படிச் செயற்படுகிறதோ அதை ஆராய்ச்சியாகக் கொண்டு இயந்திர மனிதனும் உருவாகிக்கொண்டுதான் இருக்கின்றான்.

அவுஸ்திரேலியா நாட்டில் ஆடுகளின் உரோமங்களைக் களைவதற்கு "பூமா" என்ற இயந்திர மனிதனே பயன்படுத்தப்பட்டு வருகின்றான். "பூமா" தத்துக்கிளியைப் போல தோற்றமுடையவன். இவன் மனிதர்கள் செய்யக் கஷ்டமுறும் வேலையைக்கூட நொடிப்பொழுதில் கணனியின் இயக்கத்தால் செய்துமுடித்துச் சாதனை புரிகின்றான்.

ரோபோக்கள் 1960ம் ஆண்டுமுதல் அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும் மனிதனால் செய்யமுடியாத பாரிய வேலைகளைச் செய்யவே பயன்படுத்தப்பட்டன. இவைகள் கணனித்துறையில் நுண்மின் அளவியல் புகுத்திய செயற்பாடே ரோபோ இயந்திர மனிதனுகும்.

ரோபோக்கள் இன்று தொழிற்சாலைகளில் உபபாகங்களின் தரத்தினைக் கண்காணிக்கவும் அவற்றை ஒழுங்காகச் சேகரிக்கவும் பயன்படுகின்றன. இவை அமெரிக்கா, யப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளில் அதிகமாகக்காணலாம். இந்த ரோபோக்கள் மூன்று வேளைகளிலும் களைப்படையாமல் பணிபுரிவதில் செயல்பட்டு செலவீனம் மீதப்படுவதாக தொழிலதிபர்கள் கூறுகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள "குட்ஈயர்" (Good Year) நிறுவனம் தனது தொழிற்பாட்டிற்கு ரோபோக்களைப் பயன்படுத்தி மனிதவளத்தை மதிப்பீடு செய்தபோதிலும் ரோபோக்களால் செய்யப்படும்வேலைகளால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

ரோபோக்களுக்கு செலவிடும் பணத்தை ஒரு வருட காலத்தில் பெறமுடிகிறது என புள்ளி விபரங்களுடன் தகவல் வெளியிட்டுள்ளனர். இவ்வேலைகளுக்கு மனிதர்களைப் பயன்படுத்துவதால் அவர்கள் இளைத்துவிடுவதாக குற்றம்சாட்டியுள்ளனர்

ரோபோக்கள் கணனிகளின் அறிவுரைக் கமைய கட்டளைகளை வழங்குவதன் மூலமும் தேவைக்கேற்ப இயங்க முடியும். மனிதர்கள் செய்யும் எல்லா வேலைகளையும் ரோபோக்கள் செய்ய வேண்டுமானால் கூரிய பார்வையும், தொடு உணர்ச்சியும், அவற்றிற்குத் தேவை இவைகள் எல்லாப் பொட்களையும் நழுவவிடாமல் பிடித்துக்கொள்ளவும் கையாளவும் தொடும் உணர்ச்சி பக்குவப்படும் நிலையையும் உருவாக்கவேண்டும் அந்த நிலைக்கான காலம் அண்மித்து வருவதாக மேலைத்தேய நாடுகளிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரோபோக்கள் வேலை செய்ய, அடுத்த நூற்றுண்டில் மனிதன் மேற்பார்வை செய்யும் காலம் அண்மித்துவிட்டதாகப் பிரபல கணனி விஞ்ஞானி கூறியுள்ளார். இது விஞ்ஞான யுகமல்லவா?

## ✲ கணனியில் மோசடிகள்

குற்றங்கள் காலத்திற்கு ஏற்றவாறு புதுப்புது வடிவம் எடுத்துவருகின்றன. குற்றவாளிகளும் தமது போக்குகளிலும் புதிய புதிய யுத்திகளைப் புகுத்தித் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர். இன்று மனிதனுக்கு எல்லாத்துறைகளிலும் உதவி புரிகின்ற கணனிகளையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை. விஞ்ஞானிகளும் அறிவியல் அறிஞர்களும் கணனிகளைப்பற்றி அலசி ஆராய்ந்து அவற்றில் பல பிரமிக்கத்தக்க முன்னேற்றங்களையும் புதுமைகளையும் புகுத்திவருகின்ற இந்தக் காலகட்டத்தில், இம்மோசடிக்காரர்களும் தமது ''அற்றலை''க் கணனிகளில் காட்டுகிறார்கள்.

இந்த ''நாகரீகக் கொள்ளையர்' களின் முக்கிய விளைநிலமாக இருப்பவை பல கோடிக்கணக்கான பணப்புழக்கம் நடைபெறும் வங்கிகள் தான். கணனி மயப்படுத்தப்பட்ட வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களே பெரும்பாலும் இக்குற்றங்களில் ஈடுபடுகின்றனர். வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்களைப் போன்றதான போலிப் பெயர்கள், மோசடிக் கணக்குகள் என்பவற்றை இவர்கள் தமது 'தொழிலில்'' பயன்படுத்துகிறார்கள்.

3600 கோடி ரூபாய்! இதுதான் இதுவரை காலமும் கணனியின் சரித்திரத்திலேயே மிக அதிகமாக கணனிகளில் மோசடி செய்யப்பட்ட தொகை ஆகும் ஈக்விடி ஸ்பெண்டிங் கோப்பரேசன் ஒவ் அமெரிக்கா (Equdy Spending Corporation of America) என்ற ஒரு இன் சூரன்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்த 18 பேரும் மற்றும் 3 ஓடிற்றர்களும் இந்த மோசடியின் காரண கர்த்தாக்கள். மொத்தம் 97 000 காப்புறுதிப் பத்திரங்களில் 63,000 போலியானவை என்று கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் இரசியத்தகவல்கள் கணனியில் பாதுகாத்து வைக்கும் உள்நாட்டு இராணுவ இரகசியங்கள், மற்றும் விண்வெளி பாதுகாப்பு இரகசியங்கள் என்பனவும் கணனிகளிடமிருந்து திருடப்பட்டு எதிரி நாடுகளுக்குவிற்கப்படுகின்றன. இத் திருட்டுக்கள் ''கணனி வைரசு'' என அழைக்கப்படுகின்றன.

தற்போது கணனி மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் பெருகிவரும் இக்கால கட்டத்தில், கணனிகளை நம்பித் தொழில்புரியும் நிறுவனங்கள் இந்த மோசடியைத் தவிர்ப்பதற்கான எதிர் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. ஒரு சிறிய சந்தேகம் ஏற்பட்டாலும் உடனே அதனை பிரதிபலித்துக்காட்டக்கூடிய சாதனங்கள் இந்த இயந்திரங்களில் பொருத்தப்படுகின்றன.

இவற்றுள் கணனியை இயக்கப்பயன்படும் கருவியாக ''டெர்மினல்'' விளங்குகிறது. இதனை இயக்கும் வாடிக்கையாளர்களின் கை அடையாளங்கள், விரல் ரேகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைக்கொண்டு அடையாளம்கண்டு கொள்ளும் வசதி இவற்றுள் குறிப்பிடத் தக்கதாகும்

மேலும், ரெலிவிஷன் லேசர்பிரீண்டிங் போன்ற பல நவீன முறைகளையும், தற்போது மேலைநாடுகளில் இந்தக்கணனித்திருட்டுக்களைத்தடுக்கப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள் இந்த முறைகளினால் கணனிகளில் இடம் பெறும் திருட்டுக்கள் குறைகின்றனவா அல்லது இவற்றுக்குத் 'தண்ணி' காட்டித் தமது கைவரிசையைக் காட்டுகின்றார்களா? என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

*கணனியிலிருந்து பெறப்பட்ட சில முக்கிய சொற்களின் தமிழ் அகராதி*

| | |
|---|---|
| Machine Language | — இயந்திர மொழி |
| High Level Language | — உயர்மட்ட மொழி |
| Basic | — தொடக்கநிலை மொழி |
| Processor | — செய்முறைப் பகுதி |
| Memory | — நினைவாற்றல் பகுதி |
| Hardware | — கணனியையும் அதனை இயக்கும் பகுதியையும், ஊட்டும்பகுதி, புறவாய்ப்பகுதி, மத்திய செய்முறைப்பகுதி, சேமிப்புப் பகுதி, நினைவாற்றல் பகுதி. |
| Software | — நிகழ்ச்சிப்பட்டியலில் ஆணைத்தொடர்களின் கூட்டு இயக்கம் |
| Object Programme | — நோக்க நிகழ்ச்சிகள் |
| Input | — ஊட்டும் பகுதி |
| Flow Chart | — பொங்கு விளக்கப்படம் |
| Terminator | — எல்லை முனை |
| Connector | — இணைப்புக்குறி |
| Punch Card | — துணைஅட்டை |
| Working Storeage | — செயலாற்று சேமிப்புப் பிரிவு |
| Environment Division | — சுற்றுப்புறப் பிரிவு |
| Bar Code Recognition | — கம்பி சங்கேத அடையாளம் அறிதல், |
| Anolog Computer | — பொருள் மாற்று வகைக் கணனி |
| Central Processing Unit (Cpu) | — மத்திய செய்முறைப் பகுதி |
| Visual Display Unit | — காட்சிப் படத்திரை |

தொலைக்காட்சியைப் பார்த்து முடித்தவுடன் நீங்கள் உட்கார்ந்து இருக்கும்அறையின் ஜன்னல்களை உடனடியாகத் திறந்து விடுங்கள் என்கிறார் மேற்கு ஜெர்மனியின் விஞ்ஞானி பிரிட்ஸ் வான்ஹால்ட் என்பவர். ஏன் தெரியுமா?

இதன் மூலம் தொலைக்காட்சி ஒளிக்கற்றையிலிருந்து வெளியாகும் அனலை ஓரளவு குறைத்து விடலாம் என்கிறார் அவர் இந்த அனல் உடலுக்கு நல்லதல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1977 க்குப் பின்
# இலங்கையில் வணிக வங்கிகளின் வளர்ச்சி

தே. ஜெயராமன் B.Com. (Hons) MBA
விரிவுரையாளர்,
வணிக முகாமைத்துவத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இக்கட்டுரையின், பிரதான நோக்கம் வங்கித்துறையில் 1977க்குப் பின் வணிக வங்கிகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சியையும் ஆய்வு செய்வதே ஆகும். 1977 க்குப் பின் வங்கித் துறை வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களை பல்வேறு தலைப்புக்களின் கீழ் ஆராயமுடியும் முதலாவதாகவணிக வங்கிகளின் வளர்ச்சியிலேற்பட்ட மாற்றங்களை எடுத்துநோக்குவோம். வணிக வங்கிகளென்றால் என்ன? வட்டியை வழங்காத கணக்குகளுக்கான வைப்புக்களையும் ஏற்கும் வங்கியை வணிக வங்கி எனலாம். அதாவது நடைமுறைக்கணக்கினையும் சேமிப்புக்கணக்கினையும் கொண்டுள்ள வங்கியினை வணிக வங்கிஎனலாம். இலங்கையிலுள்ள வணிக வங்கிகளை உடைமை அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்க முடியும்.

I. அந்நிய தனியாருக்கு சொந்தமான வணிகவங்கி. (Foreign Private)

II. அந்நிய நாட்டரசிற்குச் சொந்தமான வணிகவங்கி. (Foreign Government)

III. இலங்கை அரசிற்குச் சொந்தமான வணிகவங்கி [Government of Sri Lanka]

IV. இலங்கை தனியாருக்குச் சொந்தமான வணிகவங்கி. (Sri Lanka Private)

1977க்கு முன் இலங்கையில் 11 வகையான வணிக வங்கிகளே காணப்பட்டன. அவைவருமாறு:

| பெயர் | ஆரம்பம் | உடைமை |
|---|---|---|
| 1. கிறீன் லன்ட்ஸ்வங்கி | 1881 | வெளிநாட்டு தனியார். |
| 2. சார்ட்டட் வங்கி | 1892 | வெளிநாட்டு தனியார். |
| 3. ஹொங் ஹொங் அன் சங்காய வங்கிக் கூட்டுத்தாபனம். | 1892 | வெளிநாட்டு தனியார். |
| 4. இலங்கை வங்கி | 1939 | இலங்கை அரசு. |
| 5. இந்தியன் ஓவசீஸ் வங்கி | 1946 | இந்திய அரசு. |
| 6. இந்தியன் வங்கி | 1948 | இந்திய அரசு. |
| 7. ஹபிப் பாங்க் லிமிட்டெட் | 1951 | பாகிஸ்தான் அரசு. |
| 8. ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா | 1955 | இந்திய அரசு. |
| 9. மக்கள் வங்கி | 1961 | இலங்கை அரசும் கூட்டுறவு சங்கங்களும், |
| 10. வரையறுக்கப்பட்டவர்த்தக வங்கீ லிமிட்டெட் | 1969 | இலங்கை தனியார். |
| 11. ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் | 1970 | இலங்கை தனியார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 க்குப் பின் வங்கித்துறையில் பல புதிய வங்கிகள் தோற்றுவிக்கப்பட்டன. அரசாங்கத்தின் திறந்தபொருளாதாரக் கொள்கையினைத் தொடர்ந்து பல வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் கிளைகளைத் திறப்பதற்கு வரவழைக்கப்பட்டதும் அனுமதியளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல புதிய வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன் அண்மை ஆண்டுகளில் இரண்டு புதிய சுயதேசிய தனியார் வங்கிகளும் ஆரம்பிக்கப்பட்டன. எனவே வணிக வங்கிகளின் விரிவாக்கத்தில் குறிப்பிட்டளவு விரிவு ஏற்பட்டது என்பது மறுப்பதற்கில்லை. 1977க்குப் பின்பு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய அந்நிய இலங்கை தனியார் வங்கிகள் வருமாறு.

| வங்கி | ஆரம்பம் | உடமை |
|---|---|---|
| 1. பாங்கியூ இன்டோசுயிஸ் | 1979 | பிரான்ஸ் நாட்டுஅரசு வெளிநாட்டு தனியார். |
| 2. பாங் ஒவ் கிரடிட் அன் கொமேர்ஸ் இன்ட நஷனல்லிமிட். | 1979 | வெளிநாட்டு தனியார். |
| 3. சிற்றிபாங் N.A | 1979 | வெளிநாட்டு தனியார். |
| 4. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்சர்வதேச வங்கிக் கூட்டுத்தாபனம் | 1980 | வெளிநாட்டு தனியார். |
| 5 பாங்க் ஒவ் ஓமான் லிமிட் | 1980 | வெளிநாட்டு தனியார் |
| 6 ஓவர்சீஸ் ட்ரஸ்ட் வங்கிலிமிட். | 1980 | வெளிநாட்டு தனியார். |
| 7 பாங் ஒவ் அமெரிக்கா NT & SA | 1980 | வெளிநாட்டு தனியார். |
| 8. ஈரோப்பியன் ஆசியன் வங்கி | 1980 | வெளிநாட்டு தனியார். |
| 9 ஹபிப் பாங்க் | 1980 | வெளிநாட்டு தனியார். |
| 10. அல்ஜிமென் பாங் நெதர்லாந்து | 1980 | வெளிநாட்டு தனியார். |
| 11. டுபாய் பாங் லிமிட்டெட் | 1981 | வெளிநாட்டு தனியார். |
| 12, யூனியன் பாங் ஒவ் மிடில்ஈஸ்ட் லிமிட் | 1981 | வெளிநாட்டு தனியார். |
| 13. அம்ஸ்டெர்டாப்-ரொட்டெர் டாம் பாங் | 1981 | வெளிநாட்டு தனியார், |
| 14. மிடில் ஈஸ்ட் பாங்க் லிமிட் | 1982 | வெளிநாட்டு தனியார். |
| 15. சம்பத் வங்கி லிமிட்டெட் | 1987 | இலங்கை தனியார். |
| 16. சேலோன் ட்ரஸ்ட் வங்கி | 1988 | இலங்கை தனியார். |

வணிக வங்கிகளில் விரிவு ஏற்பட்டது போல் வணிக வங்கிகளின் வங்கித் தொழிற்பாடுகளிலும் பல்வேறு வகையான விஸ்தரிப்பு ஏற்பட்டன. பல புதிய அந்நிய வணிக வங்கிகள் 1977க்குப் பின்பு உருவாக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து பல நவீன வங்கிச் சேவைகள் வாடிக்கையாளருக்கு அறிமுகப்படுத்தப்பட்டன வெளிநாட்டுவங்கிகள் அறிமுகப்படுத்திய இப்புதிய நவீன வங்கிச் சேவைகள் ஏனைய உள்நாட்டு வணிக வங்கிகளும் தமது வங்கித் தொழிற்பாடுகளை விஸ்தரிக்கப் பெரிதும் உதவியது எனக் கூறுவதற்கு மறுப்பதற்கில்லை. வணிக வங்கிகளின் விஸ்தரிப்பு நடவடிக்கையில் பிரதானமானவை:

I. அந்நியச் செலவாணி வங்கி அலகு உருவாக்கப்பட்டமை.

II. வங்கிக் கடன் அட்டை அறிமுகம்.

III. வங்கி முகவர் அறிமுகப்படுத்தப் பட்டமை

IV. காசோலையினை தீர்ப்பதில் கணணியின் அறிமுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. வைப்புச் சான்றிதழ் திட்டம்.

VI. நீண்ட நேர வங்கிச் சேவை. என்பன வற்றைப் பொதுவாகக் குறிப்பிடலாம்.

அந்நியச் செலாவணி வங்கி அல.
*(FCBU-Foreign Curre Banking unit)*

அந்நிய நாணயத்தில் வைப்புக்களை ஏற்பதற்கு கடன்களை வழங்குவதற்கும் என புதிதாக உருவாக்கப்பட்ட வங்கிப் பிரிவானது இதுவாகும். இவ்வங்கிப் பிரிவானது வணிக வங்கியில் ஒரு பிரிவாகத் தொழிற்படும். 1979 மே மாதம் இவ்வங்கி அலகு அறிமுகப் படுத்தப்பட்டது. இதன் மூலம் 25 வணிக வங்கிகளில் அந்நிய செலாவணி வங்கி அலகு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வங்கிப் பிரிவூடாக கேள்வி வைப்புக்கள் சேமிப்பு கணக்குகள் என்பன அந்நியச் செலாவணி யில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அத்துடன் வெளிநாட்டு நாணயங்களில் கடன்களை வழங்குதல் நாணயக் கடிதத்தினை ஆரம்பித்தல் உண்டியலை கழிவுடன் மாற்றுதல் ஏற்றல் ஆகிய பிரதானமான தொழிற்பாடுகளை மேற் கொள்கின்றது.

இலங்கையில் தொழிலை நடத்தும் வணிக வங்கிகள் தமது வழமையான உள்நாட்டு வங்கிச் சேவையைவிட இவ் அந்நிய செலா வணி வங்கித் தொழிற் பாட்டினையும் மேற் கொள்ள முடியும். இதற்கான அனுமதியினை மத்திய வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அந்நிய செலாவணி வங்கிப் பிரிவினூடாக இலங்கையில் வதியாதோரும் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழு நிறுவனங்களும், மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் வதிவோ ரும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தற்போது பத்து அந்நிய நாணயங்களில் கொடுக்கல் வாங் கல்களை இவ்வங்கிப் பிரிவினூடாக மேற் கொள்ளமுடியும்.

1. டியூச் மார்க்
2. பிரான்ஸ் பிராங்க்
3. ஹொங் ஹொங் டொலர்
4. ஜப்பான் ஜென்
5. நெதர்லாந்த் கில்டெர்
6. ஸ்ரேலிங்க் பவுண்
7. சிங்கப்பூர் டொலர்
8. சுவீடிஸ் குரோனர்
9. சுவிஸ் பிராங்க்
10. அமெரிக்க டொலர்.

பின்வரும் நோக்கத்தின் அடிப்படையில் அந்நியச் செலாவணி வங்கிப்பிரிவானது தொழிற்படுகிறது.

I. கரை கடந்த நிறுவனங்களிற்கான நிதி வசதியினை அந்நியச் செலாவணியில் அளித்தல்.

II. பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் சுதந்திர வர்த் தக வலயத்தில் உருவாக்கப்பட்ட நிறுவனங் களிற்கு நிதிவசதியளித்தல்.

III. வெளிநாட்டில் வதியும் இலங்கையரிட மிருந்து வைப்புக்களைத் திரட்டல்

IV. சர்வதேச வங்கி வசதிகளை வழங்கி அதன்மூலம் சர்வதேசப் பண நிலையமாக விருத்தி செய்தல்.

இலங்கையில் வதியாதோரின் அந்நிய நாணயக் கணக்கு.
*(Non Resident Foreign Curr A/C)*

வெளிநாட்டில் வதியும் or வதித்த இலங்கையரால் ஆரம்பிக்கும் கணக்கு இது வாகும். ஆகக்குறைந்த ஆறுமாதம் வெளி நாட்டில் வசித்த ஒருவர் இலங்கைக்குத் திரும்பி 90 நாட்களுக்குள் or வெளிநாட் டில் வதியும்போது இக்கணக்கினை அந்நிய நாணயத்தில் ஆரம்பிக்க முடியும். இத்தகைய கணக்கினை ஆரம்பித்த ஒருவர் இலங்கைக்குத் திரும்பி 10 வருட காலங்களுக்குப் பேண முடியும். பின்வரும் அந்நிய நாணயங்களில் இக்கணக்கினை ஆரம்பிக்க முடியும்.

1. அமெரிக்க டொலர் 3 ஸ்ரேலிங்க் பவுண்
2. டியூச் மார்க் 4. சுவிஸ் பிராங்.

ஆரம்ப வைப்பாக 25 அமெரிக்க டொ லரை or அதற்குச் சமனான மேற்குறிப்பிட்ட அந்நிய நாணயத்தினை வைப்பிலிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். நிலையான வைப்பினைப் பொறுத்து ஆரம்ப வைப்புத் தொகை பின்வருவனவற்றில் ஒன்ருகக் காணப்படல் வேண்டும்.

I. 1000 அமெரிக்க டொலர்

II. 200 ஸ்ரேலிங் பவுண்

III. 4000 டியூச் மார்க்

IV. 4000 சுவிஸ் பிராங்.

பின்வரும் முறைகளில் பணத்தினை மீளப்பெறலாம்.

I. வங்கிக் கருமபீடத்தில் கடவுச் சீட்டினைக் காண்பித்து இலங்கை ரூபாவில் மீளப் பெற லாம்.

II. எழுத்தாலான அறிவித்தலை வங்கிக்கு வழங்கி, மூன்ரும் நபருக்கு கொடுப்பனவினைச் செலுத்தலாம்.

III. வெளிநாட்டிற்குப் பணத்தினை அனுப்ப லாம்.

IV. வெளிநாட்டுப் பிரயாண தேவைக்கென இக்கணக்கிலுள்ள பணத்தினை பிரயாணிகள் காசோலையாகவோ, அந்நிய நாணயமாக வோ மீளப்பெறலாம்:

பொதுவாகஇக்கணக்கினை ஆரம்பித்தவர் கள் பின்வரும் நன்மைகளைப் பெமுடியும்.

I. கவர்ச்சியான வட்டிவீதம். இவ்வட்டி அந்நிய நாணயத்தில் செலுத்தப்படும்.

II. வரிவிலக்கு.

III. வைப்புத் தொகைக் கெதிராக ரூபாய் நாணயத்தில் கடன்வங்கி மேலதிகம் பற்றினைப் பெறலாம்.

IV. கட்டுப் பாடற்ற மீளப் பெறும் வசதி.

## வங்கிக் கடன் அட்டை (Credit Card)

உள்நாட்டு வணிக வங்கிகளினுல் கடன் அட்டைமுறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டமை. சில்லறை வங்கிச் சேவையில் (Retail Banking) இலங்கையில் அறிமுகப் படுத்திய புதிய தொரு அம்சம் என்பது மறுப்பதற்கு இல்லை. கடன் அட்டை எனப் படுவது வங்கியினுல் வங்கியின் வாடிக்கை யாளர் Or வாடிக்கையாளர் அல்லாத ஒரு வருக்கு கடன் அட்டை வழங்கும் வங்கியினுல் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிலையத்திலிருந்து பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்கு வசதியளிக்கும் ஒரு கருவியாகும்.

இத்தகைய கடன் அட்டைமுறைகள் தற்போது இலங்கை வங்கி, சம்பத் வங்கி என்பற்றினுல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கடன் அட்டையைப்பெறத் தகுதியானவர் பலவேறு அம்சங்களின் அடிப்படையில் தீர் மானிக்கப்படுகின்றனர். வயது, வருமானம், கடன், குழந்தைகளின் எண்ணிக்கை என்ப வற்றின் அடிப்படையில் கடன்பெறும் தகுதி என்பன தீர்மானிக்கப்பட்டு கடன் அட்டை வழங்கப்படும். இலங்கை வங்கியினுல் வழங் கப்படும் சீ பா ங் அட்டையை வருடம் ரூபா 36,000ற்கு மேற்பட்ட வருமானத்தினைப் பெறுபவரே பெறமுடியும். சம்பத் வங்கியினுல் வழங்கப்படும் மாஸ்ரர் அட்டையைப் பெற வருடம் ரூபா 60,000க்கு மேற்பட்ட வரு மானத்தினைப் பெற வேண்டும்.

## முகவர் வங்கி (Ager Banking System.

அக்டோபர் 1988ம் ஆண்டு இரண்டு அரசு வணிக வங்கிகளான இலங்கைவங்கி மக்கள் வங்கி ஆகியன இரண்டு வணிகவங்கி களாலும் முகவர் வங்கி முறை அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வங்கியினுல் வழங்கப்படும் நிதியினைக் கொண்டு கடன் வழங்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளும் பொருட்டு முகவர்கள் நியமிக்கப் பட்டனர். இத்திட்டத்தின் பிரதான நோக்க மாவது:

I. சிறிய தொகைகளை கடனுக பெறுபவ ரிற்கு கடன் பெறும் வசதியினை அளித்தல்.

II. கடன் பெறுவதிலுள்ள நடைமுறைகளை சமப்படுத்தல். முகவர்களிற்கு வங்கி 200000 ரூபாவை கடனுக வழங்கும். மாதாந்த வட்டி $1\frac{1}{2}$ வீதம் (வருடம் 18 வீதம்) இம்முகவர்கள் இக்கடன் தொகையை சிறு கடன்படுநர்களுக்கும் ஆகக்கூடிய தொகையாக ரூபா 5000 வரை வழங்க முடியும். வட்டியாக ஆகக்கூடிய விதமாக $2\frac{1}{2}\%$ (வருடம் 30%) அறவிடலாம். இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நோக்கங்களிற்கு கடன் வழங் கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. விவசாயம்

II. சிறிய கைத்தொழில் முயற்சிகள்

III. வர்த்தக நடவடிக்கைகள்

IV. நுகர்வு

V. நீண்டகாலப் பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்தல்.

### வைபபுச் சான்றிதழ் திட்டம்

கள்ளப் பணத்தினை வங்கிக்கு வரவழைக்கும் நோக்கில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வைப்பாளர் தனது பெயர் விபரங்கள் என்பவற்றைக் குறிப்பிடாமல் பணத்தினை வைப்பிலிட வசதியளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் பிரகாரம் 100000/ பெறுமதியான வைப்புச் சான்றிதழ்கள் வணிக வங்கியினூல் கழிவுடன் விற்பனை செய்யப்பட்டது. இச் சான்றிதழ்கள் 6 அல்லது 9 அல்லது 12 மாத முதிர்வினைக் கொண்டவை. இச்சான்றிதழ்களைக் கொள்வனவு செய்பவர்களின் பெயர் விபரங்களை வங்கி கேட்காது. பெயர் விபரங்களும் இச்சான்றிதழில் எழுதப்படமாட்டாது. சான்றிதழை பணமாக மாற்றும்போது வங்கி அடையாளத்தை நிரூபிக்கும்படி கேட்காது. இதனுல் இத்திட்டத்சின் கீழ் கள்ளப் பணம் வங்கிக்கு வரவழைக்கக்கூடியதாக இருந்தது.

### நீடித்த வங்கி நேரம் (Banking Hours)

வாடிக்கையாளரின் நன்மை கருதி வங்கிச் சேவைகளின் நேரம் நீடிக்கப்பட்டது. சேலோன்ட்ரஸ்ட்வங்கி இரவு வங்கிச் சேவையை வாடிக்கையாளரிற்கு வழங்க முன் வந்தது. இதனைத் தொடர்ந்து லிட்டன் நாஷனல் வங்கியும் வாடிக்கையாளருக்கான வங்கி நேரத்தினை தொடர்ந்து விஸ்தரித்துள்ளது. இதுவும் ஒரு குறிப்பிடதக்க மாற்றம் எனலாம் →

### காசோலையைத் தீர்ப்பதில் கணனிப் பிரயோகம (Automation of Cheque Clearing House)

இலங்கையில் காசோலைகள் தீர்ப்பனவு தொடர்பாக தன்னியக்கத் தீரப்பனவு நிலையம் 1987ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் முதல் நோக்கமாக கொழும்பில் கைகளினுல் மாற்றிக் கொள்ளப்படும் காசோலைகளுக்குப் பதிலாக மிக நவீன முன்னேற்றமடைந்த தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவதாகும். இதற்காக காந்தமை எண்களைக் கொண்ட பெருமளவு காசோலைகள் புழக்கத்திற்கு விடப்பட்டன. இதன்மூலம் வணிக வங்கிகளிற்கு இடையில் நடைபெறும் காசோலைத் தீர்ப்பனவினை விரைவாக செயல்முறைப்படுத்தலாம். அத்துடன் தவறுகளை குறைக்கவும் முடியும். அத்துடன் எதிர்காலத்தில் மூலவளங்களை அதிகரிக்காது அதிகமான காசோலைகளைத் தீர்ப்பனவு செய்யமுடிம்.

### வங்கியில் அடர்த்திச் சுட்டெண் (Banking Density)

ஒரு நாட்டின் வங்கி அபிவிருத்தியினை எடுத்துக்காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான சுட்டெண்களில் வங்கியியல்அடர்த்தி சுட்டெண்ணும்ஒன்ருகும்.மொத்த சனத் தொகைக்கும் வங்கி அலுவலகத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை எடுத்துக்காட்டமுயலும் ஒரு குறிகாட்டி இதுவாகும். ஒவ்வொரு 10,000 மக்களுக்கும் ஒரு வங்கி அலுவலகம் தேவை என்ற எடுகோளின் அடிப்படையில் இக்குறிகாட்டி தயாரிக்கப்படுகிறது.

வங்கியியல் அடர்த்தி = வங்கி அலுவலக எண்ணிக்கை × 10,000 × 100 மொத்த சனத் தொகை.

1950ல் 0.04 ஆக இருந்து 1960ல் இது 0 05 ஆகவும் 1976ல் 0.13 ஆகவும் உயர் வடைந்தது.

| வருடம் | வங்கி அலுவலகம் | நடுவருடகுடித்தொகை 1000 | வங்கியியல் அடர்த்தி. |
|---|---|---|---|
| 1950 | 28 | 7, 768 | 0.0365 |
| 1960 | 45 | 9, 869 | 0,0455 |
| 1970 | 165 | 12, 252 | 0.1318 |
| 1980 | 876 | 14, 472 | 0.5940 |
| 1988 | 675 | 16, 586 | 0.4069 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980க்கு பின்னைய ஆண்டுகளில் வங்கியில் அடர்த்திச் சுட்டெண்ணில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது. இதற்கு பிரதான காரணமானது வடக்கு. கிழக்குப் பகுதியில் பலவங்கி அலுவலகங்கள் மூடப்பட்டன இலங்கை வங்கியின் விவசாய விரிவாக்க நிலையங்கள் பல மூடப்பட்டது எனலாம்.

முடிவுரை

1977க்குபின் வணிக வங்கிகளின் வளர்ச்சியினை மீளாய்வு செய்கையில் பல அந்நிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டமை. அவற்றின் போட்டி காரணமாக உள்ளூர் வணிக வங்கிகளும் பல புதிய வங்கி வசதிகளை வாடிக்கையாளருக்கு அறிமுகப்படுத்தியுள்ளது என்பன குறிப்பிடத்தக்கதாகும். எனினும் நாட்டின் சனத்தொகைக் கேற்ப பல வணிக வங்கிகள் உருவாக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

**ரெலி கொம் (Tele Com)**

**இதுவரை காலம் வரையும் இலங்கையில் தொலைத் தொடர்பு அலுவலகங்கள் யாவும் தொலைத்தொடர்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1990ம் ஆண்டில் இருந்து இத் திணைக்களம் ரெலி கொம் (Tele Com) என்ற பெயருடன் ஓர் கூட்டு ஸ்தாபனமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Ranee Jewellers**

*For anythlng aud Everythlng in Jewellevy*

No. 63. Kannathiddy,
JAFFNA.

*Phone: 23544*

**Ever Vision**

No. 21/4, Clock Tower Road,
JAFFNA.

**Hotel Subhas**

Victoriya Road,
JAFFNA.

**SUPERB RANK**

PHARMACY & GROCERY

Palaly Road Thirunelvely,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல வீடியோ கெசட் எங்குகிடைக்கும் என ஏங்குகின்றீர்களா கவலை வேண்டாம்.

## நல்லூர் வீடியோ சென்ரர்

இருக்கிறது

*வீடியோ படங்கட்கு தன்னிகரில்லா ஸ்தாபனம் நல்லூர் வீடியோ சென்ரர்.*

இல: 19, முருகேசன் வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

## நல்லூர் பா(ர்ம்) சென்ரர்

சேவை வழங்குவதையே நோக்கமாக கொண்டது.

*பிரீமா கோழித்தீன் வகைகள் கால் நடைக்குரிய மருந்து வகைக்கும் சிறந்த இடம்.*

இல: 19, முருகேசனர் ஒழுங்கை
முத்திரைசந்தையடி நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## நியூ ஈழம் ஜுவல்லரிமாட்

*அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு.*

இல: 423, (247) கே. கே. எஸ்.
வீதி சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## வைகை ரெக்ஸைரல்ஸ்

*நங்கைகள் விரும்பும் நவநாகரீகமான புடவை துணிகளுக்கும் கூறை சேலைகளுக்கும் கைத்தறி புடவைகளுக்கும் அழகு சாதன பொருட்கள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

இல: 5, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிஞ்சி மெடிக்கல்ஸ்

ஆங்கில மருந்து வகைகள் பால்மா வகைகள் பிஸ்கட் வகைகள் அன்பளிப்பு பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்று கொள்ள நாடுமிடம்.

பரமேஸ்வர சந்தி திருநெல்வேலி

எமக்கு வேறு கிளை இல்லை.

## நியூ புஸ்பா ஜுவல்லர்ஸ்

புது புது டிசைன்களில் குறிந்த காலத்தில் ஒடருக்கு செய்து கொடுக்கும் ஸ்தாபனம்.

இல: 284, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## செ. கந்தசாமி அன் சன்ஸ்

நகை வியாபாரம் உத்தரவாதமும் உறுதியும் நவீன வேலைப்பாடும் உள்ள அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்.

இல: 206, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

## ஆறுமுகம் விலாஸ்
(சைவ உணவகம்)

சிற்றுண்டி வகைகள் குளிர்பான வகைகள் காலை மதிய இரவு போசன வகைகள் மற்றும் சகல வகையான உணவு வகைகளையும் பெற்று கொள்ளலாம்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்முகம் ரெக்ஸ்

சகல விதமான துணிவகைகளுக்கும்
பிளவுஸ் துணி வகைக்கும் ஒரே இடம்

இல: 37, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

## ஆப்தீன்

தையல் உலகில் நவீன முன்னோடிகள்

இல: 5, ஜும்மா பள்ளிவாசல்
லேன், யாழ்ப்பாணம்.

கிளை: 108,/3 நாவலர் வீதி,
ஐந்து சந்தி அருகாமை,
யாழ்ப்பாணம்.

தங்கள் ஆதரவுக்கு நன்றி.

## நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்

அழகான தங்க ஆபரணங்களை குறித்த
தவணையில் பெற்று கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்.

இல: 185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சிங்கம்ஸ் ரெக்ஸ் ரைல்ஸ்

நங்கையர் விரும்பும்
புடைவை தினிசுகட்கும்
கூறைச் சேலைகட்கும்
கைத்தறி புடைவைகட்கும்

நாடவேண்டிய நிறுவனம்

இல: 172 (84) கே. கே. எஸ்
வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுமானத் தேய்வு - Depreciation

க. அருள்வேல் B.Com. (Hons)
*உதவி விரிவுரையாளர் - வணிக முகாமைத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

ஒரு நிலையான சொத்தின் பாவனை விரயம் Wearing out) அல்லது நுகர்வு (Consumption) அல்லது வேறு பெறுமதி இழப்பின் (Other Loss of Value) அளவீடே பெறுமானத்தேய்வு எனப்படுகின்றது. இவை பாவனை காரணமாக ஏற்பட்டாலும் சரி, அல்லது காலக்கழிவால் ஏற்பட்டாலும்சரி, அல்லது தொழில்நுட்ப அல்லது சந்தைமாற்றம் காரணமாக ஏற்படும் பழைமையாதல் காரணமாக ஏற்பட்டாலும்சரி பெறுமானத் தேய்வாகக் கொள்ளப்படும்.

*பெறுமானத்தேய்வின் அவசியம்: Purpose of Depreciation*

அ பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியதற்கான அடிப்படைக்கராணம் ஒரு நிலையான சொத்தின் கிரயத் (Cost) தினை அச்சொத்தின் பயன்தரக்கூடிய ஆயுட்காலம் முழுவதும் நியாயமான அளவில் பகிர்ந்தளித்தலாகும். இதன் பொருட்டு சொத்தின் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி (Revalued Amount) யிலிருந்து மதிப்பிடப்பட்ட இறுதிப் பெறுமதியை (Estimated Residual Value) கழித்துவரும் தொகையானது, குறிப்பிட்ட சொத்திலிருந்து பயன் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் காலங்களுக்கு இயலுமானவரை நியாயமான அளவில் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

ஆ) பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படுவதன் மூலம் இலாபத்தின் ஒரு பகுதி பங்கிலாபமாக வழங்கப்படுவது தவிர்க்கப்படுகின்றது. இதன் காரணமாக பங்கிலாபமாக வழங்கப்பட்டிருக்கவேண்டிய நிதி நிறுவனத்துக்குள்ளேயே வைத்திருக்கப்படுகின்றது. இதன் காரணமாக சொத்தின் பயன்தரக்கூடிய ஆயுட்கால முடிவில், இவ்வாறான நிதியைப்பயன்படுத்தி அதனை வேறு புதிய சொத்தினால் பிரதியீடு செய்வது சுலபமாக இருக்கும்.

இ) பெறுமானத்தேய்வு என்பது குறிப்பிட்ட சொத்தின் பாவனை காரணமான நட்டம் எனலாம். எனவே இணைத்தல் எண்ணக்கரு (Matching Concept) விற்கேற்ப இந்நட்டம் அது ஏற்பட்ட வருடத்தில் கிடைத்த வருமானத்திற்கெதிராக சாட்டுதல் செய்யப்படுவதே சிறந்ததாகும். அப்போதுதான் சரியான இலாபத்தை அறியமுடியும்.

மேலும் இந்நட்டத்தினை ஏனைய செலவுகளான கூலி, வாடகை போன்று கணக்குகளில் பதிவதன் மூலமே ஒரு உற்பத்திப் பொருளின் உண்மையான கிரயத்தினை கணிப்பிடமுடியும்.

*பெறுமானத்தேய்வுக்கான காரணங்கள்:*
*Causes of Depreciation*

அ) பாவனை விரயம் (Wearig out)

பொறிவிருட்சம் இயந்திரம், வாகனங்கள் போன்றவற்றினை நாம் பயன்படுத்துவதனால் அவை தேய்ந்து போகின்றன. இதுவே பாவனை விரயம் எனப்படுகின்றது இவ்வகைச் சொத்துக்களினைப் பொறுத்தவரை இவ்வாறான பாவனை விரயமே பெறுமானத் தேய்வு காரணமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) காலக்கழிவு: (Effluxion of Time)

குத்தகைகள் ஆக்கவுரிமை போன்ற குறிப்பிட்டனவான நிலையான ஆயுட்காலத்தைக் கொண்ட சொத்துக்களின் பெறுமதி அவற்றை நாம் பயன்படுத்தினாலும் சரி, பயன்படுத்தாவிட்டாலும் சரி காலம்கழிந்து செல்வதனால் குறைவடைகின்றது.

உதாரணமாக ரூபா 100,000 பெறுமதியுடைய 10 ஆண்டுகளுக்கான ஒரு குத்தகை ஆதனத்தை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு வருடமும் இதன் பெறுமதி ரூபா 10,000 ஆல் குறைவடையும். இதனை நாம் பயன்படுத்தாதுவிடினும் குறைவடையும். இதனால் இவ்வகையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வுக்கு காலக்கழிவே காரணமாகின்றது.

இ) பழமையாதல் அல்லது வழக்கிழப்பு (Obsolescene)

நவீன கண்டுபிடிப்புக்கள் சந்தைக்கு வருவதன் காரணமாக ஏற்கனவே உள்ள சொத்துக்களின் பெறுமதி — அவை புதியதாக இருந்தாலும்சரி அல்லது சிறந்த பௌதீக நிலையிலிருந்தாலும் சரி - குறைவடைவதே பழமையாதல் எனலாம். உதாரணமாக புதிய நவீன விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டு சந்தைக்கு வந்தமையால் ஏற்கனவேயிருந்த சிறிய விமானங்களின் மதிப்பு குறைவடைந்தமையை குறிப்பிடலாம்.

மேலும் பற்றுக்குறை (Inadequacy) காரணமாகவும் பழமையாதல் ஏற்படுகின்றது. உதாரணமாக ஒரு நிறுவனம் தன்னை விரிவுபடுத்தும் போது ஏற்கனவேயுள்ள சிறிய ரக இயந்திரங்களின் இயலளவு பற்றுக்குறையாக இருப்பதால் பாரிய இயந்திர சாதனங்களை நிறுவவேண்டியிருக்கும். இதனால் சிறிய ரக இயந்திரங்கள் தேவையற்றதாகிவிடும்.

அத்துடன் ஒரு குறிப்பிட்ட இயந்திரத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் ஒரு உற்பத்திப்பொருளுக்கு சந்தையில் கேள்வியற்றுப் போகும்போது அக்குறிப்பிட்ட இயந்திரத்தின் பெறுமதியும் குறைவடைகின்றது.

ஒரு குறிப்பிட்ட சொத்து ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை பொறுத்தவரை பழமையாதல் காரணமாக பெறுமதியற்றுப் போகும் போது, வேறு நிறுவனத்திற்கு பெறுமதியுடையதாக இருக்கலாம். ஒரு நிறுவனம் பாரிய இயந்திரங்களை நிறுவும் போது சிறிய ரக இயந்திரங்கள் அந்நிறுவனத்தை பொறுத்தவரை பெறுமதியற்றதாக விருந்தாலும், ஏனைய சிறிய நிறுவனங்களுக்கு அவை பெறுமதியுடையதாக அமையலாம்.

ஈ) அருகல்: - (Depletion)

சில வகையான சொத்துக்கள் உற்பத்தி (Output) காரணமாக அழிவடையும் தன்மை வாய்ந்தவையாகும். உதாரணமாக சுரங்கங்கள் எண்ணெய் வயல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை ஒரு குறிப்பிட்டனவான உற்பத்தியையே வெளியீடாகத் தரக்கூடியவையாகும் எனவே இவற்றிலிருந்து எடுக்கப்படும் வெளியீட்டினடிப்படையில் இவை பெறுமதியற்றுப்போகின்றன. இவற்றின் பெறுமதி உற்பத்திகாரணமாக அருகிப் போவதன் காரணமாக இவற்றின் பெறுமானத்தேய்வுக்கு அருகல் காரணமாகின்றன.

**பெறுமானத்தேய்வினைக் கணிப்பிடுவதில் பின்வரும் மூன்று அம்சங்களும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.**

(i) சொத்தின் கிரயம் அல்லது மதிப்பிட்ட பெறுமதி.

(ii) சொத்தின் தன்மையும் எதிர்பார்க்கப்படும் பயன்தரக்கூடிய ஆயுட்காலமும்.

(iii) மதிப்பிடப்பட்ட இறுதிப்பெறுமதி,

(i) சொத்தின் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி

கிரய எண்ணக்கரு (Cost Concept) பாதுகாப்பு எண்ணக்கரு (Prudence Concept) காரணமாக சொத்துக்களின் பெறுமதி கிரயப் பெறுமதியிலேயே காட்டப்படுவது வழக்கம். எனினும் சில சந்தர்ப்பங்களினால் பங்குடைமை, வரையறுக்கப்பட்ட கம்பனி கணக்குகளில் சொத்துக்கள் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் காட்டப்படுகின்றன பெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானத்தேய்வு கணிப்பீட்டின் போது அப் பெறுமதி கணக்குகளில் காட்டப்படுகின்றதோ அப்பெறுமதியே கவனத்தில் கொள்ளப்படல்வேண்டும்.

(ii) பயன்தரக்கூடிய ஆயுட்காலம்
Useful Life

பயன்தரக்கூடிய ஆயுட்காலம்,

அ) குத்தகையிலுள்ளது போல் முன்னரே தீர்மானிக்கப்பட்டதாக.

ஆ) அகழ்ந்தெடுத்தல் அல்லது பாவனையுடன் தொடர்புள்ளதாக, ( உ+ம் சுரங்கங்கள்)

இ) பாவனையின் அளவில் தங்கியிருப்பதாக,

ஈ) பழமையாதல் அல்லது பௌதீக அழிவின் காரணமாக குறைவடைவதாக இருக்கலாம்.

(iii) இறுதிப்பெறுமதி (Residual Value)

இறுதிப்பெறுமதி என்பது குறிப்பிட்ட சொத்து பயனற்றுப்போகும் வேளையில் அதாவது அதனது மதிப்பிடப்பட்ட ஆயுட்கால முடிவில் தேறுகின்ற பெறுமதியாகும். இது பொதுவாக கழிவுப் பெறுமதி (Scrap Value) யினைக் குறிக்கும். ஒரு சொத்தின் கிரயத்தினைப் பொறுத்தவரை மிகவும் சிறியதாக இருப்பின் இறுதிப் பெறுமதி புறக்கணிக்கப்படலாம். இறுதிப் பெறுமதியானது கணிப்பிடப்படும் போது, எதிர்கால பணவீக்கம் காரணமாக ஏற்படும் விலை அதிகரிப்பு கவனத்தில் கொள்ளப்படக்கூடாது.

## பெறுமானத்தேய்வு முறைகள்.
## Depreciation Methods

சொத்தினுல் பயன் எதிர்பார்க்கப்படும் காலங்களுக்கு இயலுமானவரை நியாயமான முறையில் பெறுமானத்தேய்வினை பகிர்ந்தொதுக்குவது முகாமையின் கடமையாகும். இதனுல் சொத்து நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் தேவைக்கும் சொத்தின் வகைக்கும் ஏற்ப மிகப் பொருத்தமான முறையினைத் தெரிவு செய்தல் வேண்டும். வேறுபட்ட வகையான நிலையான சொத்துக்களுக்கு வேறுபட்ட பெறுமானத்தேய்வு முறைகள் பின்பற்றப்படலாம். ஆனுல் ஒரே வகையான சொத்துக்களுக்கு ஒரே பெறுமானத்தேய்வு முறையினையே பின்பற்றுதல் வேண்டும்.

எந்த விதமான பெறுமானத்தேய்வு முறையினைத் தெரிவு செய்தாலும் காலத்துக்குக்காலம் நிறுவனத்தின் செயற்பாட்டு முடிவுகளை ஒப்பிட்டுப்பார்க்கத்தக்க வகையில் வேறு எதனையும் கவனத்தில் கொள்ளாது தொடர்ந்து அம்முறையினையே பின்பற்றுதல் வேண்டும்.

பெறுமானத்தேய்வு முறையினை மாற்றுவது, செயற்பாட்டு முடிவுகளையும் நிதி நிலைமையினையும் நியாயமான முறையில் சமர்ப்பிக்க உதவும் எனக்கருதப்பட்டால், மாற்றம் அனுமதிக்கப்படலாம். இவ்வாருன சந்தர்ப்பத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படாமலிருக்கும் சொத்தின் கிரயமானது, மிகுதியாகவுள்ள சொத்தின் பயன்தரக்கூடிய ஆயுட்காலத்தில் பதிவழிக்கப்படல் வேண்டும். இம் மாற்றம் கணக்கியல் கொள்கையில் ஏற்பட்ட மாற்றமாகக் கருதப்படல் வேண்டும்.

*பெறுமானத் தேய்வினைக் கணிப்பிடுவதற்கு பொதுவாக பின்வரும் முறைகள் பின்பற்றப் படுகின்றன.*

1. நேர்கோட்டுமுறை (Straight Line Method)

இம்முறையில் சொத்தின் கிரயத்தில் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்து மதிப்பிடப்பட்ட இறுதிப் பெறுமதியினைக் கழித்து வரும் தொகையானது நேர்கோட்டடிப்படையில் சொத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம் முழுவதும் பகிர்ந்து ஏற்பாடு செய்யப்படுகின்றது. இம்முறையில்:

ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு = கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட

$$= \frac{\text{பெறுமதி - இறுதிப் பெறுமதி}}{\text{மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம்}}$$

உ+ம்:

ஒரு இயந்திரத்தின் கிரயம் ரூபா 70,000. மதிப்பிடப்பட்ட இறுதிப் பெறுமதி ரூபா 5,000. பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$\text{ஆண்டுக்கான பெறுமானதேய்வு} = \frac{70.000 - 5,000}{5}$$

$$= \text{ரூபா } 13,000$$

இம்முறையின் கீழ் வருடாவருடம் ஒரே யளவான தொகையே பெறுமானத்தேய்வாக ஏற்பாடு செய்யப்படும்.

2. ஒழுங்குபாக மீதிமுறை அல்லது குறைந்து செல்லும் மீதிமுறை

Reducing Balance Method

இம்முறையின் கீழ் பெறுமானத்தேய்வானது ஒவ்வொரு வருடமும், செலவாகப் பகிர்ந்தளிக்கப்படாமல் மீதியாக இருக்கும் சொத்தின் கிரயத்தில் ஒரு நிலையான நூற்று வீதத்தில் கணிப்பிடப்படும் செலவாகப்பகிர்ந்தளிக்கப்படாது மீதியாக இருக்கும் சொத்தின் கிரயமானது ஒவ்வொரு வருடமும் குறைவடைந்து செல்லும். இதனால் நிலையான நூற்று வீதத்தில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படும் போது பெறுமானத்தேய்வானது ஒவ்வொருவருடமும் குறைவடைந்து செல்லும் கோட்பாட்டின்படி எதிர்பார்க்கப்படும் பயன்தரக்கூடிய ஆயுட்கால முடிவிலுள்ள சொத்தின் மீதிக்கிரயமானது மதிப்பிடப்பட்ட இறுதிப் பெறுமதிக்கு சமனாக அமையும்.

இம்முறையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட வேண்டிய நூற்றுவீதமானது (இவ் வீதமானது பொதுவாக பரீட்சை வினாக்களில் தரப்படும்) பின்வரும் சூத்திர மூலம் கணிப்பிடப்படும்.

$$r = 1 - \sqrt[n]{\frac{s}{c}}$$

இங்கு r = பெறுமானத்தேய்வு வீதம்
n = மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம்
s = இறுதிப் பெறுமதி
c = சொத்தின் கிரயம்

உ-ம்:-

சொத்தின் கிரயம் ரூபா 100, 000. இறுதிப்பெறுமதி ரூபா 3, 125. ஆயுட்காலம். 5 வருடங்கள்.

$$\text{பெறுமானத் தேய்வு வீதம்} = 1 - \sqrt[5]{\frac{3125}{100.000}}$$

$$= 1 - \frac{5}{10} = \frac{5}{10} = 50\%$$

5 வருடங்களிலும் ஏற்பாடு செய்யப்படவேண்டிய பெறுமானத்தேய்வு பின்வருமாறு

| | | ரூபா |
|---|---|---|
| கிரயம் | | 100.000 |
| ஆண்டு 1 | பெறுமானத்தேய்வு $= 100,000 \times \frac{50}{100} =$ | 50.000 |
| | பகிர்ந்தளிக்கப்படாத மீதிக் கிரயம் | 50. 000 |
| ஆண்டு 2 | பெறுமானத்தேய்வு $= 50,000 \times \frac{50}{100} =$ | 25. 000 |
| | பகிர்ந்தளிக்கப்படாத மீதிக்கிரயம் | 25. 000 |
| ஆண்டு 3 | பெறுமானத்தேய்வு $= 25,000 \times \frac{50}{100} =$ | 12, 500 |
| | பகிர்ந்தளிக்கப்படாத மீதிக்கிரயம் | 12, 500 |
| ஆண்டு 4 | பெறுமானத்தேய்வு $= 12,500 \times \frac{50}{100} =$ | 6, 250 |
| | பகிர்ந்தளிக்கப்படாத மீதிக்கிரயம் | 6, 250 |
| ஆண்டு 5 | பெறுமானத்தேய்வு $= 6,250 \times \frac{50}{100} =$ | 3,125 |
| | பகிர்ந்தளிக்கப்படாத மீதிக்கிரயம் (இறுதிப் பெறுமதி) | 3,125 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறையினைப் பின்பற்றுவதனால் கிடைக்கக்கூடிய நன்மைகள் வருமாறு:

(i) குறிப்பிடப்பட்ட சில சொத்துக்களின் பெறுமதியானது ஆரம்ப காலங்களில் கூடுதலாகவும், பின்னைய காலங்களில் குறைவாகவும் குறைவடைவதனை இம்முறை பிரதிபலிக்கின்றது. இவ்வகைச் சொத்துக்களுக்கு உதாரணமாக மோட்டார் வாகனங்களைக் குறிப்பிடலாம்.

(ii) சொத்தின் ஆரம்ப காலங்களில் பெறுமானத்தேய்வு கூடுதலாக அமையும்வேளை திருத்தச் செலவுகள் குறைவாக ஏற்படுகின்றன. ஆனால் காலம்செல்லச் செல்ல பெறுமானத்தேய்வு குறைவடையும் அதேவேளை திருத்தச் செலவுகள் அதிகமாக ஏற்படுகின்றன, இதனால் மொத்தச் செலவுகள் சமமாக ஏற்படலாம்.

(iii) நேர்கோட்டு முறையைப் போல் சொத்தின் ஆயுட்கால முடிவில் புத்தகப் பெறுமதி முற்றாக இல்லாது போகாமல் இம்முறையில் எப்போதும் புத்தகங்களில் ஒரு மீதி இருந்து கொண்டேயிருக்கும்.

(iv) ஆரம்ப காலங்களில் சொத்துக்கள் பயனளிப்பது கூடுதலாகவும், பின்னைய காலங்களில் அவற்றின் பயன்பாடு குறைவாகவும் இருப்பது வழமையாகும் அதற்கேற்ப ஆரம்ப காலங்களில் கூடுதலான தொகையும் பின்னைய காலங்களில் குறைவான தொகையும் பெறுமானத் தேய்வாக இம்முறையில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

3. ஆண்டுத்தவணை முறை — Annui Method

இம் முறையில் குறிப்பிட்ட சொத்தில் ஈடுபடுத்திய மூலதனமானது வட்டியை உழைக்கின்றது எனக் கொள்ளப்படுகின்றது. இங்கு ஒரு நிலையான தொகையானது வருடாவருடம் பெறுமானத் தேய்வாக சொத்துக் கணக்கில் செலவு வைக்கப்படுகின்றது. இத் தொகையானது சொத்தின் கிரயத்திலிருந்து இறுதிப் பெறுமதியைக் கழித்து வரும் தொகையுடன் உழைக்கும் வட்டியையும் சேர்க்க வரும் தொகை, அதன் ஆயுட் காலத்தில் சமனாக பதிவழிக்கக் கூடிய வகையில் கணிப்பிடப்படுகின்றது. உழைக்கும் வட்டியானது சொத்துக்கணக்கில் வரவு வைக்கப்படும். இவ்வட்டி நிலையான வட்டி வீதத்தில் குறைந்து செல்லும் மீதியில் கணிப்பிடப்படும். இவ்வாறு கணிப்பிடப்பட்ட பெறுமானத் தேய்விலிருந்து, வட்டியைக் கழித்து வரும் தொகையே உண்மையான பெறுமானத் தேய்வாக இலாப நட்டக்கணக்கிற்குக் கொண்டு செல்லப்படும்.

இம் முறையில் சொத்தின் கிரயமானது அதன் ஆயுட்காலத்தைக் கொண்ட ஒரு ஆண்டுத் தொகையாகக் கொள்ளப்பட்டு, அவ்வாண்டுத் தொகையின் பெறுமதி பெறுமானத் தேய்வாகக் கொள்ளப்படுகின்றது.

(நாம் ஒரு குறிப்பிட்ட தொகையினை நிதி நிறுவனத்திலிருந்து கடனாகப்பெற்று வட்டியுடன் சேர்த்து, குறிப்பிட்ட காலங்களுக்கு சமதவணைக் கட்டணங்களாக செலுத்தி முடிப்பது வழக்கம், வட்டி குறைந்து செல்லும் மீதி முறையில் கணிப்பிடப்படும், இதைப் போன்றே ஆண்டுத் தொகை முறையிலான பெறுமானத்தேய்வு கணிப்பீடும் அமையும்.)

இம்முறை மூலம் பெறுமானத்தேய்வு செய்யப்படும் தொகையானது ஆண்டுத் தொகை அட்டவணை மூலம் பெறப்படும், பின்வரும் சூத்திரம் மூலமும் கணிப்பிட முடியும்,

$$\left.\begin{array}{r}\text{ஒரு ரூபா கிரயத்துக்கான}\\ \text{பெறுமானத்தேய்வு தொகை}\end{array}\right\} = \frac{i}{1-(1+i)^{-n}}$$

இங்கு $i$ = ஆண்டு வட்டி வீதம்

$n$ = ஆயுட்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்: ஒரு சொத்தின் கிரயம் ரூபா 6000, ஆயுட்காலம் 7 வருடங்கள் ஆண்டு வட்டி வீதம் $6\frac{1}{2}$%

$$\text{ஆண்டுப் பெறுமானத்தேய்வு} = 6000 \times \frac{6\frac{1}{2} / 100}{1-\left(1+\frac{6\frac{1}{2}}{100}\right)^{-7}}$$

= ரூபா 1094 (அண்ணளவில்)

இதனை நாம் ஓர் அட்டவனை மூலம் தெளிவாக்கலாம்

| ஆண்டு | மீதி | குறியீட்டு வட்டி | குறியீட்டு பெறுமானத் தேய்வு | உண்மையான பெறுமானத் தேய்வு |
|---|---|---|---|---|
| 1 | 6000 | 390 | (1094) | 704 |
| 2 | 5296 | 344 | (1094) | 750 |
| 3 | 4546 | 295 | (1094) | 799 |
| 4 | 3747 | 244 | (1094) | 850 |
| 5 | 2897 | 188 | (1094) | 906 |
| 6 | 1991 | 129 | (1094) | 965 |
| 7 | 1026 | 68 | (1094) | 1026 |
| | | | மொத்தம் | 6000 |

உண்மையான பெறுமானத்தேய்வு என்பது குறியீட்டு பெறுமானத்தேய்விலிருந்து (Notional Depreciation), குறியீட்டு வட்டியை (Notional Interest) கழித்து பெறுவதாகும். இதுவே இலாபநட்டக் கணக்கிற்கு கொண்டு செல்லப்படும்.

4 பெறுமானத்தேய்வு ஆழ் நிதி முறை Depreciation Sinking Fund Method

இம் முறையில் வருடாவருடம் பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்ற அதே வேளை சொத்தின், எதிர்பார்க்கப்படும் ஆயுட் கால முடிவில் புதிய சொத்தினைக் கொள்வளவு செய்வதற்கான நிதியினை பெற்றுக் கொள்வதற்கும் வழி செய்யப்படுகின்றது சொத்தின் ஆயுட் கால முடிவில் புதிய சொத்து கொள்வனவு செய்யப்படுவதற்கு தேவையான நிதியினை, நிறுவனத்தின் தொழிற்பாடு மூலதனத்தினைப் பாதிக்காத வகையில் இம்முறை மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இம் முறை மூலம் வருடாவருடம் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய தொகையானது ஆழ் நிதி அட்டவனையை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகின்றது, இத்தொகை இலாப நட்டக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு, பெறுமானத் தேய்வுக்கான ஆழ்நிதிக்கணக்கில் செலவு வைக்கப்படுகின்றது. (இங்கு பெறுமானத்தேய்வுக்கான ஆழ் நிதிக் கணக்கு மெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக்கணக்கைப் போன்றிருக்கும்.) அதே வேளை இத்தொகைக்கு சமமான தொகை, நிறுவனத்திற்கு வெளியே முதலீடு செய்யப்படும், இது ஆழ் நிதி முதலீட்டுக்கணக்கில் வரவு வைக்கப்படும். இம் முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டி ஆழ் நிதிக் கணக்கில் செலவு வைக்கப்படும். வருடாவருடம் பெறப்படும் வட்டியும் பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படும் தொகையும் மீண்டும் மீண்டும் முதலீடு செய்யப்படும். இறுதி வருடத்துக்கு முதல் வருடம்வரை இவ்வாறு முதலீடு செய்யப்படும். ஆனல் இறுதி வருடத்தில் முதலீடு செய்யப்படுவதில்லை. ஏனெனில் அவ்வருடத்தில் முதலீடுகள் விற்கப்பட்டு கிடைக்கும் பணத்தைக் கொண்டு புதிய சொத்து கொள்வனவு செய்யப்படவிருப்பதாலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் நட்டம் இலாபநட்டக்கணக்கிற்கு கொண்டு செல்லப்படும். இலாபமாயின் கம்பனியாயின் ஒதுக்கமாகக் காட்டப்படும், ஏனைய நிறுவனங்களாயின் இலாபநட்டக்கணக்கில் காட்டப்படும். இறுதியில் ஆழ் நிதிக்கணக்கு மீதி குறிப்பிட்ட சொத்துக்கணக்கிற்கு மாற்றப்படுவதன் மூலம் இரண்டு கணக்குகளும் சமப்படுத்தப்படும்.

5 மறுபடி விலைமதித்தல் முறை
Revaluation Method

சில வகையான சொத்துக்களுக்கு சாதாரண முறைகளைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்வினைக் கணிப்பிடுவது பொருத்தமானதாக இருக்க மாட்டாது. சில்லறை ஆயுதங்கள் (Loose Tools) இந்த வகையினுள் அடங்குகின்றன. இவை மிகச்சிறியனவான பல வகையான ஆயுதங்களைக் கொண்டவையாகும். கோட்பாட்டளவில் இவை நிலையான சொத்துக்களாக அமைகின்ற போதும், நடைமுறையில் இவை நீண்ட காலம் பயன்படுவதில்லை சில காணுமல் போய் விடுகின்றன சில களவாடப்பட்டு விடுகின்றன. சில பழுதடைந்து விடுகின்றன. உடைந்தும் விடுகின்றன, அத்துடன் இவை விலை குறைந்தவையாகவும் காணப்படுகின்றன. நிறுவனங்கள் இவற்றிற்கு தனித்தனி கணக்குகளைப் பராமரிப்பதில்லை. மேலும் இவற்றிற்கு தனித்தனி கணக்குகளைப் பேணி, சரியான முறையில் பதிவுகளை மேற்கொள்வது சிரமமான காரியமாகும்.

இவை விலை குறைந்தவையாகவும், நீண்ட கால ஆயுளைக் கொண்டிருப்பவையாகவும் காணப்படினும் இவற்றின் ஆயுளை சரியாக மதிப்பீடு செய்வது கடினம் எனவே நேர்கோட்டு அடிப்படையிலோ அல்லது குறைந்து செல்லும் மீதி அடிப்படையிலோ பெறுமானத்தேய்வைக் கணிப்பிடின் கூடுதலான அல்லது குறைவான பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்வதாக அமையக் கூடும்.

இதனுல் மறுபடி விலை மதித்தல் முறை பின்பற்றப்படுகின்றது. இம் முறையின்படி வருட ஆரம்பத்தில் சொத்து விலை மதிக்கப்படுகின்றது. மேலதிகமாக ஏதாவது கொள்வனவு செய்யப்படின் முன்னர் மதிப்பிட்ட விலையுடன் அதுவும் சேர்க்கப்படும் பின் வருட இறுதியில் மீண்டும் விலை மதிக்கப்பட்டு குறைவடைந்துள்ள தொகை பெறுமானத்தேய்வாகக் கொள்ளப்படும்.

உதாரணம்:

ஒரு நிறுவனம் 1-1-1989 இல் சில்லறை ஆயுதங்களை ரூபா 2.000 ஆக விலை மதித்தது. 1989 இல் மேலும் ரூபா 1,000 க்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 31-12-1989 இல் சில்லறை ஆயுதங்கள் ரூபா 2,500 ஆக விலை மதிக்கப்பட்டன.

எனவே 1989 ஆம் ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 2,000 + 10,00 — 2500 ரூபா 500 ஆகும்.

5. ஏனைய முறைகள்- Other Methods

(i) இயந்திர மணித்தியால முறை
Machine Hour Method

உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களுக்கு பொதுவாக இம் முறை பயன்படுத்தப்படுகின்றது. இம் முறையின் படி இயந்திரத்தின் மொத்த இயலளவு மணித்தியாலங்கள் அதாவது இயந்திரம் அதன் ஆயுட்காலத்தில் மொத்தமாக எத்தனை மணித்தியாலயங்கள் இயங்கும் என்பது மதிப்பிடப்படும். பின்பு இயந்திரத்தின் கிரயத்துடன் இதனை ஒப்பிட்டு ஒரு மணித்தியாலயத்துக்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படும். பின்பு ஒவ்வொரு வருடமும் இயந்திரம் வேலை செய்யும் மணித்தியாலயங்களுக்கேற்ப பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படும்

உ+ம்

1 ஜனவரி 1985 இல் ஒரு இயந்திரம் ரூபா 100,000 க்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. இதன் மொத்த இயலளவு 10,000 மணித்தியாலங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் ஆயுட்காலம் ஐந்து வருடங்கள் எனவும் அது அக்காலத்தில் பின் வருமாறு வேலை செய்யும் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | மணித்தியாலயங்கள் |
|---|---|
| 1985 | 2,000 |
| 1986 | 2,250 |
| 1987 | 2,500 |
| 1988 | 1,500 |
| 1989 | 1,750 |
| மொத்தம் | 10, 000 |

அவ்வாருயின் ஒவ்வொரு ஆண்டுக்கு மான பெறுமானத்தேய்வு பின்வருமாறு அமையும்.

(10,000 மணித்தியாலங்களுக்கு ரூபா 100,000 ஆயின் ஒரு மணிக்கு ரூபா 10 ஆகும்.

| ஆண்டு | மணித்தியாலம் | பெறுமானத்தேய்வு |
|---|---|---|
| 1985 | 2.000 | 20,000 |
| 1986 | 2,250 | 22,500 |
| 1987 | 2,500 | 25,000 |
| 1988 | 1,500 | 15,000 |
| 1989 | 1,750 | 17,500 |
| மொத்தம் | | 100,000 |

(ii) உற்பத்தி முறை அல்லது அருகல்முறை Output Method or Depletion Method

சுரங்கங்கள் போன்ற சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வானது அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ள மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்தியையும் ஒப்பிட்டுக் கணிப்பிடப்படுகின்றது. இம்முறையே அருகல் முறை அல்லது உற்பத்தி முறை எனப்படுகின்றது.

உ+ம்:

ஒரு நிறுவனம் ரூபா 50, 000 க்கு சுரங்கமொன்றை கொள்வனவு செய்கின்றது. இச் சுரங்கத்திலிருந்து எடுக்கக்கூடிய மொத்த கனிப்பொருளின் அளவு 10. 000 தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் ஆயுட்காலம் நான்கு வருடங்களாகும். இக் காலப்பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்படவுள்ள கனிப்பொருட்களின் அளவு பின்வருமாறென மதிப்பிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | உற்பத்தி (தொன்கள்) |
|---|---|
| 1 | 2,000 |
| 2 | 2,500 |
| 3 | 2,750 |
| 4 | 2,750 |
| மொத்தம் | 10,000 |

அவ்வாருயின் ஒவ்வொரு ஆண்டுக்கு மான பெறுமானத்தேய்வு பின்வருமாறு அமையும்.

[10,000 தொன்கள் கனிப் பொருளுக்கு ரூபா 50,000 எனின் ஒரு தொன்னுக்கு ரூபா 5 ஆகும்.]

| ஆண்டு | உற்பத்தி தொன்கள் | | பெறுமானத்தேய்வு ரூபாவில் |
|---|---|---|---|
| 1 | 2,000 | 2000 × 5 = | 10,000 |
| 2 | 2,500 | 2500 × 5 = | 12,500 |
| 3 | 2,750 | 2,750 × 5 = | 13,750 |
| 4 | 2,750 | 2 750 × 5 = | 13 750 |
| | | மொத்தம் | 50,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No ..........

(iii) வருடங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட முறை.

Sum of the Years Degits Method

இம்முறை மூலம் சொத்தின் ஆரம்ப காலங்களில் கூடுதலான தொகையும் பின்னைய காலங்களில் குறைவான தொகையும் பெறுமானத்தேய்வாக ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஒரு சொத்தின் ஆயுட்காலம் 5 வருடங்கள் எனின் முதலாவது வருடத்தில் அதற்குரிய பெறுமானத்தேய்வு 5 பங்காக கொள்ளப்படுகின்றது. ஏனெனில் அச்சொத்தானது கொள்வனவு செய்யப்பட்டதிலிருந்து 5 வருடங்கள் பாவனையிலிருக்கும் என்பதாலாகும். அதைப்போன்றே இரண்டாவது வருடத்தை எடுத்துக்கொண்டால் அது மேலும் நான்கு வருடங்கள் பாவனையிலிருக்குமென்பதால் பெறுமானத்தேய்வு நான்கு பங்காகக் கொள்ளப்படுகின்றது இவ்வாறே குறைவடைந்து இறுதி வருடத்திற்குரிய பெறுமானத்தேய்வு ஒரு பங்காகக் கொள்ளப்படும். இதனை நாம் பின்வரும் அட்டவணை மூலம் காட்ட முடியும்.

| ஆண்டு | பயன்படவுள்ள காலம் | பெறுமானத் தேய்வுப் பங்கு |
|---|---|---|
| 1 | 5 | 5 |
| 2 | 4 | 4 |
| 3 | 3 | 3 |
| 4 | 2 | 2 |
| 5 | 1 | 1 |
| | மொத்தம் | 15 |

இச்சொத்தின் கொள்விலை ரூபா 30,000 எனின் பெறுமானத்தேய்வு பின்வருமாறு அமையும். (மொத்தம் 15 பங்கிற்கு ரூபா 30,000 எனின் ஒரு பங்கிற்கு ரூபா 2,000 ஆகும்.)

| ஆண்டு | பெறுமானத் தேய்வு பங்கு | பெறுமானத் தேய்வு ரூபா |
|---|---|---|
| 1 | 5 | 10,000 |
| 2 | 4 | 8,000 |
| 3 | 3 | 6,000 |
| 4 | 2 | 4,000 |
| 5 | 1 | 2,000 |
| | மொத்தம் | 30,000 |

பெறுமானத்தேய்வுக்கான கணக்கீட்டு நியமத்திலிருந்து சில குறிப்புக்கள்

1. ஒரு சொத்தின் பயன்தரும் ஆயுட்காலத்தின் மீளாய்வானது, செயற்பாட்டு முடிவுகளையும் நிதி நிலைமைகளையும் நியாயமான முறையில் காட்டும் எனக்கருதப்படின் பயன்தரும் ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது, ஒரு சொத்தின் பெறுமானத்தேய்வு செய்யப்படாமலிருக்கும் பகுதியின் கிரயம்,மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடியதாகவுள்ள தொகையினை விட அதிகமாக இருக்குமாயின் அவ்வித்தியாசம் உடனடியாக வருமானத்தில் சாட்டுதல் செய்யப்படல் வேண்டும்.

அனுபவத்தின் முடிவாக அல்லது மாற்றமடைந்த சந்தர்ப்பங்களின் விளைவாக ஒரு சொத்தின் பயன்தரும் ஆயுட்காலத்தின் ஆரம்ப மதிப்பீடு மாற்றம் செய்யப்பட வேண்டியதெனக் கருதப்பட்டால் சொத்தின் பெறுமதி மீளக் குறிப்பிடப்பட்டு மாற்றம் செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தில் பதிவழிக்கப்படல் வேண்டும். இதனால் வரும் வேறுபாடு மீண்டும் இலாப நட்டக்கணக்கில் பதியப்படக் கூடாது.

2. குறிப்பிட்ட காலப்பகுதிக்கான இலாப நட்டக்கணக்கில் சாட்டுதல் செய்யப்படும் பெறுமானத்தேய்வானது ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்ட சொத்தின் தொகையின் அது வரலாற்றுக் கிரயத்திலிருந்தாலும் சரி மீள்மதிப்பீட்டு பெறுமதியிலிருந்தாலும் சரி அடிப்படையிலேயே செய்யப்படல் வேண்டும். ஆண்டுக்கான பெறுமான தேய்வானது முழுமையாக இலாப நட்டக் கணக்கில் சாட்டுதல் செய்யப்படல் வேண்டும். பெறுமானத்தேய்வின் எந்தவொரு பகுதியும் நேரடியாக ஒதுக்கங்களில் பதியப்படக்கூடாது. (ஆழ் நிதி போன்ற ஒதுக்கங்களுக்கு இலாப நட்டப்பகிர் கணக்கிலிருந்து ஒதுக்குவதை இது தடை செய்யாது.)

3. எந்த நேரத்திலாவது சொத்தின் பெறுமதியில் நிரந்தரக் குறைவு காணப்படுமாயின் அத்துடன் தேறிய புத்தகப்பெறுமதி மீளப்பெற முடியாததெனக் கருதப்பட்டால் உட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னடியாக மதிப்பிடப்பட்ட மீளப் பெறக்கூடிய தொகைக்கு வரக்கூடியவாறு சொத்து குறைத்தெழுதப்படல் வேண்டும். மேலும் அத்தொகை சொத்தின் மிகுதியாகவுள்ள பயன்தரு ஆயுட்காலத்தில் பதிவழிக்கப்படல் வேண்டும். எந்த நேரத்திலாவது அவ்வாறான ஏற்பாடு செய்வதற்கு காரணமில்லாது போகுமாயின் அவ்வாறான ஏற்பாடு எந்தளவுக்கு தேவையற்றதெனக் கருதப்படுகின்றதோ அத்தொகை திரும்ப பதியப்படல் (Written Back) வேண்டும்.

4. நிலையான சொத்துக்களில் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் மறுமதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளிலேயே நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டுமென்பது நிறுவனத்தின் கொள்கையாக இருப்பின் அவ்விதமான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு, தேறிய மறுமதிப்பீடு செய்யப்பட்ட விலை, மிகுதியாகவுள்ள பயன்தரும் ஆயுட்காலம் என்பவற்றினடிப்படையிலமைதல் வேண்டும். நிரந்தர பெறுமதிக் குறைவுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பின்னர் அதில் தேவையற்றதென கருதப்படும் தொகை தவிர்ந்த, மறுமதிப்பீட்டுக்கு முன்னர் சாட்டுதல் செய்யப்பட்ட ஏதாவது பெறுமானத்தேய்வு இலாப நட்டக் கணக்கில் திரும்ப பதியப்படக் கூடாது.

5. அருகலுக்கு அதாவது ஒழிந்து போதலுக்கு (Depletion) அல்லது காணியின் பெறுமதி பாதகமான பாதிப்புக்குட்பட்டிருந்தாலொழிய இறையில் காணிக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்வது அவசியமானதல்ல மேற்கூறிய சந்தர்ப்பத்தில் பெறுமதி குறைத்தெழுதப்படல் வேண்டும்.

கட்டிடங்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்

6. பெறுமானத்தேய்வு செய்யப்படக்கூடிய சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தலையங்கள் தொடர்பாகவும், நிதிக் கூற்றுக்களில் பின்வருவன வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

அ) பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு முறை

ஆ) பயன்தரு ஆயுட்காலங்கள் அல்லது பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு விகிதம்,

இ) அக்காலத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்ட மொத்தப் பெறுமானத்தேய்வு;

ஈ) திரண்ட பெறுமானத்தேய்விலேற்பட்ட அசைவு;

7. (அ) பெறுமானத்தேய்வு முறையில் அல்லது பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்பட்ட மாற்றம் கணிசமானதாக இருப்பின் மாற்றம் ஏற்பட்ட ஆண்டிலும்;

ஆ) சொத்துக்கள் மீளமதிப்பீடு செய்யப்பட்டு, சாட்டுதல் செய்யப்படும் பெறுமானத்தேய்வில் மறுமதிப்பீட்டின் விளைவு கணிசமானதாக இருப்பின்; மறுமதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டிலும்.

## References:


(i) Sri Lanka Accounting Standard no 08

(ii) Book Keeping And Accounts Paul Gee

(iii) Business Accounting-

-FRANK WOOD


✲✲



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுப் பெருத கணக்குப்பதிவுகளைக் கொண்டு முடிவுக் கணக்குகளைத் தயாரித்தல்

க. கஜேந்திரன் B Com (Hons), MBA.
வணிக முகாமைத்துவத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எந்த ஒரு நிறுவனமும் இலாப நோக்குடன் இயங்கினுல் என்ன, இலாப நோக்க மில்லாது இயங்கினுல் என்ன இவை தனது நடவடிக்கைகளை Or பெறுமதி மாற்றங் களைக் கணக்கில்ப் பதியும் போது "வரவு" "செலவு" என்ற இரட்டைப்பதிவுத், தத்துவ அடிப்படையில் பதிவு செய்தல் வேண்டும். அதாவது ஒருவருக்குக் கொடுக்கின்ற அம்சம் மற்றவருக்கு பெறுகின்ற அம்சம் என்ற ரீதியில் அமையும். இதனுல் எழும் பெறுமதி மாற்றமானது ஒரு துறையிலே அதிகரிப்பையும், இன்னெருதுறையிலே குறைவையும் ஏற்படுத்தும் ஆனுல் சில நிறுவனங்கள் இதற்கு மாருக இரட்டைப் பதிவு இன்மையக் கடைப்பிடிக்கின்றன.

இரட்டைப்பதிவு இன்மையை வியாபார நடவடிக்கைகளைப் பொறுத்து 3 வகையின தாக வகைப்படுத்தலாம்.

(1) தவிர்க்கமுடியாத காரணங்களினுல் சில நடவடிக்கைகளைப் பதியாது விடுதல்.
(2) ஒற்றைப்பதிவு Single Entry
(3) நிறைவில் பதிவு Incomplete Entry

**தவிர்க்க முடியாத காரணங்களினுல் சில நடவடிக்கைகளைப் பதியாது விடுதல்.**
பின்வரும் சந்தர்ப்பங்களில் இவை ஏற்படலாம்.

(1) நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றவர்களின் கவனக்குறைவினுல் சில நடவடிக்கைகளைப் பதியாது விடுதல்.

(2) நிறுவனத்தினது கணக்கீடுகள் தீயினுல் அழிந்து போனுல் or தொலைந்துபோ னுல் பதிவுகள் இல்லாமல் போதல். இவ்வாருன நிலைமைகளில் நிறுவனத்தின் சரியான இலாபத்தையோ or நட்டத்தையோ கணக்கிட முடியாது இச் சந்தர்ப்பத்தில் கிடைக் கும் சரியான ஆதாரங்களைக் கொண்டு ஒரு உத்தேசரீதியில் கணக்குகளைத் தயாரிக்க வேண்டும்.

**ஒற்றைப்பதிவு Single Entry**

இம்முறையின் கீழ் முக்கிய விடயங்களுக்கு மட்டும் ஒரு பதிவு மாத்திரமே பதியப் படும். இரட்டைப்பதிவு முறையைப்போல், பெறும் அம்சம், கொடுக்கும் அம்சம் என்று பதியும் முறை இங்கு இல்லை. இவ்வாருக இரட்டைப்பதிவு முறை அடிப்படையில் பதியா மையாலும் சில முக்கிய நடவடிக்கைகளுக்கு மட்டும் ஒரு பதிவை மாத்திரம் பதிவதனுலும் பதிந்த நடவடிக்கைகளைச் சரி பார்க்கவோ, இறுதிக் கணக்குகளை தயாரிக்க, பரீட்சை மீதி தயாரித்தல் போன்ற செயற்பாடுகளை செய்யமுடியாமல் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறையின் கீழ் தமது நடவடிக்கையைப் பதிகின்ற நிறுவனத்தினது இலாப நட்டத்தை அறிய வேண்டுமாயின் ஆரம்பமூலதனத்தையும், இறுதி மூலதனத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமே இலாபநட்டங்களைக் கணக்கிட முடியும். மேலதிகமாக இடைக் காலங்களில் முதலீடு செய்தாலோ அல்லது தமது சொந்தத் தேவைக்கு பொருட்களை or பணத்தினை பற்றிக் கொண்டாலோ இவைகளைச் செம்மையாக்கிய பின்பே இலாப நட்டத்தினைக் கணிப்பிடல் வேண்டும்.

இரட்டைப் பதிவுமுறைக்கு மாற்றமுடியாத ஒற்றைப் பதிவுகளைக் கொண்டிருக்கின்ற ஒரு நிறுவனத்தினது இலாப நட்டம் காணும் முறையானது கீழ்க்காட்டப்பட்டுள்ள உதாரணத்தில் இருந்து விளங்கிக் கொள்ள முடியும்.

**கணிப்பீட்டு முறை**

விஜேத் என்ற வியாபாரியின் 31-12-88 க்குரிய ஆரம்ப நிலவரக் கூற்று.

| | | | |
|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | | | |
| மோட்டார் வாகனம் | | 32,000 | |
| தளபாடம் | | 24 000 | |
| | | | 34,400 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| சரக்கிருப்பு | 1,000 | | |
| கடன் பட்டோர் | 9,200 | | |
| காசு | 160 | | |
| | | | 10,360 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 44,760 |

**கழிக்குக**

| | | |
|---|---|---|
| வங்கி மேலதிகப் பற்று | | 12,000 |
| கடன் கொடுத்தோர் | | 6,000 |
| சென்மதி உண்டியல் | | 800 |
| | 18,800 | |
| ஆரம்ப மூலதனம் | 25,960 | |

உரிமையாளர் மூலதனம் = மொத்தச் சொத்துக்கள் - புறத்துப் பரிப்புக்கள்.

விஜேத் என்ற சில்லறை வியாபாரியின் ஒற்றைப்பதிவு முறையில் பதியப்பட்ட அவருடைய ஏடுகளில் இருந்து எடுக்கப்பட்ட மீதங்கள் பின்வருமாறு:

| சொத்துக்களும் கடன்களும் | 31-12-1988 | 31-12-1989 |
|---|---|---|
| கடன் பட்டோர் | 9,200 | 4,000 |
| காசு | 160 | 640 |
| வங்கி மேலதிகப்பற்று | 12,000 | 2,000 |
| தளபாடம் | 2,400 | 3,600 |
| மோட்டார் வான் | 32,000 | 40,000 |
| சரக்கிருப்பு | 1.000 | 1,600 |
| கடன் கொடுத்தோர் | 6,000 | 20,000 |
| சென்மதி உண்டியல் | 800 | 1,800 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலதிக தகவல்கள்**

1. வினோத் 30-6-89 ல் முடிவடைந்த வருடத்தில் 1.000/- பற்றினர். மேலதிமாக 4,000 வினை முதலீடு செய்தார்.
2. தளபாடத்திற்கு ஏற்பட்ட பெறுதானத்தேய்வு கொள்விலையில் 5% மும் மோட்டார் வானுக்கு கொள்விலையில் 10% மும் ஆகும்.

. தளபாட மோட்டார் வாகன கொள்வனவுகள் வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப் பட்டதாகும்.

4 கடன் பட்டோர் தொகையில் 10% அறவிட முடியாததாகும்.

வருட முடிவில் இந்நிறுவனத்தின் இலாப நட்டத்தை எவ்வாறு கணிப்பிடுவீர்?
வினோத் என்ற வியாபாரியின் 31-12-89 ம் ஆண்டின் இறுதி நிலவரக் கூற்று.

| | | | |
|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| மோட்டார் வாகனம் | 4,0000 | | |
| கழ் பெறுமானத்தேய்வு | 4,000 | | |
| | | 36,000 | |
| தளபாடம் | 36,00 | | |
| கழி பெறுமானத் தேய்வு | 180 | | |
| | | 32,420 | |
| | | | 39,420 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | 1,600 | | |
| கடன் பட்டோர் | 4,000 | | |
| கழி அறவிட முடியாக் கடன் | 400 | | |
| காசு | | 3,600 | |
| | | 640 | |
| | | | 5,840 |
| மொத்தச் சொத்துக்கள் | | 45,260 | |
| **நடை முறைக் கடன்கள்** | | | |
| கடன் கொடுத்தோர் | 2.000 | | |
| சென்மதி உண்டியல் | 1,800 | | |
| வங்கி மேலதிகப் பற்று | 2.000 | | |
| | | 5,800 | |
| இறுதி மூலதனம். | | 39,460 | |

தேறிய இலாபம் = இறுதி மூலதனம் — ஆரம்ப மூலதனம்.
+ பற்று மேலதிக மூலதனம்.

10,500 = 39,460 — 25,960 + 1,000 — 4,000

எனவே இந்நிறுவனத்தின் தேறிய இலாபம் 10,500/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவில் பதிவு
## *Incomplete Entry*

இம்முறையின் படி நடவடிக்கைகள் ஆட்குறிக்கணக்குகளிலும், காசு or வங்கிக் கணக்குகளில் பதிவு செய்யப்படுகின்றன. இம்முறையானது ஆட்குறியாக் கணக்குகளைப் புறக்கணிக்கின்றன. இந்நிலையானது பூரணமாக ஒற்றைப் பதிவு அடிப்படையில் பதியாமலும், பூரணமாக இரட்டைப் பதிவு முறையைப்பின்பற்றாமையும் குறிக்கும். அதாவது இங்கு பெறும் அம்சம் கொடுக்கும் அம்சம் என்ற அடிப்படையில் பதிவுகள் இடம் பெற்றிருக்க மாட்டாது.

இங்கு இட்டைப் பதிவுமுறை பூரணமாகப் பின்பற்றப்படாத காரணத்தினால் பரீட்சை மீதியைத் தயாரித்துக் கணக்குகளை சரிபார்க்க முடியாது. ஆனால் இங்கு ஆட்குறிக் கணக்குகளிலும், காசு or வங்கி or இரண்டிலும் நடவடிக்கைகள் பதியப்பட்டிருப்பதனால் பின்வரும் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்து, வியாபார இலாபநட்டக்கணக்கு, ஐந்தொகை என்பவற்றைத் தயாரிக்க முடியும்.

1. ஆரம்ப நிலவரக் கூற்றைத் தயாரிக்க வேண்டும் காணப்படுகின்ற ஆரம்ப மீதங்களை அவ்வககணக்குகளில் சொத்துக்களாயின் வரவுப்பக்கத்திலும், பொறுப்புக்களாயின் செலவுப்பக்கத்திலும் பதிவு செய்தல் வண்டும். பொறுப்புக்களிலும் பார்க்க சொத்துக்களின் பெறுமதி கூடுதலாகக் காணப்படுமாயின் இம் மேலதிகம் மூலதனம் என்றும் பொறுப்புக்களிலும் பார்க்க சொத்துக்களின் பெறுமதி குறைவாகக் காணப்படுமாயின் இதனை மூலதனக் குறைவு எனக் கருதுதல் வேண்டும். இம் மூலதனம் அல்லது மூலதனக் குறைவு மூலதனக் கணக்கிற்கு செலவு வைத்தல் வேண்டும்.

2. வங்கிக்கணக்கு, காசுக்கணக்கு ஆகியவற்றை நுணுக்கமாக ஆய்வு செய்தல் வேண்டும். ஏனெனில் காசு வங்கிக் கணக்குகளில் பதியப்பட்ட பதிவுகளுக்கு அடுத்த பதிவு மேற்கொள்ளப் படாததினால் ஆகும். எனவே இவைகளைப் பூரணமான இரட்டைப் பதிவு முறைக்கு கொண்டு வருவதற்குப் பின்வருமாறு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

**(அ) காசுக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காணப்படும் பதிவுகள்**

(i) கடன் பட்டோரிடம் இருந்து பெறப்பட்ட பணத்தை கடன்பட்டோர் கணக்கில் செலவில் பதிதல்.

(ii) முதலீடுகளில் இருந்து வருமானம் எனில் அவ்வவ்முதலீட்டுக் கணக்குகளில் செலவில் பதிதல்.

(iii) சொத்துக்களை விற்பனை செய்த பணமாயின் இத்தொகையை பொருத்தமான கணக்குகளில் செலவில் பதிக.

(iv) ஏனைய விடயங்கள் அவ்வப் பொருத்தமான கணக்குகளுக்கு செலவுப்பக்கத்திற்கு மாற்றப்படல் வேண்டும்.

**(ஆ) காசுக் கணக்கின் செலவுப் பக்கத்தில் காணப்படும் பதிவுகள்**

(i) கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவை கடன் கொடுத்தோர் கணக்கில் வரவிற் பதிதல்.

(ii) பல்வேறு தன்மை கொண்ட செலவுகளுக்கான கொடுப்பனவை உரிய கணக்குகளில் வரவில் பதிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) பெட்டிக் காசுக்கான கொடுப்பனவை பெட்டிக் காசுக்கணக்கில் வரவில் பதிவிடுக.

(iv) உரிமையாளரின் தனிப்பட்ட எடுப்பனவுகள், மூலதனக்கணக்கில் அல்லது நடை முறைக் கணக்கில் வரவில் பதிதல் வேண்டும்.

(v) சொத்துக்கள் வாங்கி இருப்பின் அத்தொகை உரிய சொத்துக் கணக்குகளில் வரவு வைத்தல் வேண்டும்.

(3) உரிமையாளர் வங்கியில் இருந்து கடன் பெற்ருே அல்லது தனது ஏனைய வருமானங்களில் இருந்து குறித்த நிறுவனம் சார்பான செலவினங்களை மேற்கொண்டுள்ளாரா என்பதனை விசாரித்து அறிதல் வேண்டும். அவ்வாறு செலவுகளை மேற்கொள்ளாராயின் உரிய செலவுக் கணக்குகளில் வரவிலும், மூலதனக் கணக்கில் செலவிலும் பதிதல் வேண்டும். அத்துடன் உரிமையாளர் வியாபார இருப்பில் இருந்து பொருட்களை தனது சொந்தத்தேவையின் பொருட்டு எடுத்துள்ளாரா என்பதனையும் அறிந்து அவ்வாறு எடுத்திருப்பாராயின் அதன் பெறுமதியை மூலதனக் கணக்கில் வரவிலும், இருப்புக்கள் கணக்கில் செலவிலும் பதிக.

4) கடன் விற்பனையின் போது வருட முடிவில் முழுவருமதியையும் பெற்றுக்கொள்ள முடியுமென்பது சாத்தியமற்றது. ஆதலால் வருட இறுதியில் குறித்த தொகை மிகுதியாகக் காணப்படும் இம் மீதி அடுத்த வருடத்திற்கு ஆரம்பக்கடன் பட்டோர் மிகுதியாகும்.

குறித்த கணக்காண்டு காலத்திற்கான விற்பனையை கடன்பட்டோர் கணக்கைத் தயாரிப்பதன் மூலம் அறிந்து கொள்ளமுடியும். ஆரம்பக்கடன்பட்டோர் மீதியை கடன்பட்டோர் கணக்கில் வரவில் பதிதல் வேண்டும். கடன்பட்டோரிடம் இருந்துபெற்றபணத்தை கடன்பட்டோர் கணக்கில் செலவில் பதிக. கழிவுவழங்கப்பட்டிருப்பின் இதனைக் கொடுத்த கழிவுக் கணக்கின் வரவிலும் கடன்பட்டோர் கணக்கில் செலவிலும் பதிக. குறித்த தொகையை அறவிட முடியாதது என தீர்மானிப்பின் அத்தொகையை அறவிட முடியாக்கடன் கணக்கில் வரவிலும் கடன்பட்டோர் கணக்கில் செலவிலும் பதிக, வியாபார உரிமையாளர், வருட முடிவில் வருமதியாளரிடம் இருந்து இன்னும் பெற்றுக் கொள்ள வேண்டிய வருமதித் தொகையை கணிப்பீடு செய்திருப்பார். இதனை கடன்பட்டோர் கணக்கில் மீதி/கீ/கொ/ சென்றது என செலவில் காட்டி இக்கணக்கை சமப்படுத்திய பின்பு இதனை மீதி/கீ/கொ/வ என வரவில் காட்டுக. இக்கணக்கைச் சமப்படுத்தும் போது ஏற்படும் வித்தியாசத்தொகை கடன் விற்பனையாக கருதப்படும். அதாவது இத்தொகை கடன்பட்டோர் கணக்கில் வரவிலும் விற்பனைக்கணக்கில் செலவிலும் பதிவிடப்படும்.

(5) கடன் விற்பனையைக் கணிப்பீடு செய்வது போலவே, கடன்கொடுத்தோர் கணக்கை ஆரம்பித்து உரிய முறையில் பதிவினை மேற்கொண்டு கடன் கொள்வனவைக் கண்டு கொள்ளமுடியும்.

(6) காசு விற்பனை, காசுக் கணக்கில் வரவிலும் விற்பனைக்கணக்கில் செலவிலும் பதிவிடப்படும். காசுக் கொள்வனவு கொள்வனவுக்கணக்கு வரவிலும் காசுக்கணக்கில் செலவிலும் பதிவிடல் வேண்டும்.

(7) முற்பணமாக பெற்றவைகள், கொடுத்தவைகள் அட்டுறுசெலவுகள் என்பனவற்றை உரிய முறையில் சீராக்கம் செய்தல் வேண்டும்

மேற்கூறியவாறு நடவடிக்கைகளை பதிந்தவுடன் இந்நடவடிக்கைகள் இரட்டைப்பதிவு முறையில் பதியப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இந்நிலையில் நிறுவனத்தின் பரீட்சை மீதி. வியாபார இலாப நட்டக்கணக்கு. ஐந்தொகை என்பனவற்றை தயாரிக்க முடியும். இதனைப் பின்வரும் உ-ம் தெளிவாகவிளக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலன் என்பவன் தனது நடவடிக்கைகளை இரட்டைப்பதிவு முறையில் பதிவு முறையில் பேணவில்லை. ஆனால் பின்வரும் தகவல்களை இவரிடம் இருந்து பெறக்கூடியதாக உள்ளது. இவைகளைப்பயன்படுத்தி இட்டைப்பதிவு முறையில் அமைந்த பேரேட்டு கணக்குகளையும், பரீட்சை மீதி, வியாபார இலாப நட்டக்கணக்கு, ஐந்தொகை என்பனவற்றை தயாரிக்குக.

31-12 89 இல் முடிவடைந்த கணக்காண்டு காலத்திற்கான காசுகொள்ளல் கொடுத்தல் தொகுப்பு.

| | |
|---|---|
| காசு விற்பனை மூலம் பெற்ற காசு | 7,300 |
| கடன் பட்டோரிடம் இருந்து பெற்றது | 13,250 |
| கடன் கொடுத்தோருக்குக்கொடுத்த காசு | 8,200 |
| மோட்டார் வான் வாங்கியது (30.6.89) | 5,000 |
| வாடகை செலுத்தியது | 1,300 |
| சம்பளம் கொடுத்தது | 1,500 |
| தளபாடம் வாங்கியது (30.9.89) | 2,500 |
| பொதுச் செலவு | 750 |
| பற்று | 500 |

ஆரம்ப இறுதி மீதங்கள் பின்வருமாறு

| | 1-1-1989 | 31-12-89 |
|---|---|---|
| காசு | 9,200 | 20,000 |
| சரக்கிருப்பு | 3,000 | 2,000 |
| தளபாடம் | 4,000 | 6,50) |
| மோட்டார் வான் | 12,500 | 17,500 |
| கடன் கொடுத்தோர் | 20,000 | 15,000 |
| கடன்பட்டோர் | 30,000 | 20,000 |
| கொடுக்கவேண்டிய செலவுகள் | 200 | 300 |

(1) பெற்றகழிவு 210 கொடுத்த கழிவு 250

(2) மோட்டார் வாகன பெ. தே கொ. விலையில் 10%
தளபாட பெறுமானத்தேய்வு 20%

(3) அறவிடமுடியாக்கடன் ன தீர்மானிக்கப்பட்டது 1,000/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை

## காசுக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1-1-89 இல் மீதி | 9,200 | கடன் கொடுத்தோருக்கு கொடுத்தது | 8, 200 |
| காசுவிலை | 17 300 | மோட்டார்வான் | 5, 000 |
| கடன்பட்டோரிடம் இருந்து பெற்றது | 13,260 | வாடகை | 1, 300 |
| | | சம்பளம் | 1, 500 |
| | | தளபாடம் | 2, 500 |
| | | பொதுச்செலவு | 750 |
| | | பற்று | 500 |
| | | மீதி | 20, 000 |
| | 39,750 | | 3,9750 |

## 1-1-89இல் உள்ளபடியான நிலமைக்கூற்று

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 38, 500 | **நிலையான சொத்துகள்** | |
| **நடைமுறைக்கடன்கள்** | | மோட்டார் | 12 500 |
| கடன்கொடுத்தோர் | 20, 000 | தளபாடம் | 4,000 |
| கொடுக்கவேண்டிய செலவு | 200 | **நடைமுறைச் சொத்துகள்** | |
| | | சரக்கிருப்பு | 3,000 |
| | | கடன்பட்டோர் | 30,000 |
| | | காசு | 92,00 |
| | 58,700 | | 58,700 |

## மொத்த கடன் பட்டோர் க/த

| | | | |
|---|---|---|---|
| மீதி கீ கொ. வ. து | 30,000 | காசுக்கணக்கு | 13,250 |
| கடன் விற்பனை | 4,500 | கொடுத்த கழிவு | 250 |
| | | அறவிடமுடியாக்கடன் | 1,000 |
| | | மீதி. கீ. கொ. செ து | 20.000 |
| | 34,500 | | 34,500 |
| மீதி கீ. கொ. வ. து | 20,000 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மொத்த கடன் கொடுத்தோர் க/கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 8,200 | மீதி. கீ. கொ. வ. து | 20,000 |
| பெற்றகழிவு | 210 | கடன்கொள்வனவு | 3,410 |
| மீதி. கி. கொ. செ. து | 15,000 | | |
| | 23,410 | | 23,410 |
| | | மீதி. கீ. கொ வ து | 15,000 |

### கொடுத்த கழிவு க/கு

| | | | |
|---|---|---|---|
| கடன் பட்டோர் | 250 | | |

### அறவிடமுடியாக் கடன் க/கு

| | | | |
|---|---|---|---|
| கடன் பட்டோர் | 1 000 | | |

### பெற்ற கழிவு க/கு

| | | | |
|---|---|---|---|
| | | கடன் கொடுநர் | 210 |

### வாடகைக் க/கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 1,300 | | |

### சம்பளக் க/கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 1,500 | | |

### விற்பனைக் க/கு

| | | | |
|---|---|---|---|
| வியாபாரக/கு | 21,800 | கட.பட்டோ.க/கு | 4,500 |
| | | காசுக் க/கு | 17,300 |
| | 21,800 | | 21,800 |

### பற்றுக் க/கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 500 | | |

### மோட்டார் வாகனக் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி கீ. கொ. வ. | 12,500 | பெறுமா. தேய். | 1,500 |
| காசு | 5,000 | மீதி கீ.கொ.செ | 16000 |
| | 17,500 | | 17,500 |

### தளபாடக் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி கீ. கொ.வ. | 4 000 | பெறு.தேய்வு | 1,050 |
| காசு | 2 500 | மீதி கீ.கொ.செ | 5,450 |
| | 6,500 | | 6,500 |

### பெறுமானத் தேய்வு க/கு

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் | 1500 | | |
| தளபாடம் | 1050 | | |

### பொதுச் செலவு க/கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 750 | மீதி.கி.கொ.வ. | 200 |
| மீதி.கி கொ.செ. | 300 | இலா/நட்ட. க/கு | 850 |
| | 1050 | | 1050 |
| | | மீதி.கி.கொ.வ. | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்டைப்பதிவின் பின்பு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி

| | | |
|---|---|---|
| மூலதனம் | | 38 500 |
| பற்று | 500 | |
| காசு | 20 000 | |
| கடன் பட்டோர் | 20 000 | |
| கடன் கொடுத்தோர் | | 15 000 |
| பொதுச் செலவு | 850 | |
| சரக்கிருப்பு (1-1-89) | 3 000 | |
| மோட்டார் வான் | 16 000 | |
| தளபாடம் | 5 450 | |
| வாடகை | 1 300 | |
| கொள்வனவு | 3 410 | |
| விற்பனை | | 21 800 |
| சம்பளம் | 1 500 | |
| கொடுத்த கழிவு | 250 | |
| பெற்ற கழிவு | | 210 |
| செலவுகள் | | 300 |
| பெறுமானத்தேய்வு | | |
| மோட்டார் வான் | 1 500 | |
| தளபாடம் | 1 050 | |
| அறவிடமுடியாக் கடன் | 1 000 | |
| | 75 810 | 75 810 |

## 31-12-1989 இன் கணக்காண்டு காலத்திற்கான நிர்மலா என்ற வியாபாரியின் வியாபார இலாப நட்டக் க/கு.

| | | | |
|---|---|---|---|
| சரக்கிருப்பு | 3 000 | விற்பனை | 21 800 |
| கொள்வனவு | 3 410 | | |
| | 6 410 | | |
| இறுதிஇருப்பு | 2 000 | | |
| | 4 410 | | |
| மொத்த இலாபம் | 17 390 | | |
| | 21 800 | | 21 800 |
| பொதுச் செலவு | 850 | மொத்த இலாபம் | 17 390 |
| வாடகை | 1 300 | பெற்ற கழிவு | 210 |
| சம்பளம் | 1 500 | | |
| கொடுத்த கழிவு | 250 | | |
| மோட்டார் பெறுமானத் தேய்வு | 1 500 | | |
| தளபாடபெறுமான தேய்வு | 1 050 | | |
| அறவிடமுடியாக் கடன் | 1 000 | | |
| தேறிய இலாபம் | 10 150 | | |
| | 17 600 | | 17 600 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்மலன் என்ற வியாபாரியின்
## 31-12-1989 இல் உள்ளபடியான ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 38 500 | நிலையான சொத்துகள் | |
| தேறிய இலாபம் | 10 150 | மோட்டார் | 16 000 |
| | 48 650 | தளபாடம் | 5 450 |
| பற்று | 500 | | |
| | 48150 | | |
| நடைமுறைக் கடன் | | நடைமுறைச் சொத்து | |
| கடன் கொடுத்தோர் | 15 000 | சரக் இருப்பு | 2 000 |
| அட்குளு செலவு | 300 | கடன் பட்டோர் | 20 000 |
| | 63 450 | காசு | 20 000 |
| | | | 63 450 |

※※

### தொழிலாளர் நம்பிக்கை நிதியம்

1987 ம் ஆண்டில் இன் நிதியம் தனியார்துறை தொழிலாளர்கள் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட பொழுதும் 1990 ம் ஆண்டில் இருந்து அரசாங்க ஊழியர்கள் மாதாந்தம் 25/- செலுத்துவதன் ஊடாக நிதியத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி அசைவுக் கூற்றும் காசு அசைவுக் கூற்றும்

பே. கிருஷ்ணகுமார்
ஆண்டு 13

நிதி என்ருல் சாதாரணமாக பணத்தினை குறித்து நிற்கின்றது. ஆயினும் வியாபார முயற்சியாளர்களும், நிதிப்பகுப்பாய்வாளர்களும் தேறிய நடைமுறைச் சொத்தினையே (Net current assets) நிதி என்று கருதிக் கொள்கின்றனர். நடைமுறைச் சொத்துக்கள் தொடர்ச்சியாக திரவச் சொத்தாக மாற்றப்பட்டு நடைமுறைப் பொறுப்புகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு குறிப்பிட்ட கால இடைவெளியில் கிடைக்கும் வளத்தின் தேறிய தொகையே நடைமுறைச் சொத்தாகும். நடைமுறைப் பொறுப்பிற்கும் இடையிலான சொகையே தேறிய நடைமுறைச் தொத்தாகும். இச்சொத்தினையே அநேகமாக பலரும் நிதி என ஏற்றுக்கொள்கிருர்கள்.

நிதி அசைவுக் கூற்று என்பது இரு ஐந்தொகை காலப்பகுதிகளுக்கிடையில் வியாபாரத்தில் ஏற்பட்ட அனைத்து நிதி அசைவுகளைக் குறிப்பதுடன் கம்பனியின் நிர்வாகத்திலுள்ளவர்களுக்கும், உரிமையாளர்களுக்கும் உதவும் வகையில் தயாரிக்கப்படும் கூற்ருகும். 1982 கம்பனிச் சட்டம், ஆண்டறிக்கையுடன் நிதி அசைவுக் கூற்றும் இணைந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

நிதி அசைவுக்கூற்று என்பது ஒரு குறிப்பிட்ட நிதி ஆண்டில் எவ்வெவ் வழிகளில் செலவு செய்யப்பட்டது என்பதையும் வெளிக்காட்டி நிற்கிறது. அதாவது வியாபார ஸ்தாபனத்தின் குறிப்பிட்ட நிதி ஆண்டின் ஆரம்ப ஐந்தொகையும் இறுதி ஐந்தொகையும் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனையும் காட்டிநிற்கும் இவ்வேறுபாட்டிற்குரிய நிதி மூலகங்கள் எவ்வாறு பெறப்பட்டன என்பதனை இக்கூற்று வெளிக்காட்டி நிற்பதனுல் முறைமைக்கு பொருத்தமான காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க உதவுகின்றது.

மேலும் வியாபார நிறுவனத்தின் ஐந்தொகை குறிப்பிட்ட தினத்திலுள்ள நிதி நிலையிலேயே காட்டுகின்றன. நிதி ஆண்டில் நடைபெற்ற பெரிய நிதி நடவடிக்கைகளை எவ்விதத்திலும் ஐந்தொகை வெளிக்காட்டுவதில்லை. உதாரணமாக ஒரு சொத்து 50,000 வாங்கி அதே ஆண்டில் அதனை விற்பனை செய்திருந்தால் இதன் நடவடிக்கையை ஐந்தொகை வெளிக்காட்டாது. மேலும் விற்றநிறுவனத்தின் இலாப நட்டக் கணக்கானது நிறுவனத்தின் தேறிய இலாபத்தினையே காட்டுகின்றது. ஆனுல் நிதி அசைவுக்கூருனது எவ்வழிகளில் நிதி வியாபாரத்திற்கு பெறப்பட்டது எவ்வழிகளில் செலவழிக்கப்பட்டது. என்பதைக் காட்டும்.

## நிதி அசைவுக் கூற்றின் நன்மைகள்

(1) வியாபார நிறுவனத்தில் ஏற்பட்ட நிதி விளைவுகளைக் காட்டி நிற்கும். நிதி ஆண்டின் கூடிய இலாபம் உழைத்திருந்தும் இலாபத்தினை சில வேளைகளில் பகிர்ந்து அளிக்க முடியாத நிலை இருக்கும். இதை நிதிக் கூற்று இதற்கான விளைவுகளை காட்டிநிற்கும்

(2) நிறுவனத்திற்கு கடன் உதவி செய்தவர்களுக்கும், செய்யப்போகின்றவர்களுக்கும் கம்பனியின் நிலையை தெளிவுபடுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) கொள்கைகள் எவ்வாறு என்பதனை காட்டுகின்றன.

(4) கம்பனியின் நிலையை பங்குதாரர்களுக்கு உணர்த்தி நிற்கின்றது.

(5) முகாமைக் கொள்கைகள் எவ்வாறு செயற்படுத்தப்பட்டன என்பதனை காட்டி நிற்கின்றன

(6) கம்பனியின் வருங்கால திட்டங்களை வகுப்பதற்கு உதவுகின்றன.

Cash Flow Statement காசு அசைவுக்கூற்று

காசு அசைவுக்கூற்று என்பது,

இரு ஐந்தொகைக் காலப்பகுதிக்கிடையில் காசுப் பெறுவனவு காசுக் கொடுப்பனவு எவ்வாறு நடைபெற்றது எனபதனை காட்டும் ஒரு கூற்றாகும் இக்கூற்று குறுங்கால நோக்கங்களுக்கும் உதவுகின்றது.

காசு அசைவுக்கூற்றின் நன்மைகள்.

1. வியாபார நிறுவனத்தின் காசு நிலைபற்றி அறிய உதவுகின்றது. குறுகிய காலத்திட்டங்களுக்கு இக்கூற்று மிகவும் தேவைக்கா.. காசுப்பாதீடு செய்வதற்கு நிர்வாகத்திற்கு உதவுகின்றது.

2. நீண்டகால கடன்களை மீட்டல், புதிய இயந்திரங்களை வாங்குதல் பங்குஇலாப கொள்கைகளை தீர்மானிக்க இக்கூற்று உதவுகின்றது.

3. காசு மோசடி செய்திருந்தால் கண்டுபிடிக்க உதவுகின்றது.

4. இலாபத் தொகைக்கேற்ப ஏன் காசு இல்லை என்பதனை காட்ட நிதி முகாமையாளர்களுக்கு உதவுகின்றது.

5. காசு அசைவுக்கூற்றினை வைத்து நிதியாண்டு அடுத்தாண்டுகளுக்கான கம்பனியின் திட்டங்களை வகுப்பதற்கு உதவுகின்றது.

நிதி அசைவுக் கூற்றிற்கும் காசு அசைவுக் கூற்றிற்கும் இடையிலான வேறுபாடுகள்

(1) அநேகமாக நிதியசைவுக்கூற்று, நீண்டகால நோக்கத்திற்கு தயாரிக்கப்படுகிறது. காசு அசைவுக் கூற்று குறுங்கால நோக்கத்திற்கு தயாரிக்கப்படுகின்றது

(2) நிதி அசைவுக் கூற்றில் காசு சம்பந்தமான நடவடிக்கைகளும் சம்பந்தமற்ற நடவடிக்கைகளும் பதியப்படும். காசு அசைவுக் கூற்றில் காசு சம்பந்தமான நடவடிக்கைகள் மட்டுமே பதியப்படும்

ஒரு நிறுவனம் நிதி மூலகங்களை பல்வேறு வழிகளில் பெற்றுக்கொள்ள முடியும். அவற்றுள் பிரதான நிதி மூலகங்களாவன வருமாறு

(I) பங்கு வழங்கிஞல் பெறப்படுபவை:-

(II) தொகுதிக் கடன்களை வழங்குவதினுல் பெறப்படுபவை.

(III) கடன் மூலம் பெறப்படுபவை.

(IV) நிலையான சொத்து விற்பனை மூலம் பெறப்படுபவை.

(V) முதலீட்டு விற்பனை மூலம் பெறப்படுபவை

(VI) வியாபார இலாபம்.

(VII) வியாபார தொடர்பில்லாத இலாபங்கள்.

இவ்வாறு பெறப்படும் நிதியானது பின்வரும் முக்கிய தேவைகளுக்கு பிரயோகம் (Applications) செய்யப்படுகிறது.

(I) மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகளை மீட்டல் செய்வதற்கு.

(II) தொகுதி கடன்களை மீட்டல் செய்வதற்கு.

(III) கடன்களைத் திருப்பி செலுத்துவதற்கு.

(IV) நிலையான சொத்து, முதலீடு ஆகியவற்றினைக் கொள்வனவு செய்வதற்கு.

(V) பங்கு லாபம் வருமானவரி வழங்குவதற்கு.

(VI) வியாபார தொடர்பில்லாத செலவுகள்.

(VII) வியாபார நட்டம்

இவ்வாருக நவீன கணக்கியல் உலகில் முக்கியம் பெற்றுக் காணப்படும் நிதி அசைவுக் கூற்று பின்வரும் முறையில் தயாரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eg:- வரையறுத்த நீபன் கம்பனி 31-12-85, 86 ஆகிய இரு நிதியாண்டுக்குரிய ஐந்தொகை.

| பொறுப்புக்கள்: | 31—12—85 | 31—12—86 |
|---|---|---|
| பங்குமுதல் | 100 000 | 150 000 |
| பங்குவட்டம் | — | 20 000 |
| இறையில் விற்பனை | — | 10 000 |
| 8% தொகுதி கடன்கள் | 60 000 | 30 000 |
| பகிரப்படாத இலாபம் | 32 000 | 40 000 |
| பொது ஒதுக்கம் | 6 000 | 10 000 |
| பிரேரித்த பங்கிலாபம் | 6 000 | 7 500 |
| கடன்கொடுத்தோர் | 24 000 | 22 000 |
| பெறுமான தேய்வு ஒதுக்கம்:- | | |
| வாகனம் | 12 000 | 15 000 |
| தளபாடம் | 7 000 | 10 000 |
| அலுவலக உபகரணம் | 5 000 | 6 000 |
| இயந்திரம் | 8 000 | 12 000 |
| | 260 000 | 332 500 |
| **சொத்துக்கள்** | | |
| வாகனம் | 60 000 | 65 000 |
| தளபாடம் | 30 000 | 34 000 |
| அலுவலக உபகரணம் | 15 000 | 15 000 |
| இயந்திரம் | 25 000 | 35 000 |
| இறையில் ஆதனம் | 65 000 | 56 000 |
| கடன்பட்டோன் | 23 000 | 22 000 |
| சரக்கிருப்பு | 30 000 | 38 000 |
| தொகுதிக் கடன் மீட்டல் வட்டம் | — | 2 000 |
| ஆரம்பச் செலவு | 1 500 | 500 |
| வங்கி | 10 500 | 65 000 |
| | 260 000 | 332 500 |

**தறிப்புக்கள்**

(1) 6 000/- தேய்மானம் செய்யப்பட்ட 8 000/- கொள்விலை உடைய வாகனம் 4 000/- க்கு விற்கப்பட்டது.

3 000/- தேய்மானம் செய்யப்பட்ட 5 000/- கொள்விலை உடைய இயந்திரம் 1 000/- க்கு விற்கப்பட்டது.

ஏற்பட்ட இலாபநட்டங்கள் இலாபநட்டக் கணக்கின் ஊடாக பதிவழிக்கப்பட்டது.

(2) தொகுதிக் கடன் மீட்புக்காக கொடுத்த வட்டத் தொகை 2 500/- ஆகும். இதில் 500/- இவ் வருடம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

கேள்வி:- 1) நிதி நிலைமையில் ஏற்பட்ட மாற்றத்தினைக் காட்டும் கூற்றினைத் தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி அசைவுக் கூற்று

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| நிதி மூலகங்கள் | | |
| வரிக்கு முன் இலாபம் | 20 000 | 20 000 |
| நிதி அசைவற்ற விடயம் | | |
| பெறுமான தேய்வு ஒதுக்கம் | | |
| வாகனம் | 9 000 | |
| இயந்திரம் | 7 000 | |
| தளபாடம் | 3 000 | |
| அலுவலக உபகரணம் | 1 000 | 20 000 |
| நிறுவன இயக்கத்தினுல் உருவாக்கப்பட்ட நிதி | | 40 000 |
| ஏனைய மூலகம் | 50 000 | |
| பங்கு முதல் | 20 000 | |
| பங்குவட்டம் | 1 000 | |
| இயந்திரம் | 19 000 | |
| இறையில் ஆதனம் | 4 000 | 94 000 |
| வாகனம் | | 134 000 |
| கழி - நிதிப்பிரயோகம் | 4 000 | |
| தளபாடம் | 15 000 | |
| இயந்திரம் | 13 000 | |
| வாகனம் | 6 000 | |
| பங்கிலாபம் | 32 500 | (70 500) |
| தொகுதி கடன் மீட்பு | | 63 500 |
| தொழிற்படு மூலதன அதிகரிப்பு / குறைவு | | |
| சரக்கிருப்பு | 8 000 | |
| கடன்பட்டோர் | (1 000) | |
| வங்கி | 54 500 | |
| கடன் கொடுநர் | 2 000 | 63 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இறையில் ஆதனம் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி வ. து. | 65 000 | இறையில் விற்பனை | 9 000 |
| | | மீதி செ. து | 56 000 |
| | 65 000 | | 65 000 |
| மீதி வ. து. | 56 000 | | |

### இறையில் விற்பனை க/கு

| | | | |
|---|---|---|---|
| இறையில் ஆதனம் | 9 000 | காசு | 19 000 |
| இறையில் விற்பனை இலா. | 10 000 | | |
| | 19 000 | | 19 000 |

### வாகனக் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி வ. து. | 60 000 | வாக. விற்பனை | 8 000 |
| காசு | 13 000 | இலாபம் | 65 000 |
| | 73 000 | | 73 000 |
| மீதி வ. து. | 65 000 | | |

### வாகன விற்பனை க/கு

| | | | |
|---|---|---|---|
| வாகனம் | 8 000 | பெ.தே.ஒது | 6 000 |
| இலாபம் | 2 000 | காசு | 4 000 |
| | 10 000 | | 10 000 |

### இயந்திரம் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி வ. து. | 25 000 | இய விற்பனை | 5 000 |
| காசு | 15 000 | மீதி செ. து. | 35 000 |
| | 40 000 | | 40 000 |
| மீதி வ. து. | 35 000 | | |

### இயந்திர விற்பனை க/கு

| | | | |
|---|---|---|---|
| இயந்திரம் | 5 000 | பெ தே. ஒது | 3 000 |
| | | காசு | 1 000 |
| | | நட்டம் | 1 000 |
| | 5 000 | | 5 000 |

### வாகன பெறுமான தேய்வு ஒதுக்க க/கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை வாக | 6 000 | மீதி வ. து. | 12 000 |
| மீதி வ. து. | 15 000 | பெ. தேய்வு | 9 000 |
| | 21 000 | | 21 000 |
| | | மீதி வ. து. | 15 000 |

### இயந்திர பெறுமான தேய்வு ஒதுக்க க/கு

| | | | |
|---|---|---|---|
| இ விற்பனை | 3 000 | மீதி வ. து. | 8 000 |
| மீதி செ. து. | 12 000 | பெ தேய்வு | 7 000 |
| | 15 000 | | 15 000 |
| | | மீதி வ. து. | 12 000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*
*from:*

**Vickna Tuition Centre**
STANLEY ROAD.
JAFFNA.

**Arul Electricals**

*Electrical Contractors*
*Engineers & Merchants*

No. 110, Stanley Road,
JAFFNA

*With best Compliments*
*from*

**Murugan Traders**
No. 21, CLOCK TOWER ROAD,
JAFFNA.

**SUPEKA**
**Auction Centre**

New & Old Furniture And
Electrical Goods Dealers

343, POINT PEDRO ROAD,
NALLUR.
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**G. S. Linganathan & Co**

*Textiles Merchants*

No: 79, Grand Bazaar,
JAFFNA.

**Sri Pathmantha stores**

*General Merchant & Govt Contractor*

No: 105, K. K. S. Road,
JAFFNA.

*T. Phone 22568*

**THARAN STUDIO**

No: 98, Modern
Market Upstair,
JAFFNA.

**COGULAN VEDEO HOME**

*Leading Name in Home Video Entertainment*

No: 192/1 Navalar Road,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OMANS PALACE

- ✱ பிளாஸ்றிக் பொருட்களையும்
- ✱ விளையாட்டுப் பொருட்களையும்
- ✱ மணிக்கூட்டு வகைகளையும்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே தாபனம்.

**ஓமான் பலஸ்**

Opp. Bus Stand,
No. 404/1, Hospital Road,
JAFFNA.

## MEDI AIDS
**Dispensary & Surgery**

No: 182, Chemmani Road,
Nallur JAFFNA

## MEDI AIDS PHARMACY

No. 644, Pt. Pedro Road,
Nallur,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

# உல்லாசப் பயணத்துறை விருத்திக்கு வாய்ப்பளித்த இலங்கையின் புவியியல் அமைப்பு

எஸ். செந்தில்குமார்

உலக அமைப்பின் கண் பல நூற்றுக் கணக்கான தீவுகள் காணப்படுகின்றன. இவற்றுள் மிகப் பெரியது என்ற வகையிலோ அன்றி மிகச்சிறியது என்ற வகையிலோ இலங்கை உலகமக்களின் கவனத்தை ஈர்க்கவில்லை ஆனால் இந்து சமுத்திரத்தின் மத்தியிலே இந்தியாவுக்கு அன்மையிலே கேந்திரஸ்தாபனமாக அமைந்துள்ள வகையில் இதன் முக்கியத்துவம் உலகுக்கு அறிமுகமாக்கப்பட்டுள்ளது. இப் புவியியற் காரணியானது இலங்கைச் சரித்திரத்தில் காலத்துக்குக்காலம் பல்வேறு வகையில் மாற்றமடையச் செய்துள்ளமை கண்கூடு. சரித்திரத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்ற அதே வேளையில் ஆட்சி காரணமாகவோ, அன்றி வர்த்தகம் காரணமாகவோ அல்லாமல் இங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு விருந்தளிக்கும் கற்பகப் பூங்காவாகவும் இவ் எழில்மிகு தீவு விளங்குகின்றது.

இத்தீவின் புவியியல் அமைப்புக் காரணமாக இங்கு செழித்து வளர்ந்த ஏலம், கராம்பு, கறுவா போன்ற வாசனைத் திரவியங்கள் அராபியரை மாத்திரமன்றி ஐரோப்பியரையும் வெகுவாகக்கவர்ந்தது. கிழக்கு மேற்கு வர்த்தகத்திற்கு சிறந்தவோர் இடமாக அமைவதற்கு சமுத்திர நீரோட்டமும், அதோடு சேர்ந்த வியாபாரக் காற்றும் முக்கிய புவியியற் காரணங்களாயின. திருகோணமலையும், கொழும்பும் துறைமுகங்களாவதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையின் வடமேல்பாகத்திலுள்ள மன்னார்க் கடற்கரையிலே மாந்தை என்றொரு துறைமுகம் இருந்ததென்பதும் இங்கு கப்பல்கள் பல நிறைந்து காணப்பட்டதென்பதும்,

''வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்'' என்ற திருஞானசம்பந்தரது தேவாரத்தொடரிலிருந்து அறியக்கிடக்கின்றது.

இலங்கைத்தீவின் அமைப்பும் அதன் எழில்மிகு தோற்றமும் உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்கின்றது. மலைகள் உலகிலுள்ள பல நாடுகளிற் காணப்பட்டாலும் இங்குள்ளவை உல்லாசப்பயணிகளைக் கவரத்தக்க தன்மைகளைக் கொண்டுள்ளன. இவை வெறும்பாறைகளைப் போலன்றி பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று பசுமையான பயிர்களால் நிறையப்பெற்று விளங்குகின்றன. மனிதன் தன் இயற்கைச்சக்திக்கேற்றவாறு ஏறி இறங்கத்தக்க அளவான உயரங் கொண்டதாகவும் பனிப்படலம் மூடிக் காட்சிக்கு இடையூறு விளைவிக்காத தன்மைகளும் கொண்டு விளங்குகின்றன. இலங்கையின் அதிஉயரமான பேதுறுதாலகால, பல சமயத்தவரால் போற்றித் தரிசிக்கப்படுகின்ற சிவனொளிபாதமலை, தோட்டப்பாலை என்பன இத்தகையனவாகும். சிவனொளிபாதமலையின் உச்சியில் காணப்படும் ''பாதஅடி'' இத்தீவில் உள்ள நான்கு மதத்தினராலும் தத்தம் புனித வழிபாட்டுச் சின்னமாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்கு வருகின்ற உல்லாசப் பயணிகளும் சிவனொளிபாதமலையையும் அதன் உச்சியையும் தரிசிக்கத்தவறுவதில்லை. மேலும் இங்குள்ள மலைகள், குன்றுகளில் மனிதனைத் தாக்கக்கூடிய கொடிய விலங்குகள் இல்லாமை உல்லாசப்பயணிகள் அச்சமின்றி இப்பகுதிகளில் உலாவ உதவுகின்றது

உலகநாடுகளில் உள்ள சமவெளிகளும் புற்றரைகளும் அந்நாடுகளுக்கு அழகைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA

தருவனபோன்று நம் நாட்டிலும் சமவெளிகளும் புற்றரைகளும் உள. சிவனொளிபாத மலையை அடுத்துள்ள ஹோட்டன் சமவெளி, முன் சமவெளி, பதுளைக்கு அண்மையிலுள்ள தலாவைப்புல்வெளியும் கண்ணுக்கினிய பசிய காட்சிகளாக அமைந்துள்ளன. தூரத்தே நின்று பார்ப்பவர்களுக்கு இவை இடையிடையே பசியகுன்றுகள் நிமிர்ந்து நிற்பது போன்றும் கரிய எருமைகள் படுத்திருப்பவை போன்றும் கண்கொள்ளாக் காட்சிகளாகக் காணப்படுகின்றன. ஹோட்டன் புல்வெளியானது பரந்த இனிய காட்சியாக அமைவதுடன் இதன் முடிவிற்காணப்படும் மிகஅரிய காட்சியானது ''ஓங்கல்'' (World s End) உலக எல்லை என்றே வர்ணிக்கப்படுகின்றது.

இங்கிருந்து பார்க்கும்போது பலநூறு மைல்களுப்பாலுள்ள இனியகாட்சிகள் தெரிவதுடன் தலை நிமிர்ந்து ஓங்கி நிற்கும் கொழும்புமாநகரின் கட்டடங்களும் அங்குள்ள துறைமுகமும் அழகாகக் காட்சி தருகின்றன.

இலங்கையின் புராதன நகரங்களான அனுராதபுரம், பொலநறுவை, சிகிரியா போன்ற இடங்களில் சிதைந்த அரண்மனைக் காட்சிகளும் இன்று சிதைந்தும் சிதையாததுமான பௌத்த ஆலயங்களும், தாது கோபுரங்களும் உல்லாசப்பயணிகளைப் பெரிதும் கவர்கின்றன குறிப்பாக அனுராதபுரத்திலுள்ள இயற்கை அரண்மிக்க சித்திரக்குன்றான சிகிரியாவிற் காணப்படும் சுவர் ஓவியங்கள் உலகப் புகழ்பெற்ற இந்திய அஜந்தா ஓவியங்களை ஒத்திருக்கின்றன. ஏறக்குறைய ஐந்நூறு அடி உயரமுள்ள இக்குன்றைச் சுற்றியுள்ள அகழியும் குன்றத்தில் காணப்படும் இடிபாடுகளும், கண்ணுக்கு மிக இனியகாட்சியான சுவர் ஓவியங்களும் உல்லாசப்பயணிகளைப் பெரிதும் கவர வல்லவைகளாக உள்ளன துட்டகைமுனு மன்னனால் கட்டப்பட்ட ஆயிரங்கால் மண்டபம் தற்போது சிதைந்த நிலையில் இருந்தாலும் அவை புராதன சின்னங்களாகக் காட்சி தருகின்றன. இங்கு காணப்படும் கட்டட அமைப்புக்கள், சந்திரவட்டக்கல் என்பன இந்நாட்டுக் கலை, கலாச்சார வளர்ச்சியின் உன்னத நிலையை எடுத்துக்காட்டுகின்றன. இவற்றினை பார்க்கவும் உல்லாசப்பயணிகள் வருகின்றனர்.

தம்புல்ல நகரில் மலையைக் குடைந்து அமைக்கப் பட்டுள்ள பௌத்த ஆலயம் கண்கொள்ளாக் காட்சியாகும் மென்சரிவாக அமைந்துள்ள மலையைக் குடைந்து அங்கு மிக நீளமான புத்தபகவான் படுத்திருப்பது போல் நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்சி மிகவும் அழகானதாக உள்ளது. இலங்கை வரும் உல்லாசப்பயணிகள் இதனைக்கண்டுகளிக்கத் தவறுவதில்லை கண்டியிலுள்ள தலதா மாளிகையின் கட்டட அமைப்பும், அவ்வாலயத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தபகவானின் தந்ததாதும் உல்லாசப்பயணிகளைக் கவரத் தக்கவனவாகும்.

இங்குள்ள கடற்கரையின் கணிசமான பகுதிகள் மக்கள் உலாவிச்சென்று பார்த்து மகிழக்கூடியதாக அமைந்துள்ளன. இந்தியாவிலேயுள்ள ''மெரினா பீச்'' உலகப்புகழ் பெற்றது அதுபோல இலங்கையிலும் கொழும்பிலுள்ள காலிமுகத்திடல் உல்லாசப்பயணிகளைக் கவரக்கூடியதாக அமைந்துள்ளது. ஐரோப்பிய நாட்டிலிருந்து வரும் உல்லாசப்பயணிகளுக்கு நீராடி நீந்தி மகிழக் கூடிய இடங்கள் பலவுள.. அவற்றுள் குறிப்பிடத்தக்கது மட்டக்களப்பிலுள்ள பாசிக்குடா என்பதாகும். கடற்பாறைகளற்ற உகந்த சீதோஷ்ண நிலையிலுள்ள இப்பகுதியை உல்லாசப்பயணிகள் நாடிவந்து நீந்தி நீராடி மகிழ்வர். வடபகுதியிலுள்ள கீரிமலையும், காரைநகரிலுள்ள கசுரீனா கடற்கரையும் இத்தகையனவே என்றாலும் உல்லாசப் பயணிகள் வந்து தங்குதற்கேற்ற சிறந்த விடுதிகள் அமைக்கப்படாமை இங்குள்ள குறைபாடாகும்.

கண்டி நகரிலுள்ள பேராதனைப் பூங்கா மிகவும் வனப்பும் செழிப்பும் உள்ளதாகக் காணப்படுகின்றது. இலங்கையின் அதி நீண்ட ஆறான மகாவலிகங்கை இப்பூங்காவின் மூன்று பக்கங்களையும் சுற்றி ஓடும் காட்சி அழகைத் தருவதோடு பூங்காவின் செழிப்புக்கும் காரணமாகின்றது. நுவரெலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவில் உள்ள "உறைக்கல்ல" தாவரவியல் பூங்காவில் பல்லாயிரக்கணக்கான தாவரங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள பசிய புற்றரையும் வகைவகையான பூ மரங்களும் பூக்களும் கண்ணுக்கினிய காட்சிகளாகும். குறிப்பாக அங்கு தட்பவெப்பத்தைக் கட்டுப்படுத்துதற்கேற்ப அமைக்கப்பட்டுள்ள கண்ணுடி அறையுள் உள்ள பல்வேறு வகையான றேசாச் செடிகளும், அவற்றின் பூக்களும் மிக அழகாகக் காட்சிதருகின்றன.

இரத்தினபுரியானது மிக அழகுநிறைந்த பகுதியாகக் காணப்படுவதோடு இங்கு அகழ்ந்தெடுக்கப்படும் இரத்தினக்கற்கள் உலகப்பிரசித்தி பெற்றவையாகவும் விளங்குகின்றன. இதன் காரணமாக உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக இரத்தினபுரி விளங்குகின்றது.

மலைப்பகுதிகளில் இயற்கையாகவே விளைவுகள் நெளிவுகள் கொண்ட வனப்புமிகு கணவாய்கள் நம்பொடை, கலகெதற கடுகண்ணுவை போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவை பார்த்து மகிழத்தக்க காட்சிகளாகும். உயர்ந்த மலைகளிலிருந்து பேரிரைச்சலுடன் வீழ்கின்ற தியலுமை, துன்கிந்த, விக்ரோறியா நீர் வீழ்ச்சிகள் மணிக்கணக்காக நின்று பார்த்து மகிழத்தக்கவையாகும்.

இங்குள்ள மக்கள் பெரும்பாலும் கிராமப்புறத்தில் வாழ்ந்தாலும், படிப்பறிவுள்ளவர்களாகவும், பண்புள்ளம் கொண்டவர்களாகவும் உல்லாசப்பயணிகளை இன்முகத்துடன் வரவேற்கும் மனப்பாங்குள்ளவர்களாகவும் திகழ்கின்றார்கள். ஐரோப்பிய உல்லாசப்பயணிகளுடன் இந்நாட்டு மக்கள் அவர்களது மொழியான ஆங்கிலத்தில் கதைப்பதும் அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதானதொன்ருகும். உல்லாசப்பயணிகளின் வருகையினுற் பெறப்பட்ட வருவாயானது சேவைகள் கணக்கின் வரவிற் பதியப்படுகிறது. இதனுல் சேவைகள் கணக்கின் வரவுப் பக்கம் அதிகரிக்கப்படுவதுடன் சேவைகள் கணக்கின் பாதகமான மீதியானது குறைக்கப்படுகிறது. 1982 ம் ஆண்டினைத் தொடர்ந்து நாட்டில் நிலவும் சீர்கெட்ட அரசியல் நிலையினுல் உல்லாசப்பயணிகளின் வருகை குறைவானதுடன் சேவைகள் கணக்கின் பாதகமான நிலை அதிகரித்துக் காணப்படுகிறது. அரசியல் சூழ்நிலை சாதகமாக வரின் உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரிக்கப்பட்டு நடைமுறைக்கணக்கின் சாதகமான நிலைக்குக் கொண்டுவரமுடியும்.

உல்லாசப்பயணிகளின் வருகையை விருத்தி செய்ய இலங்கை அரசானது ஹோட்டல் கூட்டுத்தாபனம் ஒன்றையும் உல்லாசப்பயணிகள் சபை ஒன்றையும் அமைத்ததன் விளைவாக உல்லாசப்பயணிகள் சபை விளம்பரங்களை மேற்கொண்டும், கைந்நூல்களை வெளியிட்டும் வெளிநாட்டவரை அதிகளவு கவருகின்றது. ஹோட்டல் கூட்டுத்தாபனமானது உல்லாசப்பயணிகள் தங்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட அதிக விருப்புடைய நவீன தங்குமாடிக்கட்டடங்களை அமைத்துள்ளது. இலங்கையின் வருவாயை அதிகரிப்பதற்கு இலங்கையின் புவியியல் அமைப்பு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

✲✲



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலக்குடியேற்ற அபிவிருத்தி

எஸ். கல்யாணசுந்தர்

## முன்னுரை

குடியேற்றத் திட்டங்கள் எனும் பதம் காணிகளைப் பகிர்ந்தளித்து, ஒரு காலத்தில் நாகரீகத்தின் தொட்டில்களாக விளங்கி பின்னர், இயற்கையின் சீற்றத்தாலும், படை எடுப்புகளின் அழிவினாலும் சிதைந்த, ஒரு கலாச்சாரத்தை, ஒரு சமூக அமைப்பை மீள நிலை நாட்டும் ஒரு முயற்சியைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அதாவது தம்மைத் தாமே பராமரிக்கும் சுய கௌரவமுள்ள விவசாய உரித்துடைய வளமிக்க மக்கள் கூட்டத்தை உருவாக்குதலே குடியேற்றத் திட்டங்களின் நோக்கமாகும்.

வளர்முக நாடுகளில் நிலமின்மைப் பிரச்சினையும், பாதுகாப்பற்ற குத்தகை ஒப்பந்தங்களுமே சமூகக் கொந்தளிப்புகளுக்கு அடிகோலியுள்ளமையால், இந்நிலைமைகள் ஆட்சியாளரைச் சிந்திக்க வைத்தன. இவ்வாறான ஒரு பின்னணியிலேயே கடந்த 150 வருட காலமாக இலங்கையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அரசியல் குழுக்களினால் பல்வேறு காணிக் குடியேற்ற, காணி அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. நிலமற்ற கிராமிய சிறு விவசாயிகளின் சமூக, பொருளாதார அந்தஸ்தினை உயர்த்தும் குறிக்கோளுடனே இத் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. இதன்படி வருடம் 75 அங். குறைவாக மழை வரும் வரண்ட பிரதேசங்களில் அரசாங்கச் செலவில் நீர்ப்பாசன வசதி அமைக்கப்பட்டுக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் ஈரவலயத்தில் தோன்றிய சன நெருக்கடியைக் குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்கள், பிற்பட்ட காலங்களில் பல்வேறு நோக்கங்களை அடைவதற்காக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இக் குடியேற்றத் திட்டங்கள் யாவும், குறிப்பாக இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்தே விரிவு படுத்தப்பட்டதெனலாம். எனினும் தேசாதிபதி வார்ட் (1855—1860) காலத்திலிருந்தே உலர்வலய நீர்ப்பாசன அமைப்புக்களைப் புனருத்தாரணம் செய்வதற்கான முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக 1935 ஆம் ஆண்டிலேற்படுத்தப்பட்ட நில அபிவிருத்திச் சட்டத்தின் பின் குடியேற்றத் திட்டங்கள் அமைத்தல் துரிதமடைந்தது.

## சுதந்திரத்திற்கு முற்பட்ட குடியேற்றத் திட்டங்கள்.

கி. மு. 300 ஆம் ஆண்டளவில் ஆரம்பமான இலங்கையின் ஆரம்ப குடியிருப்புகள் பிரதானமாக உலர் வலயத்தை மையமாகக் கொண்டு கி. பி. 13 ஆம் நூற்றாண்டுவரை அங்கேயே நிலைகொண்டிருந்தன. ஆரம்ப காலத்தில் காணப்பட்ட குடியேற்றத் திட்டங்களான மினிப்பே (கண்டி), எலகரா (மாத்தளை), பராக்கிரம சமுத்திரம் (அநுராதபுரம்), பதவியா (வவுனியா), கந்தளாய் (திருகோணமலை) போன்றன ஆரம்பகால சிங்கள மன்னரின் குடியேற்றங்களாகும். இவற்றில் 200 ஏக். மேல் காணிப் பரப்புகளைக் கொண்டுள்ள திட்டம் பாரிய திட்டம் எனவும், 200ஏக். குறைந்தது சிறிய திட்டம் எனவும் கூறுவர். பெரும்பான்மைப் பாரிய திட்டங்கள் நாட்டின் வரண்ட வலயங்களில் காணப்பட்டதுடன், இத் திட்டங்கள் வரண்ட வலைய நதிகளை மையமாகக் கொண்டு இயங்கி வந்தன. இதன் முதல் ஐந்து நூற்றாண்டுகளும் இலங்கையின் நீர்ப்பாசன நாகரிக வரலாற்றில் ஒரு புதிய யுகத்தைத் தோற்றுவித்த காலகட்டம் எனக் கருதப்படுகிறது. இதன்மூலம் ஒரு காலத்தில் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதற்கும் உணவு வழங்கிய நெற்களஞ்சியங்களாக இப் பகுதிகள் இருந்துள்ள துடன், நிலப்பயன்பாடு எவ்வளவு செறிவாக நடைபெற்றிருக்கும் என்பதற்கு, உலர் வலயம் முழுதும் பரந்துகிடக்கும் பாரிய குளங்களும், நீர்ப்பாசன வடிகால் அமைப்புகளும் சான்றாக உள்ளன.

பிற்பட்ட காலங்களில் இவ் உலர் வலயப் பகுதிகளிலேற்பட்ட சோழமன்னரின் ஆக்கிரமிப்பு, மலேரியா நோயின் பரவல், ஆளும் வர்க்கத்தினரிடையே நிலவிய ஒற்றுமையின்மை போன்றவற்றினால் வரண்ட வலையக் குடியேற்றங்கள் சீர்குலைந்தன. 13 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியில் பொலநறுவையில் சிங்கள ராஜதானி சீர்குலையத் தொடங்கியதையடுத்து உலர் வலயத்தில் சனத்தொகை குறைவடையத் தொடங்கிய துடன், கி பி 1200—1500 கால கட்டத்தில் நாட்டின் தென்மேற்கிலிருக்கும் ஈரவலயப் பகுதிகளுக்கு குடிப் பெயர்ச்சி இடம் பெற்றது. முதல் ஐரோப்பிய ஆட்சியாளர்கள் இங்கு வந்த வேளையில், தமது வர்த்தக நலன்களுக்கு உறுதுணையாக இருக்கும் பெருந்தோட்ட விவசாயத்தில் மட்டுமே கவனம் செலுத்தியதுடன், அதற்கேற்ற அடிப்படை வசதிகள் யாவும் தென் ஈரவலயப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டு, உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழிலாளர்கள் இப் பகுதிகளில் குடியேற்றப்பட்டனர். இதன் காரணமாக இலங்கையின் தென், மத்திய ஈரவலயங்களில் சன அடர்த்தியான குடியேற்றங்கள் தாபிக்கப்பட்டன அதேவேளை பாரம்பரிய விவசாயத்தை ஊக்குவிப்பதிலோ, அதன் நலன்களைப் பேணுவதிலோ 1850 வரை ஐரோப்பியர் எவ்வித கவனமும் செலுத்தவில்லை.

இந்நிலையில் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் விவசாயக் குடிமக்களின் வாழ்க்கை நிலைமைகளில் பல்வேறு மாறுதல்கள் நிகழ்ந்தன. குறிப்பாக 1840 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தை அடுத்து, குறிப்பிடத்தக்க சில காணியேற்ற முயற்சிகள் ஆரம்பமாகின. இதன் பிரகாரம் சகல காட்டு நிலங்களும், சாகுபடி செய்யப்படாத நிலங்களும், கைவிடப்பட்ட நிலங்களும், முடிக்குரிய நிலங்களாகக் கருதப்பட்டதுடன், காணியுரிமை பெறவேண்டுமெனின் 30 வருட காலம் தொடர்ந்து சாகுபடி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. இவ் ஏற்பாடு பெருந்தோட்ட வளர்ச்சிக்கே உதவியாக அமைந்ததுடன், விவசாயத்துறையை ஊக்குவிப்பதற்குரிய உறுதியான நடவடிக்கையாக அமையவில்லை. அத்துடன், வட, வட மத்திய, கிழ் மாகாணங்களில் வாழ்ந்த கிராமிய விவசாயிகளின் பரம்பரை நிலங்கள் பறிக்கப்பட்டு, சமூக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படவும் வழிவகுத்தது.

இத்தகைய மோசமான நிலையை நிவிர்த்தி செய்ய, 1857 இல் நெற்பயிர்ச் செய்கைக் கட்டளைச்சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு சில நீர்ப்பாசன குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. அவை 1887 இல் கலாவேவ குடியேற்றத்திட்டம், 1919 இல் மின்னேரிய காணி வழங்கல் திட்டம், 1921 இல் கிரிந்த ஓயாக் குடியேற்றத் திட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்ட போதும் குறுகிய காலத்தினுள் தோல்வியடைந்தன. காரணம், முதலாளித்துவ விவசாயத்துக்கும், கைத்தொழில் பெருக்கத்துக்கும், இட்டுச் செல்லக்கூடிய ஒரு முதலாளித்துவ அபிவிருத்தி முறைக்கு உள்நாட்டில் இருந்து வரும் தடைகளும், மோசமான பொது வசதிகளுமாகும். இந்தப் பின்னணிக்கெதிராக அரசாங்க உதவி பெற்ற விவசாயிகளின் மறு குடியேற்றத் திட்டங்கள் பலப்படுத்தப்பட்டன.

## 1930 களின் பின் அரசாங்கம் பொறுப்பேற்ற குடியேற்றத் திட்டங்கள்:

1930 களில் இலங்கையிலுள்ள உலர் வலயமே அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்துக்கும், கொள்கைகளுக்கும் முதன்மையான துறையாகியது. நீர்ப்பாசனக் குளங்களைத் திறந்து விடுவதே பிரதான நோக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக இருந்தது. அரசாங்கம் பொறுப்பேற்ற குடியேற்றத் திட்டங்களில் விவசாயக் குடும்பங்களுக்கு வெவ்வேறு நீர்ப்பசானத் திட்டங்களின் கீழ் அரசினால் காணிகள் கொடுக்கப்பட்டன, பல பொருளாதார, சமூக, அரசியல் காரணிகள் 1930 களில் இவ் அபிவிருத்தி வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஏதுவாயிருந்தன. பிரித்தானிய அரசை, சுதேச அரசியல் வாதிகள் நிர்ப்பந்தித்ததனால் வரண்டவலய காட்டுநிலங்கள் குடியேற்றப் பகுதிகளாக மாற்றப்பட்டன. அத்துடன் இக்காலப் பகுதிகளில் காணப்பட்ட பெருந்தோட்ட ஏற்றுமதி வருமான வீழ்ச்சி உணவுத்தட்டுப்பாடு, ஈரவலயக் குடியதிகரிப்பு, இட நெருக்கடி, என்பனவும் குடியேற்றத்திட்டத்துக்கு வழி வகுத்தன. அத்துடன் 1931 ல் விவசாய — காணி அமைச்சு அமைக்கப்பட்டு, கொள்கையை உருவாக்கும் அதிகாரியாக டி. எஸ். சேனநாயக்கா நியமிக்கப்பட்டதுடன், தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன.

மேற்சொன்ன காரணிகளின் விளைவாக உலர்வயத்தில் குடியேற்றத் திட்டங்கள் பலப்படுத்தப்பட்டன. இதில் நீர்ப்பாசன வசதியுடைய காணிகளை விரிவுபடுத்தி உணவுற்பத்தியை அதிகரித்தல், காணி வசதி, பாசன வசதியுடைய உலர்வலயப்பகுதிகளுக்கு நிலமற்ற, வேலையற்ற மக்களை இடம் பெயரச் செய்து. ஈரவலய சன அடர்த்தியை குறைத்தல், அதிகரித்து வரும் மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குதல், விவசாய வர்க்கத்தினைப் பாதுகாத்தல், பொதுவாக விவசாய அபிவிருத்தியை ஊக்குவித்தல் போன்ற நோக்குகள் முக்கியமாக அமைந்தன. இதனடிப்படையில் பல்வேறு அடிப்படை வசதிகள், பொதுநல சேவைகள் ஏற்படுத்தப்பட்டு அரசின் மானிய உதவிகளுடன் குடியேற்றத்திட்டங்கள் உருவாகின. அவை பல நோக்குத் திட்டங்கள், பாரியகுடியேற்றத் திட்டம், கிராம விஸ்தரிப்புத்திட்டம், மத்திய வகுப்பார் குடியேற்றத்திட்டம், இளைஞர் குடியேற்றத்திட்டம், எல்லை நிலக்குடியேற்றத்திட்டம், மேட்டு நிலக்குடியேற்றத் திட்டம் என்றடிப்படையில் அமைக்கப்பட்டன. பல நோக்குத் திட்டத்தின் கீழ் 1947 ம் ஆண்டில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டம் குறிப்பிடக் கூடியதாகும் இக் குடியேற்றத் திட்டங்கள்:

(1) குடியடர்த்தி கூடிய பகுதிகளிலிருந்த குடியமுக்கத்தைக் குறைத்தமை.

(2) நிலமற்றோருக்கு நிலம் கிடைக்க வழி செய்தமை.

(3) வேலையற்றிருக்கும் சிலருக்கும், பகுதி நேர கூலி வேலை செய்து வந்த சிலருக்கும் வேலை வாய்ப்பளித்தமை.

(4) புதிய கிராமங்களை வரண்டபகுதிகளில் தோற்றுவித்தமை.

என்பன போன்ற சமூக நலனை ஆற்றிய போதும் பொருளாதார ரீதியில் அரசாங்கத்திற்குக் குடியேற்றத் திட்டங்களால் நஷ்டமே ஏற்பட்டது. காரணம்:

(1) அரசாங்கம் இத்திட்டங்களின் உருவாக்கத்திற்கு அதிக மூலதனத்தைச் செலவிட்டமை.

(2) அரச ஊழியரின் அக்கறையின்மையினால் திட்டங்கள் முறையாக மேற்பார்வை செய்யப்படமை.

(3) குடியேற்றவாசிகளின் தெரிவில் விவசாய அனுபவம், ஊக்க உழைப்பு மனப்பான்மை, என்பவற்றைப்பாராது தவறிழைத்தமை.

(4) குடியேற்ற வாசிகள் பழைய கிராமத்துடனிருந்த தொடர்பைத் துண்டிக்காத நிலைமை.

(5) போக்குவரத்து, பாசனவசதிகள், சமூக சேவை வசதிகள் என்பன பூரணமாகப் பூர்த்தி செய்யப்படாமை போன்ற பல காரணங்களினால் குடியேற்றத் திட்டங்கள் பொருளாதார நோக்கில் தோல்வியை தழுவின எனப்பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் முடிக்குரிய காணி ஆக்கிரமிப்புகள், ஒதுக்கிய காணிகள் உபபிரிவுகளாகப் பிரிக்கப்படல், குத்தகைக்கு விடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், பாகப்பகிர்வு முறையில் சாகுபடி செய்தல், காணிகளை விற்றல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளும் குடியேற்றப்பகுதிகளில் இடம்பெற்றன.

## சுதந்திரத்திற்குப் பின் குடியேற்றத் திட்டங்களின் நிலைமை:

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் நிர்வாக அமைப்புகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டதுடன், இதன் பயனாக அந்நியராட்சியில் பின்பற்றப்பட்டு வந்த பொருளாதாரக் கொள்கைகள் யாவும் மாற்றம் பெற்றன. இவற்றுள் முதலாவதாக சுதந்திரத்தைத் தொடர்ந்து பெருந்தோட்டச் செய்கையை அபிவிருத்தி செய்து வந்த பழைய போக்கு மாறி, இலங்கையில பரந்துபட்டுக் காணப்படும் கிராமங்களில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற புதிய நோக்கமேற்பட்டது. இந் நோக்கமானது குடியேற்றத் திட்டங்களை மேலும் விரிவடைய வழி வகுத்தது.

சுதந்திரத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட குடியேற்ற விரிவுக்கு பல காரணிகள் உதவியுள்ளன, அவை:

(1) பாராளுமன்ற அரசியல் முறை நடைமுறையிலிருந்தமையினால், இலங்கையின் பெரும்பான்மைக் கிராமிய வாக்காளரது விருப்பத்தை பாராளுமன்றம் கணிக்க வேண்டிய தேவை யேற்பட்டது.

(2) தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்த பெருந்தோட்ட வருமானத்துக்கு ஈடாக விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டியிருந்தது.

(3) பரந்தளவில் நிர்வாக விரிவாக்கம் ஏற்பட்டமை

(4) பரந்தளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட காணிச்சீர்திருந்த, உச்சவரம்புச் சட்டங்களும், நீர்ப்பாசனத் திட்டங்களும்.

(5) அரச நிர்வாகத்தின் கீழ் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், விவசாய முன்னேற்றத் திணைக்களங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய வங்கிகள் என்பன கிராமங்கள் தோறும் ஏற்படுத்தப்பட்டமை.

(6) அரசியல் கட்சிகளின் அமைப்புக்களும், தொழிற்சங்கங்களும், தனிப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிறுவனங்களின் அமைப்புகளும் விஸ்தரிக்கப்பட்டமை

(7) விவசாய ஊக்குவிப்புகள் போதியளவு வழங்கப்பட்டமை.

(8) பரந்தளவில் மேற்கொள்ளப்பட்ட பொதுநல சேவை வசதிகள்.

போன்ற காரணங்களால் குடியேற்றத் திட்டங்கள் விரிவடைய ஏதுவாயின.

இலங்கை சுதந்திரமடைந்தபின் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்தித்திட்டம் என கல்லோயா திட்டத்தைக் குறிப்பிடலாம். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் 1200 சதுரமையில் பரப்பை உள்ளடக்கியதாகவும், அம்பாறை மாவட்டத்தில் 25,000 ஏக்கர் பரப்பைக் கொண்டதாகவும் அமைந்துள்ளதால் இதுவே இலங்கையின் மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னோடி மட்டுமன்றி, இலங்கையின் பாரிய விருத்தித்திட்டமான மகாவலித்திட்டத்திற்கும், ஏனைய வரண்ட பிரதேச அபிவிருத்தித் திட்டத்திற்கும் கல்லோயாத் திட்ட நடைமுறைகளும், வெற்றி தோல்விகளும் வழிகாட்டியாக அமைந்ததெனலாம்.

இத்திட்டம் பல்வேறு நன்மைகளை அளித்த போதும் கூட எதிர்பார்க்கப்பட்ட தேசிய இலக்கினை அடையவில்லை என குறை கூறப்பட்டது. இதற்கான காரணங்களாக அங்கத்தவர் தொகைக் கேற்ப காணி அலகுகள் வழங்கப்படாமை, இரண்டாம் தலைமுறை பற்றிச் சிந்தியாமை, காணியை அடகுவைத்தல், குத்தகைக்கு விற்றமையினால் காணிகளை இழந்தமை, அனுபவமில்லாதவர்களைக் குடியேற்றியமை, முக்கியமாக பெருந்தொகையான சிங்கள மக்களுக்கு காணி வழங்குவதில் முன்னுரிமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிக்கப்பட்டமை, இதனாலேற்பட்ட இனக் கலவரங்கள் போன்ற குறைபாடுகளினால் பாரிய முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயாத் திட்டம் எதிர்பார்த்த இலக்கினை அடையவில்லை.

எனினும் 1960, 1970 ம் ஆண்டுத் தொடர்களில் அரசாங்கங்கள் கிராமியக் குடிசனங்களிடையே வறிய வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் உபாயமாகக் காணிக்குடியேற்றத்தை மேலும் வலியுறுத்தின. இக்காலப் பிரிவில் பதவிக்கு வந்த இரு முன்னணி அரசியற்கட்சிகள் தம் அதிகாரத்தை நிலை நிறுத்தும் ஒரு வழியாகக் காணிக் குடியேற்றக் கொள்கையைக் கருதின 1960 ம் ஆண்டுத் தொடரிலிருந்து. குடியேற்றக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இறக்குமதி மாற்றீட்டின் மீது நெறிப்படுத்தப்பட்டது. உத்தரவாத விலை, கூடிய கடன் வசதி, தரமான நெல்லினம், உரமானியம் முதலியவை அளிக்கப்பட்டு குடியேற்ற விவசாயகள் ஊக்குவிக்கப் பட்டனர். இதற்கேற்ப இலங்கையின் வரலாற்றில் முதன்முதலாக பரந்தளவில் ஏற்படுத்தப்பட்ட நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளும், குடியேற்றங்களின் விரிவாக்கத்திற்கு மேலும் உதவியது, குறிப்பாக 1958 ல் ஏற்படுத்தப்பட்ட நெற்காணிச் சட்டம், 1972, 1975 களில் ஏற்படுத்தப்பட்ட நில உச்சவரம்புச் சட்டங்கள் என்பனவற்றின் மூலம் விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டு, இதன் கீழ் ஏறத்தாழ 9.74,885 ஏக், காணிகள் சுவீகரிக்கப்பட்டு குத்தகைக் குடியானவரிடையே பகிரப்பட்டன.

எவ்வாறாயினும் 1970 தொடக்கம் பொருளாதாரப் பிரச்சினைகள் குடியேற்ற அபிவிருத்திச் சாதனைகளை விட வேகமாக அதிகரிக்கலாயின. குறிப்பாக உணவுப்பிரச்சினை, 1971 ஏப்ரல் கிளர்ச்சி, வரண்ட வலயத்திலேற்பட்ட நீண்டகால வரட்சி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, கடன் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக, அவசர உணவுற்பத்தித் திட்டத்தை செயற்படுத்த வேண்டி, அரசாங்கம் 1972 ல் ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல்படுத்தியது. இத்திட்டத்தில் நீர்ப்பாசன குடியேற்றத்திற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதன் கீழ் மகாவலி, வளவை, லுணுகம்வெகர போன்ற திட்டங்கள் திட்டமிடப்பட்டு விரிவுபடுத்தப்பட்டதுடன் ஏறத்தாழ 3,00,000 ஏக் புது நிலப்பரப்பு அபிவிருத்தி செய்து நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட இருந்தது. எனினும் இவ்வளவு விரிவான நிலப்பரப்பை 4 அல்லது 5 ஆண்டுகளில் அபிவிருத்தி செய்து குடியேற்றத்துக்கும், நெற்செய்கைக்கும் ஏற்றதாகச் செய்யமுடியுமா என்பதே பிரச்சினையாக இருந்தது. 1976ல் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின், மகாவலி அபிவிருத்தித்திட்டம் 6 வருட திட்டக்கால அளவைக் கொண்டதாகத் துரிதப்படுத்தப்பட்டது. இதன் கீழ் 142,000 ஹெக்டேயர் நிலம் நீர்ப்பாசன வசதியுடன் கூடிய பயிர்ச்செய்கை நிலமாக மாற்றமடையும் எனவும், 300,000பேர் நேரடி தொழில் வாய்ப்பினையும், 50,000பேர் மறைமுக தொழில் வாய்ப்பினையும் பெறுவர் எனவும், திட்டத்திற்கான முழுச்செலவாக11பில்லியன் ரூபா செலவாகுமெனவும் மதிப்பிடப்பட்டது. 1985 இறுதிவரை இப்பிரதேசத்தில் மொத்தமாக 47,278 குடும்பங்களே குடியேற்றப்பட்டுள்ளனர். இதிலிருந்து 6வருடங்களுக்குள் பூர்த்தியாக்க வரையறுக்கப்பட்ட திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 10 வருடங்களாகியும் இவற்றின் ஆரம்ப இலக்குகளின் அரைவாசிப் பங்கினையேனும் இன்னமும் அடையவில்லை என்பதனை அதன் முடிந்தளவிலான செயற்பாடுகளிலிருந்து அறிய முடிவதுடன், திட்டமிடப்பட்ட செலவினை விட $3\frac{1}{2}$ மடங்கு (1986 முடிவில் 38.2 பில்லியன் ரூபா) அதிகரித்துள்ளது. இவற்றுடன் கிராமிய வீடமைப்புத்திட்டங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவும் நிலக்குடியேற்ற நடவடிக்கை விரிவடைய மேலும் உதவியுள்ளன.

1935க்கும் 1985க்குமிடையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளின் அளவு அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் 10 மில்லியன் ஏக், காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT
NALLUR,
No

அட்டவணை — 1

அரசாங்கத்தால் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளின் பரப்பளவு 1935 1985

| | ஹெக்டேயர் | ஏக்கர் |
|---|---|---|
| பிரதான குடியேற்றத் திட்டங்கள் | 175,941.31 | 434,751 |
| கிராம விஸ்தரிப்பு | 357,238 76 | 882,737 |
| உயர்நிலக் குடியேற்றத் திட்டங்கள் | 13,564.95 | 33,519 |
| இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் | 7,963 98 | 19,679 |
| அத்துமீறிய குடியேற்றங்களை ஒழுங்குபடுத்தல் | 205,762.03 | 508,438 |
| நடுத்தர வகுப்பினருக்கான ஒதுக்கீடுகள் | 55,018.62 | 135,951 |
| காணிக் கொடைகள் (சிறப்பு ஏற்பாடுகள்) | 9,979.77 | 24,660 |
| மழைநீர் பாசன பண்ணை குடியேற்றத்திட்டங்கள் | 5,363.01 | 13,252 |
| மொத்தம் | 830,832.43 | 2,052,987 |

(மூலம் : பொருளியல் நோக்கு, ஜனவரி 1990)

காணிக் குடியேற்றத்தின் தற்போதைய பிரச்சினைகள் :

கல்லோயாத் திட்டம் அமைக்கப்பட்ட போதும், அதன் பின்னரும் இவ்வளவு பாரிய முதலீடுகளை முடக்கி, இவ்வாறான திட்டங்கள் ஏற்படுத்துதல் நல்ல பலனை அளிக்குமா? என்பது பற்றி விமர்சனங்கள் இடம்பெற்றே வந்துள்ளன. பொருளாதார நோக்கில் இவ்வாறான திட்டங்கள் குறுங் காலத்தில் நட்டத்தையே காட்டின. ஆனால் சமூக நோக்கில் இத்திட்டங்கள் நற்பயன்களை அளித்து வந்துள்ளன.

அத்துடன் பாரிய குடியேற்றத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தியபின், அத் திட்டங்களால் ஏற்படுத்தப்பட்ட சூழலியல் மாற்றங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப் பட வேண்டும். கல்லோயாத்திட்டத்தில் இவ் ஆய்வு மேற்கொள்திப்படாததுடன், இத் திட்டத்தின் பெறுபேறுகள் பற்றிய முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப் படுவதற்கிடையில், மகாவலித்திட்டம் அவசரப் பட்டு ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன், கல்லோயத் திட்டத்தவறுகள் திரும்பவும், மகாவலித் திட்ட நடைமுறையின் போது ஏற்படுமென்று பலர் விமர்சிக்கின்றனர். இன்று மகாவலி குடியேற்றப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டு வரும் பலவீனங்கள், சென்றகாலத்திட்டங்களிற் காணப்பட்ட பாரிய தவறுகளிலிருந்து அவ்வளவாக வேறுபடவில்லையென்பதை காட்டுகின்றன.

எனினும் இலங்கையின் நிலக்குடியேற்ற அபிவிருத்தியினால் குடிசனச் செறிவுமிக்க கிராமப்புறங்கள் பல நன்மையடைந்தன. ஏனைய வளர்முக நாடுகளில் ஏற்பட்டதைப் போல நகர்ப்புறங்களை நோக்கிய குடிப் பெயர்வு இலங்கையில் ஏற்படவில்லை. இதனால் சேரிக் குடியிருப்புகளும் ஏனைய நாடுகளைப் போல இங்கு பல்கிப் பெருகவில்லை எனக் கூறப்படுகிறது. கிராமியக் குடும்பங்கள் கிராமங்களிலேயே தங்கியிருக்கும் நிலை காணப்படுவது நிலக்குடியேற்ற அபிவிருத்தியின் விளைவெனலாம். செழுமைமிக்க விவசாயக் குடிகளை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். ஆயினும் அண்மைய சில சமூக விஞ்ஞான ஆய்வுகளின்படி இக் குடியேற்றப் பிரதேசங்களில் பெரும்பாலானவை வறுமையின் இருப்பிடங்களாக மாறியுள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. சமூக ரீதியில் உரிமைகள் மறுக்கப்பட்ட இடங்களாக இவை காணப்படுகின்றன. அண்மைக்கால நெருக்கடிகளின் போது குழப்பமும், கொந்தளிப்பும் நிலவும் மையங்களாக இக் குடியேற்றப் பிரதேசங்கள் மாற்றம் பெற்றுள்ளன. ஒதுக்கீடு செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட காணிகளில் காணப்படும் குத்தகை உரிமை முறை குடியிருப்பாளரின் இரண்டாம் தலைமுறையினரை வெகுவாகப் பாதித்து வருகின்றது தனியொருவரே காணிக்கு வாரிசு என்ற ஒழுங்கினால் இரண்டாந் தலைமுறையினரிற்பலர் காணிகளற்றவர்கள் ஆக்கப்படுகின்றனர். விவசாயம் தவிர்ந்த ஏனைய தொழில்களில் விலகிச் செல்ல முடியாதகாரணத்தால் இத்திட்டங்களில் வேலையில்லாப் பிரச்சினை ஆரம்பமாகிறது. வழங்கப்பட்ட நிலங்களும் சனஅதிகரிப்புக்கேற்ப ஈடுகொடுப்பதாயில்லை. இத்தகைய தவறுகள் அதன் ஆரம்பகாலங்களிலிருந்து இன்று வரை நிவர்த்தி செய்யப்படாததாகவே காணப்படுகின்றன. எதிர்காலத்தில் இப்பாரிய குடியேற்றத் திட்டங்களின் சமூக, பொருளாதார, பிரச்சினைகளை அறிந்து குறுங்கால, இடைக்கால, நீண்டகாலத் தீர்வுக்கான வழிவகைகளைக் கண்டறிவது அவசியமாகும். குடியேற்றத்திட்டங்கள் எதிர்பார்க்கப்படும் இலக்கினை அடையவேண்டுமெனின் முறைப்படி கடந்தகால குடியேற்றப் பலாபலன்களை ஆராய்ந்து, அவைகளில் விடப்பட்ட தவறுகள் பரிசீலிக்கப்படவேண்டும். முக்கியமாக நிலக்குடியேற்றம் எனும் போர்வையில் இன விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை, இக்குடியேற்றங்கள் சிதைக்கப்பட்டமை எமது கடந்தகால அநுபவங்களாகும். இவ் அநுபவங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் வரையறுக்கப்படும்போது, தவறுகள் நிவர்த்தி செய்யப்படுவதுடன், நிலக்குடியேற்றத் திட்டங்களும் தமது தேசிய பங்களிப்பினை வழங்குமெனஎதிர்பார்க்கலாம்.


References

(1) *Indian Social Institute. "Learning from The Rural poor. New Delhi"*

(2) *Marga publications 'Youth Land Employment' Marga Seminar papers-1.*

(3) *People's Bank Publication "Settlemen Schemes" (Economic Review Sep 19·6, Jan 1990)*

(4) சிவச்சந்திரன், இரா 1974 இலங்கை கிராமிய அபிவிருத்தியில் நிலச் சீர்திருத்தத்தின் தாக்கம்; அகிலம் சமூக அறிவு ஆய்வு வெளியீடு இல, 1. ப 3-4


✲✲

**உள்நோக்கிய செலாவணிக் கொடுப்பனவு**

*வெளிநாடுகளில் இருக்கின்றவர்கள் இலங்கையில் இருக்கும் ஒருவருக்கு அனுப்பும் வெளிநாட்டு நாணயங்கள் உள்நோக்கிய செலாவணிக் கொடுப்பனவாகக் கருதப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலவோட்டத்தில் இந்துமதம்

சி. ராஜசிவா

மதமென்றால் என்ன? என்பதற்கு பலரும் பல விதமான கருத்துக்களைக் கூறினாலும் ஒரு கிரேக்க அறிஞனின் கருத்தானது எமது சிந்தனைக்கு விருந்தாக அமைவதனைக் காணலாம். அவர் கூறினார்: "*Religion is the Experience Inner Soul of the Humau Being*" அதாவது மதமென்றால் அது மனிதனின் உள் ஆத்மாவின் அநுபவமேயாகும் என்பதுதான் பொருள். விஞ்ஞானிகளுக்கெல்லாம் விஞ்ஞானியாக விளங்கியவரும் சார்பியல் கோட்பாட்டின் [*Theory of Relatibity*] தந்தையுமாகிய ஐன்ஸ்ரீன். மதம், கடவுள் பற்றி தனது இறுதிக்காலங்களில் கருத்தினை தெரிவிக்கும் போது 'சமுதாயத்தினது வளர்ச்சிக்கு மதங்களின் பங்களிப்பும் கடவுள் நம்பிக்கையும் இன்றியமையாதவை" என்றார். இந்த வகையிலே மதங்களானவை மனிதனின் வளர்ச்சியிலும் சரி கலை, கலாச்சார நாகரீக வளர்ச்சியிலும் சரி, அதிகமான பங்களிப்பினை வழங்கி வருவதனை நாம் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் மதமானது தனது கொள்கைகளிலும் சரி ஆசார அநுட்டானங்களிலும் சரி மாறிவரும் காலவோட்டத்திற்கு ஏற்றவகையில் மாற்றங்களைச் செய்தல் மிக அவசியமானதாகும். இல்லையாயின் குறிப்பிட்ட மதமானது காலவோட்டத்தின் வேகத்தில் மூழ்கி அழிந்துவிடும். இந்த வகையிலே இந்துமதமானது நடைமுறை வாழ்க்கைக்கு சாத்தியமான அறிவுறுத்தல்களையும் தத்துவங்களையும் கொண்டு விளங்குவதின் காரணமாகவே பல ஆயிரமாண்டுகள் கழிந்தும் சிதைவேதுமின்றி சிரஞ்சிவித்தன்மையுடன் எம்மிடையே உயிர் வாழ்கின்றது.

இந்துமத போதனைகளின் அடித்தளமாக விளங்குவது அன்பு ஆகும். இன்றைய வுலகை எடுத்தாராயும் போது எங்கும்கொலை, கொள்ளை, குத்து, வெட்டு, என்று கோரமான செய்திகளினைத்தான் நம்மால் கேட்கமுடிகின்றது. வளர்ந்துவிட்ட விஞ்ஞானமானது மனிதனை உளரீதியில் போதிய அறிவை புகுத்த தவறிவிட்டதுடன், அவனையும்கூட ஒரு இயந்திரத்தன்மையினை ஒத்தவனாகவே ஆக்கிவிட்டுள்ளது. இதன் காரணமாக மனிதனிடத்தில் அன்பையும், பண்பையும் சீரிய நடத்தையினையும் எதிர்பார்க்க முடியாதுள்ளது. இதன் காரணமாகவே உலகில் பல அகோரமான நிகழ்வுகள் எதுவித கேள்விகளுமின்றி நடந்தேறுகின்றன. இவற்றின் காரணமாகவே இந்துமதமானது மனிதனிடத்தில் பௌதீக விஞ்ஞானத்தின் அறிவோடு ஆத்மீக விஞ்ஞானத்தினையும் வளர்த்தெடுக்க வேண்டுமென பெரும் பிரயத்தனம் எடுப்பதினை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆத்மீக விஞ்ஞானத்தின் அடித்தளமாக விளங்குவது அன்பு. இதன் காரணமாகவே இந்துமதமானது அன்பினைப் போதிப்பதில் அதிக சிரத்தையினை எடுத்துள்ளது.

இத்து மதத்தின் புகழ்வாய்ந்த தத்துவ ஞானிகளாகவும், ஆத்மீகவாதிகளாகவும் விளங்கிய வள்ளுவர், திருமூலர் போன்றோர் தமது அறிவுறுத்தல்களை குறள்களாகவும், பாடல்களாகவும் விடும்போது அன்பிற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதனை சில உதாரணங்களை முன் வைப்பதன் மூலம் விளங்கிக் கொள்ளமுடியும். திருவள்ளுவர் தனது குறளிலே அன்பை பற்றிக் கூறுமிடத்து "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் பிறர்க்கு" என்கின்றார். அதாவது உண்மையான அன்பினை வெளிப்படுத்தி வாழும் ஒரு மனிதனின் எலும்பு கூட அவனுக்கு சொந்தமல்லாது அவன் நேசித்த மக்களுக்கேயுரியது என்கின்றார். வள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் தனது திருமந்திரப் பாடலிலே —

''அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாதலாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே''

என்கின்றார். அன்புதான் இறைவன்; அன்பு வேறு இறைவன் வேறல்ல; பெரும் பக்தி பிரவாகத்துடன் தெய்வத்தை வழிபட்டால் மாத்திரம் நாம் நமது இலட்சியமாகிய வீடு பேற்றினையடைய முடியாது. மனிதனானவன் தன்னைப்போல் பிறவுயிர்களை மதித்து அன்பு செலுத்த வேண்டும். இங்ஙனம் வாழ ஒவ்வொரு மனிதனும் முயற்சிப்பானாயின் இவ்வுலகானது போட்டி பொறாமைகளற்று அமைதியுடனும் சுபீட்சத்துடனும் தன் பாதை வழியே சுழலமுடியும். இந்த உண்மைதனை இன்னமும் நம்முலகானது உணர்ந்துகொள்ளமையின் விளைவாகவே எங்கும் பிணக்குகளும் பூசல்களும் நிறைந்து போர் மேகங்கள் சூழ்ந்து எதிர்காலத்தினையே நினைக்க முடியாமல் ஒரு சூனிய நிலைக்குத் தள்ளப்பட்டுக் காணப்படுகின்றது.

மனிதனானவன் ஒரு சமுதாயப் பிராணி என்பார்கள் மனோதத்துவவியலறிஞர்கள். அவனது வாழ்க்கைச் சக்கமானது சமுதாயமென்னும் பாதை வழியே பயணம் செய்கின்றது. இப்பாதையானது குன்றும் குழியுமாகவும், முட்புதர்களினால் மூடப்பட்டதாகவும், கொடிய பிராணிகளின் அச்சுறுத்தல்களுக்உட்பட்டதாகவும் காணப்படுமேயாயின் நிச்சயமாக வாழ்க்கை என்னும் வண்டிதனை வெற்றிகாமாகச் செலுத்த முடியாரிதென்பது தெரிந்த விடயம். இங்கே சமுதாயமென்னும் பாதையினை சிதைக்கும் சைத்தானாக விளங்குவது ஒழுக்கச் சீர்கேடுகள் தவிர வேறேதுமில்லை. ஓர் சமுதாயத்திலே ஒழுக்கமானது அதனை திறம்படவியக்கும் இதயத்திற்கு சமமானது. சமுதாயத்தின் இதயம் ஒழுக்கமாகும் இந்த ஒழுக்கமானது மீறத்திடப்படுமேயாயின் சமுதாயமானது சிதறத்தலைப்படும் இதன் காரணமாகவேதான் ஒழுக்கத்திற்கு இந்து மதமானது உயிரினும் மேலான ஒரிடத்தை வழங்கத் தலைப்படுகின்றது.

வள்ளுவன் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தினை ஆராயும்போது ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுகக்க உயிரினும் ஒப்படும்'' என்கின்றார். வாழ்க்கையிலே மனிதனானவன் பல ஒழுக்கக்கட்டுப்பாடுகளுக்கு பணிந்து நடக்க வேண்டுமென இந்துமதமானது நிபந்தனையினை விதிக்கின்றது. வாய்மைதவறேல் பொருள் களவு கொள்ளேல் பிறர்மனை நயலாமை, புறம்கூறாமை, கொல்லாமை என்று பல ஒழுக்கக்கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. அப்படி விதிக்கும்போது, நீ அப்படிச் செய்யாதே, இப்படிச் செய்யாதே என்று வெறுமனே கட்டளையிட்டு மனிதனை மிரட்டாமல் அவனை நெருங்கிநின்று கற்பிக்கும் ஆசானைப்போல், நீ இன்னது செய்தால் இன்னது நடக்கும் நீ நன்மையான காரியங்களை புரிந்து வருவாயேயாயின் எத்தனை காலம் கடந்தாலும் அதன் நற்பயன்களை அநுபவிப்பாய் அதேபோல் நீ தீய காரியங்கள் புரிந்து வருவாயேயாயின் எவ்வளவு காலம் கடந்தாலும் அதன் கொடுமையினை அநுபவித்தே தீருவாய் என்கின்றது. இதனைத்தான் நியூட்டன். ''Euery Action has A reaction'' என்றார். அதாவது விஞ்ஞானக் கோட்பாட்டிற்கு உள்ளமைந்த விதிகளின்படி ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எதிரும் சமமுமான இன்னுமொரு நடவடிக்கையுடென்பதுதான் இதன் விளக்கம் எனவே ஒருவன் தான் செய்த செய்கின்ற கருமங்களின் பலனை (நன்மையானதோ அன்றில் தீமையானதோ) நிச்சயமாக அநுபவித்தே தீர வேண்டுமென் இந்து மதத்தின் கொள்கை.

இந்துமதம் என்றதும் எமது கண்முன் தோன்றுவது விக்கிர வழிபாடும் அது சம்பந்தமான ஆராதனைகளுமே ஆகும். அவ்வளவு தூரம் இந்துமதத்திலே விக்கிரக ஆராதனையானது ஒரு சிறப்பான இடத்தில் வைத்து நோக்கப்படுகின்றது ஒருசிலர் ''இறைவன் எம் பொறிபுலன்களுக்கு அப்பாற்பட்டவனுவான்; அவனை நீவிர் உருகிப்போன உலோகங்களிலும் உடைக்கப்பட்ட பாறைகளிலும் வாழ்கின்றான் எனக் கூறி, ஏன் அவனை கீழ்மைப்படுத்தி இழிவு செய்கின்றீரென வினவக்கூடும். அவர்களுக்கு விடையாக அமைவது என்னவெனில், உலகில் தத்துவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களுக்கும் அது சம்பந்தமான விசாரணைகளுக்கும் புகழ்பெற்றவர்கள் கிரேக்கர்களாகும். இந்த கிரேக்கர்கள் கூட இந்து மதத்தினரைப் போல் சிற்பங்களை சிறப்புற கற்களிலும், உலோகங்களிலும் வடித்து அவற்றிற்கு தெய்வப் பெயர்களினையிட்டு வழிபாடாற்றியுள்ளனர். இங்கே உண்மையான தத்துவம் என்னவெனில் ஒரு பொருளின் கண் எம்மனதினை ஒரு முனைப்படுத்தி (Concentrate) வழிபடுவோமாயின் எமது மனமும் சிந்தனைகளும் தெளிவடைவதோடு நடத்தையிலே நன்மாற்றங்களும் உருவாகும் என்பது இன்றைய விஞ்ஞான ஆராய்சிகளின் முடிவாகும்.

மேலும் இதுபற்றி கூறும்போது, எமது தூய ஒருமித்த மனச்சாட்சிகளின் வழியே உருவாகும் தெய்வீக சக்தியானது அந்த விக்கிரகங்களில் சென்றுபடிகின்றது. இது பின்பு அந்த விக்கிரகத்தினையே சக்தியுள்ளதாக்கி விடுகின்றது. இதன் காரணமாகவேதான் கோவில்கள் அமைக்கப்பட்டு அங்கே விக்கிரகங்கள் நிறுவப்பட்டு, அதற்கு தினமும் பூசைகளும் ஆராதனைகளும் மேற்கொள்ளப்பட்டு அழகழகாக அலங்கரிக்கப்பட்டு வீதி வலம் எடுத்து வரப்பட்டன, இறைவன் எம் பொறிபுலன்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதும், அது சம்பந்தமான தத்துவ விளக்கங்களும் படித்த பண்டிதருக்குத்தான் இலகுவில் புரியும் ஆனால் படிக்காத கல்வியறிவு குறைந்த ஒரு பாமரனைப்பொறுத்தவரை இந்த விக்கிரக ஆராதனையானது இறைவன் என்றும் எனக்கருகேயுள்ளான் என்று நினைத்து மனத்தினை அமைதிப்படுத்தவும் தனது துன்பங்களையெல்லாம் சொல்லியழவும் எவ்வளவு துணையாகின்றது. இதனைவிடுத்து விக்கிரக ஆராதனையானது தேவையற்றதெனக் கூறினால் அது என்றும் ஏற்றுக்கொள்ளமுடியாத வாதமாகும்.

இந்துமதக் கொள்கைகளுக்குள் புலாலுண்ணாமை என்பதும் ஓர் சிறந்த கொள்கையாகும். இதனை இந்துமதம் கூடியபட்சம் விலக்கவேண்டுமென்றே பணிக்கின்றது. இதனை ஒருபக்கமாக நின்று ஆராயும்போது கொல்லாமையென்கின்ற ஓர் உயர்ந்த அகிம்சைக் கொள்கையின் பிரதிபலிப்பாக அமைகின்றது. ஆனால் இதனை விஞ்ஞான ரீதியில் நின்று ஆராயும்போது மனிதனது சமிபாட்டுத் தொகுதியானது குரங்கினது சமிபாட்டுத் தொகுதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றது. குரங்கானது சுத்த சைவப்பிராணியாகும் இதனை மீறி அது புலாலுணவைப் புசித்தால் அது உடல்ரீதியாக பலபாதிப்புக்களை ஏற்கவேண்டியிருக்குமென விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள். ஆனால் மனிதனானவன் அதே சமிபாட்டுத்தொகுதிகளை ஒத்தவனாகக் காணப்பட்டாலும் அவன் மாமிச உணவை வேண்டியளவில் புசிப்பவனாகக் காணப்படுகின்றான். இது ஆரம்பத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்திவிட்டாலும் நீடித்த காலப் போக்கில் இதனால் உடல் உளரீதியாக பெரும் தொல்லைகளை மனிதன் அநுபவிக்க நேரிடுமென உடற்கூற்று விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள். அத்துடன் இறந்த விலங்கினது இறைச்சிதனை உண்பது ஒரு காட்டு மிராண்டித்தனமான செயலாக காணப்படுவதோடு நோய்கள் பரப்புவதற்கும் இது ஏதுவாகுமென்பதை அறிய முடிகின்றது.

சுவரிருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பார்கள் அதே போல்தான் இறைவன் எமக்களித்த ஐம்பூதங்களினாலுமான இவ்வுடலில்லாத பட்சத்தில் ஆத்மாவானது தனது இலக்காகிய முத்தியினை அடையமுடியாது. ஆத்மாவின் சிந்தனைகளையும் செயலூக்கங்களையும் இவ்வுடல்தான் வெளிக்கொணர்கின்றது. இத்தகைய சிறப்புடைய உடலினை நாம் பேணிப்பாதுகாத்தல் மிகமுக்கியமானதாகும் இதனால் தான் மேலைத்தேசங்களில் இவ்வுடலினைப் பேணிப்பாதுகாப்பதற்காக பலவிதமான உடற்பயிற்சி முறைகளையும் மனிதனை ஒரு வழிப்படுத்தும் தியானப்பயிற்சி முறைகளையும் மக்களுக்குப் புகட்டுவதில் அண்மைக் காலத்தில் பெருமுயற்சியெடுப்பதனைக் காண முடிகின்றது. ஆனால் இந்துமதமோ இதில் எப்போதோ தனக்குரிய இடத்தினை எடுத்துவிட்டது. இன்று யோகாசனக் கலையென்னும் அற்புதமான கலையானது மேலைநாட்டவர்களால் கூடப்பயிற்சி செய்யப்பட்டு அதனை மக்கள் மத்தியில் பரவுவதற்கும் பெருமுயற்சியெடுக்கப்படுவதினை காணமுடிகின்றது. குறிப்பாக சோவியத் ரஷ்யா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா போன்ற வல்லரசுகள் கூட இதில் பெரும் கவனம் செலுத்துவதனைக் காணமுடிகின்றது. யோகசானக் கலைதனில் சொல்லப்படும் சகல ஆசனங்களையும் ஒருவன் முறைப்படி தினமும் சாதகம் செய்து வருவானேயாயின் வச்சிரம் போன்ற உடலினையும் தெளிவான சிந்தனைப்போக்கினையும் கைவரக் பெற்றவனாவான் இன்றைய உடற் கூற்றியலறிஞர்கள் இது பற்றி ஆராய்ந்து தமது முடிவுகளை வெளியிடும் போது, ஒவ்வொரு ஆசனங்களையும் முறைப்படி செய்யும்போது இதயமானது சீராகத் தொழிற்பட்டு குருதியானது புதுவேகத்துடன் உடலினுள் பாய்வதாகவும் சமிபாட்டுக்கும் இன ஆளுமைக்கும் தேவையான ஒமோன்கள் சீராக சுரக்கின்றன எனவும் இவற்றின் காரணமாகவே சாதகம் செய்பவனின் உடலில் வனப்பும் வலிமையும் காணப்படுவதாகவும் கூறியுள்ளார்கள்.

இன்றையவுலகிலே வாழும் மக்கள் தமக்குள்ளே மதரீதியான பிரச்சினைகளை கிளப்பி மதச்சண்டைகளில் ஈடுபடுவதனை காணுகின்றோம். இதற்கு மறைமுகமாக அரசியற்சந்தர்ப்பவாதம் துணை நின்றாலும்கூட மனிதனின் சிந்தப்னை போக்கானது ஒரு வரையறைக்குட்பட்டிருப்பதனை காரணமாகவேதான் இத்தகைய மதவெறிச் சண்டைகள் உருவாகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஒருசிலர் தமது மதத்தை வாழவைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக எதையும் செய்யத்துணிந்துவிடுகின்றார்கள். மதங்களால்தான் மக்கள் மத்தியிலே சிறந்த ஒழுக்கக்கட்டுப்பாடுகளையும் சிந்தனைகளையும் வளர்க்க முடியும். ஆனால் இன்று நடப்பதென்ன ஒவ்வொருவனும் தனது மதத்தினை வாழவைக்க வேண்டும். தனது கடவுள்தான் ஒழுக்கமானவர், இதனை எப்படியும் நிருபிக்க வேண்டும் நிலைநாட்ட வேண்டும். என்பதில்தான் அதிக அக்கறையினையும் கவனத்தையும் செலுத்துகின்றானே தவிர மதத்தில் சொல்லப்படும் கருத்துக்களை உணர்ந்து அதன்படி செயலாற்ற முயற்சிப்பதனைக் காண முடியாதுள்ளது.

எனவே இக்கட்டத்தில் நாம் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். மதங்கள் பலவாக காணப்பட்டாலும் அவற்றின் முடிவுகள் ஒன்றாகவேயுள்ளன இந்து மதமானது எக்காலத்திலும் மதவெறிக்கு வித்திட்டதில்லை. தனது கொள்கைகளையும் விளக்கங்களையும் பரிசீலனைக்கு விடவும் அது தயங்கவில்லை. எந்த விமர்சனங்களையும் சரி அது ஏற்கப் பயப்படவில்லை. தனது கொள்கைகளையும் தத்துவங்களையும் தர்க்கரீதியான முறையிலே ஆராய்ந்து தருகின்றது. முதலில் மனிதனை மனிதனாக வாழவைத்து அதனின்று அவனுக்கு தெய்வ சங்கல்பத்தையூட்டி அவனையே தெய்வமாக்கும் ஓர் அரிய செயற்பாட்டினை செய்து மதங்களுக்குள் ஓர் உன்னதமான ஸ்தானத்தை பெற்று பல நூற்றாண்டுகள் கடந்தும் புதுப்பொலிவுடன் மெருகும் பெற்று மக்கள் மத்தியிலே உயிர்வாழ்கின்றது.

மேலைத்தேசத்து தத்துவ பேராசிரியர்களும் சரி கிழைத்தேய தத்துவஞானிகளும் சரி இந்துமதத்தின் பெருந்தன்மையினை விளக்கும் போது ''எல்லா மதங்களையும் அதன் தத்துவங்களையும் ஏற்றுக்கொண்டு விளங்கும் ஒரே மதம் இந்து மதமேயாகும்' என்று கூறும்போது இந்துமதத்திற்கு அதுவோர் பெருமைதரக்கூடிய விடயமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**School of Business**

ADMINISTRATION

*For: C. I. M. A, I. A. B.*
*Computer Programming*
*Shorthand & Typing Classes.*

*No. 16, 3rd Cross Street,*
*JAFFNA.*

**SIVANATHAN'S**

பட்டுப்புடவைகளையும் றெடிமேற்
ஸ்கேட் பிளவுஸ் வகைகளையும்
ஆடவர் சேட்டிங் சூட்டிங் மற்றும்
சாறிவகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

No. 159, New Market,
JAFFNA.

**BHARAT STUDIO**

*No. 82/1, Kasturiyar Road,*
*JAFFNA.*

**NATHAN'S**

FANCY GOODS
FOOTWEAR &
EVER SILVER

MODEL MARKET,
JAFFNA.
Phone:- 23540


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு தொண்டு செய்ய ஏற்பட்டதே தவிர சுயநலத்திற்காக அல்ல.


# SEHAAR JEWLLERS

நவீன வேலைப்பாடுள்ள அசல் 22 கரட் தங்க நகைகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளவும் உங்கள் எண்ணுக்கேற்ப நவரத்தினக் கற்களை தெரிவு செய்து கொள்ளவும் நீங்கள் தவருது நாடவேண்டிய சிறந்த தாபனம்.

## சேகர் ஜுவலர்ஸ்

264, கே. கே எஸ். வீதி,
வண்ணை சிவன் கோவிலுக்கு முன்பாக,
யாழ்ப்பாணம்.

---

# தையல் உலகின் நவீன முன்னேடிகள்




உரிமையாளர்:

**B. உவைஸ்**

இல. 2, நவீன சந்தை மேல் மாடி
(மக்கள் வங்கி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதையும் புலன்களையும் அடக்கி ஆளுவதே வீரம். நீர் ஒரு வீரனாக இரும்.


# ஸ்ரீ லங்கா புத்தக சாலை

O பாடசாலை அப்பியாசப் புத்தகங்களையும் மற்றும் பாடசாலை உபகரணங்களையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

*With Best Compliments*
*From*

# ECALOM

● *A/L* கலை, வர்த்தக வகுப்புக்கள் நடை பெறுகின்றன.

நாவலர் வீதி,
மனோகரா சந்தி அருகாமை,
யாழ்ப்பாணம்.

# MURSHITHA TRADES

கல்யாண பெண்களை அலங்கரிக்கும் தலை நகை செட் வாடகைக்கு கொடுக்கப்படும்.

No 75, Grand Bazaar,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAJAH TRADE CENTRE**

*Genral Merchants*
*Dealers in Aluminium*
*Eversilver Plastic*
*Enamel & Glasses.*

29, STANLEY ROAD,
JAFFNA.

**YARL AGENCY**

*Wholesale &*
*Retail Merchants*
*in Textiles*
*& Fancy Goods.*

27, NEW MARKET,
UPPER FLOOR,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## K. R. SIVALOGANATHAN & CO.

*Dealers in:* RICE MILL MACHINERIES,
CROMPTON, GREAVES, ELECTRIC, MOTORS
MENSTARTERS & OTHER ACCESSORIES.

***No. 6, Stanley Road,***
***Jaffna.***

## சிற்றிசன்

கட்டிட நிர்மாணத்துறைப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே தாபனம்.

(போல்ட் நட், பிளாஸ்டிக் பொருட்கள், மரப்பாது காப்பி, தீந்தை வகைகள், கிருமிநாசினி C. I. C.)

**138, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org